www.padippakam.com

**தொழிலாளர் பாதை** 2:-

● மாதமிரு இதழ் — 419 ● 1992 மே 18 திங்கட்கிழமை

தொழிலாளர் பாதை

பின்வரும் இதழ்களிலிருந்து தொகுக்கப்பட்ட கட்டுரைகள்

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் - இலங்கை —— இதழ் 417, மார்ச் 9, 92. இதழ் 418. ஏப்ரல் 9, 92. இதழ் 419. மே 18, 92

சோசலிசத் தொழிலாளர் கழகம் - இந்தியா - இதழ் 46. ஏப்ரல் 92.

தொகுப்புப் பிரதி இல. 4 ஜூன், 1992

## புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக 1992 மே தினச் செய்தி:

# ஏகாதிபத்திய யுத்த ஆத்திரமூட்டலை நிறுத்து! சோசலிசப் புரட்சியை நோக்கி முன்னேறு!

ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் உள்ளிருந்து தோன்றிய 'கொம்பிரதோர்' முதலாளி கும்பல்களினால் கடந்த வருட இறுதியில் சோவியத் யூனியன் உடைத்தெறியப்பட்டதன் மூலம் வெளிப்பட்ட ஆபத்து எச்சரிக்கையினைத் தீர்க்கமானதாகக் கொள்ள வேண்டும் எனவும் உலகம் பூராவும் உள்ள சகல அதிகாரத்துவங்களையும் தூக்கிவீசி, சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியான நான்காம் அகிலத்தினை புரட்சித் தலைமையாகக் கட்டி எழுப்பக்கிளர்ந்து எழ வேண்டும் எனவும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இந்த மே தினத்தில் தொழிலாள வர்க்கத்தையும் ஒடுக்கப்படும் மக்களையும் வேண்டுகின்றது. இலங்கையிலும், ஈழத்திலும் இந்தியத் துணைக் கண்டத்திலும் உலகம் பூராவும் மக்கள் ஏகாதிபத்தியத்தினை பூகோளத்தில் இருந்து துடைத்துக் கட்டும் இம்முன்னோடி நிலைமையில் தொழிலாள ஒடுக்கப்படும் மக்களை இப்பணிக்கு அணிதிரட்டுவது நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவே.

1917 அக்டோபர் புரட்சியின் வெற்றியின் பெறுபேறாகக் கட்டியெழுப்பப்பட்ட சோவியத் சோசலிசக் குடியரசானது 1848ல் கம்யூனிஸ்ட் அறிக்கை வெளியானதில் இருந்து பல தசாப்தங்கள் உலகத் தொழிலாள வர்க்கத்தினுள் நிலைநாட்டப்பட்ட மார்க்சிச அரசியல் இயக்கத்தின் உச்சக் கட்டமாகும். மார்க்சிச முன்நோக்கினை யதார்த்தமாக்கிய அந்த வெற்றிக்கான தலைமையை தொழிலாள வர்க்க அனைத்துலகவாதத்தின் அடிப்படையில் போராடிய போல்ஷிவிக் கட்சி வழங்கியது. 1920பதுகளின் நடுப்பகுதியில் சோவியத் யூனியனுள் தலைநீட்டிய மார்க்சிச விரோத ஸ்டாலினிச அதிகாரத்துவம் உலகத் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகளையும் தேசிய விடுதலைப் போராட்டங்களையும் காட்டிக் கொடுத்து, ''தனிநாட்டில் சோசலிசம்'' என்ற கோட்பாட்டின் அடிப்படையில் சோவியத் யூனியனைத் தனிமைப்படுத்தியது. மார்க்சிச அரசியல் கலாச்சாரத்தினை உலகளாவிய ரீதியில் தனிமைப்படுத்தும் பொருட்டு தொடர்ந்து நடாத்தி வந்த ஒரு தொகை தாக்குதலின் முடிவில் இன்று சோவியத் யூனியன் சிதறடிக்கப்பட்டதோடு அப்பிராந்தியம் ஏகாதிபத்திய முதலீட்டாளர்களின் பகற்கொள்ளைக்குத் திறந்துவிடப்பட்டுள்ளது. இது ஸ்டாலினிஸ்டுகளதும் அவ்வாறே சமூக ஜனநாயகவாதிகளதும், தேசியவாத சந்தர்ப்பவாதிகளதும் நீண்டகாலக் காட்டிக்கொடுப்பு வேலைத்திட்டத்தின் முடிவினைச் சுட்டிக் காட்டுகின்றது.

கிழக்கு ஐரோப்பாவில் ஸ்டாலினிச அதிகாரத்துவம் வீழ்ச்சி கண்டமையும், சோவியத் யூனியனுள் ஸ்டாலினிச ஆட்சி வீழ்ச்சி கண்டமையும், சீனா, வியட்னாம், கம்போடியா போன்ற நாடுகளில் ஸ்டாலினிச அதிகாரத்துவம் ஏகாதிபத்தியச் சார்பு கொம்பிரதோர் கும்பல்களாக பரிணாமம் அடைந்துள்ளமையும் 1924 தொடக்கம் 'தனிநாட்டில் சோசலிசம்' என்ற மார்க்சிச விரோத பிற்போக்குத் தேசியவாத வேலைத் திட்டத்துக்கு எதிராக ட்ரொட்ஸ்கிச இயக்கம் உலகம் பூராவும் மேற்கொண்ட சமரசம் அற்ற போராட்டத்தின் வரலாற்றுச் செல்லுபடியான தன்மைக்குப் பலம் வாய்ந்த ஒரு சாட்சியாகும். ஏகாதிபத்தியச் சகாப்தத்தில் சோவியத் யூனியனதும் அதன் தேசியமயமாக்கப்பட்ட சொத்து முறை உட்பட அக்டோபர் புரட்சியின் வெற்றியும் அவ்வாறே உலகின் எந்தவொரு பாகத்திலும் சரி தொழிலாளி, ஒடுக்கப்படும் மக்களின் வரலாற்றுத் தேவைகளை உலகச் சோசலிசப் புரட்சி வேலைத் திட்டத்தின் அடிப்படையில் போராடுவதன் மூலம் மட்டுமே பாதுகாக்கவும், நிறைவேற்றி வைக்கவும் முடியும். இதை நிலைநாட்டிய நான்காம் அகிலத்தின் முன்னோக்கின் விஞ்ஞான ரீதியிலான பிழையற்ற தன்மை இன்று முன்னொருபோதும் இல்லாத விதத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

### ஏகாதிபத்திய முரண்பாடுகளின் உக்கிரம்

கிழக்கு ஐரோப்பாவும் பழைய சோவியத் யூனியனும் ஸ்டாலினிச அதிகாரத்துவங்களினால் ஏகாதிபத்தியவாதிகளின் பிடிக்குள் கொணரப்பட்டமையானது எந்த விதத்திலும் ஏகாதிபத்திய உலக நெருக்கடிக்கான ஒரு தீர்வாகிவிடாது. அதற்குப் பதிலாக ஸ்டாலினிச அதிகாரத்துவங்களின் வீழ்ச்சியோடு ஏகாதிபத்திய அமைப்புக்கு எதிரான முரண்பாடுகள் பொருளாதார ரீதியிலும் அத்தோடு அரசியல் ரீதியிலும் உக்கிரம் கண்டுள்ளதை இன்று காணக் கூடியதாக உள்ளது.

(அ) ஏகாதிபத்திய நாடுகளினுள் இதுவரை காலமும் வெளிப்பாடாகி வந்த அரசியல், பொருளாதார ஸ்திரப்பாட்டினை உடைத்தெறிவதற்கு அது காரணியாகியுள்ளது; சிறப்பாக கிழக்கு ஜேர்மனியாக இருந்து வந்த பிராந்தியத்தினை இழுத்துக் கொண்டதன் பின்னர் ஏகாதிபத்திய ஜேர்மனியில் பொருளாதார, நிதி நடவடிக்கைகள் குழம்பிப் போய்க் கிடப்பதோடு, அதிலிருந்து தோன்றும் பிரமாண்டமான போராட்டங்களில் தொழிலாளி வர்க்கம் இலட்சோப லட்சங்களில்குதிப்பதுஇதற்கு நல்ல சாட்சி.

(ஆ) ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் கீழ் இருந்து வந்த நாடுகளில் வளங்களைக் கொள்ளையடிக்கும் பொருட்டு ஏகாதிபத்தியவாதிகளுக்கு இடையேயான போட்டியும் மோதுதலும் உக்கிரம் கண்டுள்ளது: இலாப உழைப்பையும் வளங்களையும் சுருட்டிக் கொள்வதில் ஈடுபட்டுள்ள ஏகாதிபத்திய வல்லரசுகள் ஒருவரோடு ஒருவர் சண்டையிடுவதோடு ஸ்டாலினிச அதிகாரத்துவங்களில் இருந்து தோன்றிய கொம்பிரதோர் 'மாபியா' கும்பல்களுடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டுள்ளனர். இதன்மூலம் தத்தமது காலனிகளை அமைத்துக் கொண்டு, தமது ஏகாதிபத்தியப் போட்டியாளர்களைத் தாண்டிப் பாய்வதே திட்டம். இந்த காலனித்துவ வேலைத்திட்டம் ஏகாதிபத்தியங்களுக்கு இடையேயான யுத்தங்களுக்கு வழி சமைக்கிறது.

(இ) ஏற்கனவே யூகோசலவியாவிலும் சமீபத்தில் ஆப்கானிஸ்தானத்திலும் இடம் பெற்றுள்ளது போல் ஸ்டாலினிச அதிகாரத்துவ ஆட்சிகள் நிலவிய நாடுகளில் தோன்றியுள்ள 'கொம்பிரதோர்' கும்பல்கள் இன, மத பேதங்களைத் தூண்டுவதன் மூலம் அப்பிராந்தியங்களில் உள்நாட்டுக் கலகத்துக்கான தீச்சுவாலையை மூட்டி வருகின்றன: இந்த யுத்த மோதுதல்கள் எந்த விதமான பொருளாதார, அரசியல் உறுதிப்பாட்டுக்கும் இடமளிக்காமல் அந்நாடுகளில் தொழிலாள-ஒடுக்கப்படும் மக்களை தாழியில் இருந்து அடுப்புக்குள் வீழ்ந்த நிலைமையைச் சிருஷ்டித்துள்ளது. ஏகாதிபத்தியச் சார்பு கொம்பிரதோர் கும்பல்கள் தத்தமது சலுகைகளையும் இலாப மூட்டைகளையும் பேணிக் கொள்ள நடாத்தும் இரத்தம் தோய்ந்த கொடுக்கல் வாங்கல்களில் பொதுமக்கள் சிறைப்பிடிக்கப்படுகின்றார்கள்.

(ஈ) சோவியத் யூனியன் சிதறடிக்கப்பட்டு கலைக்கப்பட்டதன் பின்னர் அப்பிராந்தியத் தொழிலாளர்கள் நிச்சயமாக முகம் கொடுத்த பின்னடைவின் அர்த்தம், ஏகாதிபத்தியவாதிகளின் அல்லது கொம்பிரதோர் முதலாளிகளின் காலனித்துவ வேலைத்திட்டங்களுக்குச் சமாதானமாக வெற்றி கிட்டிவிடும் என்பதாகாது: பழைய சோவியத் யூனியனுள் மட்டுமன்றி அனைத்துலக ரீதியிலும் அரசியல் நிலைமையில் ஸ்திரமின்மை தினமும் உக்கிரமாகியது. இது தொழிலாள- ஒடுக்கப்படும் மக்களின் பிரமாண்டமான புரட்சிகரத் தலையீடுகளுக்கான பின்னணியை தயார் செய்கின்றது. எது விதத்திலும் புறக்கணித்து விட முடியாத-சின்னஞ் சிறிது இல்லாத அளவிலான ஒரு தொகை வர்க்கப் போராட்டங்கள் ஏற்கனவே பழைய சோவியத் யூனியனிலும் அனைத்துலக ரீதியிலும் வெடித்துள்ளன.

இந்த வெடித்துச் சிதறும் தன்மை கொண்ட முரண்பாடுகள் ஏகாதிபத்திய அமைப்பினுள் உலக யுத்தத்தினாலேயே தீர்க்கப்படும். மனித இனத்தின் பாதுகாப்புக்கும் முன்னேற்றத்துக்குமான பதிலீடு உலகச் சோசலிசப் புரட்சியே.

ஈராக்குக்கு எதிரான மக்கட் படுகொலை ஆக்கிரமிப்பு இடம் பெற்று பன்னிரண்டு மாதங்கள் கழிந்ததும் ஏகாதிபத்தியவாதிகள் மீண்டும் இலட்சோப லட்சம் மக்களை பலியெடுக்கும் பொருட்டு அரைக்காலனித்துவ நாடான லிபியாவுக்கு எதிரான ஆக்கிரமிப்பு மிரட்டலில் குதித்துள்ளனர். இம்முறையும் இராணுவ முன்னோடியாக ஆத்திரமூட்டும் தடைகளை விதிப்பதற்கு ஏகாதிபத்தியக் கள்வர் குகையான ஐக்கிய நாடுகள் சபையின் முடுதிரையையே பயன்படுத்திக் கொண்டுள்ளன.

இச் சம்பவங்கள் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்

9 -ம் பக்கம் பார்க்க)

## வடக்கு — கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று!

படிப்பகம்

www.padippakam.com



# இலங்கையில் புதிய அரசியல் குற்றத்திற்கு தயார் செய்கிருர் மெண்டெல்

(அமெரிக்க டிராட்ஸ்கிசப் பத்திரிகையான புல்லட்டின் பிப். 21, 1992 இதழில் வெளிவந்த தலையங்கம்)

குற்றவாளி எப்போதும் அவன் குற்றஅரங்குக்கே திரும்புவான் என்று ஒரு முதுமொழி உண்டு. 1964-ல் லங்கா சமசமாஜக் கட்சியின் சந்தர்ப்பவாதத் தலைமைகள் முதலாளித்துவ அரசாங்கத்தினுள் நுழைந்தது. அப்போது பப்லோவாத ஐக்கிய செயலாளர் குழுமத்தின் இலங்கைப் பகுதியாக இருந்த இக்கட்சி கூட்டரசாங்கத்தில் நுழைந் தன் மூலம் இலங்கையில் தொழிலாள வர்க்கம் பெரும் துன்பங்களுக்கு ஆளானது அந்த வகையில் எர்னஸ்ட்மெண்டெல்இந்தப் பேரழிவினை உண்டு பண்ணிய சிற்பியாவார். இப்பொழுது மெண்டெல் இலங்கைத் தொழிலாளர்களைக் காட்டிக் கொடுக்க புதிய ஏஜண்டைக் கண்டுபிடித்திருக்கிருர். அது குட்டி முதலாளித்துவ நவசமசமாஜ கட்சி (NSSP)ஆகும். மெண்டெலின் பத்திரிகையான 'இண்டர் நேஷனல் வியூ பாய்ண்ட்' ந ச. ச. க. வின் சமீபத்திய மாநாடு அதனை ஐக்கிய செயலாளர் குழுமத்தில் இணைத்துக் கொள்ள வாக்களித்ததாக முழங்கியது.

எர்னஸ்ட் மெண்டெல் தன்னை எந்த இயக்கத்துடனாவது இணைத்துக் கொள்கிருர் என்ருல்அது பற்றி தொழிலாளவர்க்கம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும், இலங்கையில் அவரது கடந்த கால பாத்திரம் என்னவென்ருல் லங்கா சமசமாஜக் கட்சியின் அரசியல் சீரழிவுக்கு அரசியல் முகமூடி கொடுத்ததுதான். ல.ச.ச.க. 1942ல் நான்காம் அகிலத்துடன் ஐக்கியம் கொண்டிருந்த, இலங்கைத்தொழிலாள வர்க்கத்தின் முதலாவது புரட்சிகரக் கட்சியாகும் இது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கும் தேசிய முதலாளிகளுக்கும் எதிராக தொழிலாள வர்க்கத்தின் போராட்டத்திற்கு தலைமை வகித்ததுடன், பலலட்சக்கணக்கான தொழிலாளர்கள், விவசாயிகளின் ஆதரவையும் வென்றெடுத்தது. 1950 கள் முழுமையிலும் ல.ச.ச.க, (LSSP) அரசியல் ரீதியாக சீரழிந்ததுடன், 1964-ல் சிறிமாவோ முதலாளித்துவக் கூட்டரசாங்கத்தில் நுழைந்த பொழுது, சீரழிவின் உச்சக் கட்டமாக பெரும் காட்டிக் கொடுப்பைச் செய்தது. 1953 லிருந்து 1964 வரை, மெண்டெலும் பப்லோவாதிகளின் இண்டர் நேஷனலும் ல.ச.ச. (LSSP) வுக்குள் வளர்ந்து வந்த சந்தர்ப்பவாதக் கொள்கையை திட்டமிட்டு மூடி மறைத்ததுடன், பண்டார நாயக்காவின் சிறிலங்கா சுதந்திரக்கட்சி போன்ற முதலாளித்துவ சக்திகளுக்கு ஆதரவளிக்கும் LSSP-ன் பிற்போக்குக்கொள்கைக்கும் கூட அனுமதி அளித்தன. 1960-ல் அவர்கள் ல.ச.ச.க. கட்சியின் ஊழியர்களுக்கு இவ்வாறு எழுதினர்கள்: ''காலனித்துவ அல்லது அரைக்காலனித்துவ நாட்டில் (குட்டி முதலாளிய அல்லது முதலாளிய இயக்கமாயினும்) தொழிலாள வர்க்க மல்லாத அரசாங்கத்திற்கு, புரட்சிகர கட்சியானது விமர்சன ஆதரவை வழங்குவதை நாங்கள் ஏற்றுக்கொள்கிரோம்'' என்று.

ல.ச.ச. கட்சி முதலாளித்துவ அரசாங்கத்துடன் சேர்ந்த வேளை, அதுபற்றிய ஆய்வெதனையும் நசுக்கி வெறு பூட்டும் பிளவுக்கு ஏற்பாடுப் செய்தார் மெண்டெல். அனைத்துக்கும் மேலாக பப்லோவாத இண்டர் நேஷனலின் பங்கு அதுவாகத்தானிருந்தது. 1971 இந்தக் கூட்டாட்சி கிராமப்புற இளைஞர்களுக்கெதிராக பரந்த ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டது. அதில் ஆயிரக்கணக்கானோர் படுகொலை செய்யப்பட்டனர். சிறிலங்கா தொழிலாள வர்க்கத்துள், சிங்கள-தமிழ் மொழி பேசக்கூடிய இருபாலரிடத்தும் பிரதானக் கட்சியாக இருந்த ல. ச. ச. கட்சியின் காட்டிக்கொடுப்பானது, விவசாய மக்களிடம்தொழிலாளர் இயக்கத்தின் அரசியல் செல்வாக்கை வீழ்ச்சியுறச்செய்தது தமிழ் மக்கள் பெரும்பான்மையாக இருக்கக் கூடிய வடக்கிலும் கிழக்கிலும் எல்.டி.டி.இ. முதலாளித்துவ தேசிய வாதிகள் தோன்றுவதற்கான சூழ்நிலைகளை உண்டுபண்ணியது. இந்தக் காட்டிக் கொடுப்பானது தெற்கில் ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) விற்கு வழி திறந்து விட்டது. ஜே.வி,பி. மாவோயிச சொற்ஜாலங்களின் அடிப்படையில் விவசாய இளைஞர்களை அணி திரட்டியது: படிப்படியாக பாசிச இயக்கமாகவும் வளர்ச்சியுற்றது.

மெண்டெல் மற்றும்அவரது அரசியல் சகாக்களின் கொள்கைகளுக்கான கசப்பான விலையை25 வருடங்களுக்கும் மேலாக இலங்கைத தொழிலாளவர்க்கம் கொடுத்திருக்கிறது. இன்று இந்தக் காட்டிக் கொடுப்பினின்று மீண்டு வருவதற்கான அறிகுறிகளை இலங்கைத் தொழிலாளர்கள் காட்டத் தொடங்கியிருக்கின்றனர். நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைப் பகுதியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், சந்தர்ப்பவாதிகளுக்கு எதிராகத் தொடுத்த தசாப்த கால போராட்டத்தில் கட்டியமைக்கப்பட்டது.

இந்த சமயத்தில் மெண்டெல். ந ச.ச.க. (NSSP)வை கருவியாகக் கொண்டு இன்னெரு காட்டிக் கொடுப்புக்கு திட்டவட்டமாகத் தயாரித்துக் கொண்டு வருகிருர்.

## ந.ச.ச.க- (NSSP) என்பது என்ன?

இலங்கையிலும் சர்வதேச ரீதியாகவும் தொழிலாளர் இயக்கத்தில் ஏகாதிபத்தியந்தால் உள்ள கவனமாக உற்பத்தி செயயப்பட்ட சந்தர்ப்பவாதிகள் தட்டினரின் ஒரு பகுதியைக் கொண்ட வடிவம் தான் ந.ச.ச.கட்சி. தொழிலாள வர்க்கம் மற்றும் ஒடுக்கப்படும் மக்களைப் பலியிட்டு, ஏகாதிபத்தியத்தின் நலனுக்கும் முதலாளித்துவ ஆட்சிக்கும் காவல் அரணுக இருப்பது தான் அதனுடைய அரசியல் பாத்திரம். கடைசியாக பார்க்கையில் சிறிலங்காவின் பொருளாதார எஜமானர்களான உலக ஏகாதிபத்தியத்திற்கு தேவையான ஒடுக்கு முறை நடமடிக்கைகளை கொண்டு நடத்த தயங்காத அரசு அதிகாரத்திற்கான கட்சியாக ந.ச.சக. ஞன் கொண்டு வரப்பட்டுள்ளதையே அதன் சாதனை தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

பிறந்தது முதலே நாற்றமெடுத்த குட்டி முதலாளித்துவ போக்குதான் ந.ச.ச. கட்சி (NSSP). இன்றைய ந.ச.ச. கட்சியின் தலைவர்களான வாசுதேவ நாணயகாரவும் விக்கிரமபாகு கருணுரத்னவும், 1960களில் ல.ச.ச, (LSSP) கட்சியின் உறுப்பினர்களாக இருந்தவர்கள்தான். LSSP கட்சித் தலைவர்களான என்.எம். பெரேரா, கொல்வின் ஆர் டி. சில்வா ஆகியோரின் மக்கள் முன்னணி வழியில் மிக ஆர்வமுடையோராக இருந்தனர். அவர்களால்தான் இவர்களுக்கு ல.ச.ச.க. (LSSP)வின் இளைஞர் அமைப்பின் தலைமைப் பொறுப்பு வழங்கப்பட்டது. ல.ச.ச.க. (LSSP)வில் இருந்து அவர்களின் வெளியேற்றம் சந்தர்ப்பவாதத்தோடு முறித்துக் கொள்வதில் இருந்து எவ்விதத்திலும் தொடர்பில்லாததாகும். கூட்டரசாங்கத்திற்கு மக்களிடையே ஏற்பட்ட வெறுப்பு வளர்ந்து வந்த நிலையில், தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர வளர்ச்சியை அமுக்குவதற்காக புதிய சந்தர்ப்பவாத வாகனம் தேவைப்பட்டதைத்தான் (அவர்களின் வெளியேற்றம்) குறிப்பிடுகிறது.

புரட்சியாளர்கள் மீதான முதலாளித்துவ அரசின் ஒடுக்குமுறைகளை ந.ச.ச.க. (NSSP) மூகஸ்துதி செய்ததுடன், அதற்குத் துணைபுரிந்ததோடு கூட, அத்தகைய ஒடுக்குமுறைகளைத் தூண்டியும் வந்தது. 1979 ஜுலையில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் தோழர் R.P. பியதாச மிகக் கொடூரமான முறையில் யு.என்.பி. குண்டர்களாலும் போலீசாராலும் படுகொலை செய்யப்பட்டார். சில மாதங்களுக்குப் பின்னர், பியதாச வாழ்ந்த பகுதியில் போலீஸ் நிலைய அதிகாரியாக இருந்தவர், ந.ச.ச.க (NSSP) வால் ஏற்பாடு செய்யப்பட்ட புத்தாண்டு விழாவிற்கு தலைமை விருந்தினராக அழைத்து கௌரவிக்கப்பட்டார்.

1983ஜுலையில் தமிழ்ச் சிறுபான்மையினருக்கு எதிராக அடுக்கடுக்காய் இனக் கலவரங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன. ஐக்கிய தேசியக் கட்சியின் சிங்கள இனவாத அரசாங்கத்தினுல் தூண்டி விடப்பட்ட கும்பல்கள் தமிழ் பகுதிகளில் வீடுகளைத் தாக்கியதுடன், திட்டமிட்டு படுகொலைகளும் நடத்தின. இவை போலீஸ், ஆயுதப் படைகளின் உறுப்பினர்களாலும் அடிக்கடி நடத்தப்பட்டன. ந.ச.ச. கட்சி இந்த இரத்த ஒழுகலை ஆதரித்தது. அதனை அரசுக்கு எதிராகத் திருப்பப்பட்ட ''சமூகப் போராட்டம்'' எனக் கூறியதுடன், அதனைத் தூண்டிவிட்ட அதே அரசாங்கத்திற்கு ஒத்தடம் கொடுத்தது.

ந.ச.ச.கட்சி திரும்பவும் முதலாளித்துவக் கட்சிகளுடன் தேர்தல் கூட்டிற்கும், அணி தேர்தலுக்கும்போனது. 1982 ஜனுதிபதி தேர்தலில். அது முதலாளித்துவ சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் (SLFP) தேர்தல் பிரச்சாரத்தை அங்கிகாரம் செய்ததுடன், சீர்திருத்தவாத ல.ச.ச.கட்சி (LSSP) தனது சொந்த வேட்பாளரை நிறுத்தியதைக் கண்டிக்கவும் செய்தது. 1984ல் சிறில.சு.கட்சி (SLFP) பிளவுபட்டு ஒரு பிரிவு தோன்றியது. அது முன்னுள் பிரதமமந்திரி பண்டார நாயக்காவின் மகளால் தலைமை தாங்கப்பட்டது. சிறிலங்கா மகா ஜனக்கட்சி (SLMPஎன்று)அழைக்கப்பட்ட அதனை ந.ச.ச.கட்சி பற்றிக் கொண்டதுடன் அதனை தனது அரசியல் கூட்டணியாகவும் வைத்துக் கொண்டது.ந.ச.ச. கட்சித் தலைமைகள் SLMPஐ ''புதிய பாட்டாளிவர்க்க சீர்திருத்தவாத மக்கள் போக்கு'' என பெயரிட்டதோடு, அதனுடன் உறவை நிலைநாட்டி, அதற்கு அவலட்சணமான முறையில் ஐக்கிய சோசலிசக் கூட்டு U.S.A. என தவருகப் பெயரிட்டனர்.

1987 ஆகஸ்டில் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்காக, ஜே.ஆர். ஜெயவர்தனேவால் ஏற்பாடு செய்யப்பட்ட வட்ட மேஜை மாநாட்டில் ந.ச.ச. கட்சியும் ஏனைய சந்தர்ப்பவாதக் கட்சிகளும் பங்கெடுத்தன. இந்திய-இலங்கை அரசாங்கங்களுக்கிடையிலான இவ்வொப்பந்தத்தின்கிழ்தான் தமிழரின் எழுச்சியை நசுக்குவதற்காக சுமார் 1லட்சம் இந்தியத் துருப்புக்கள் தீவின் வட பகுதியை ஆக்கிரமிப்புச் செய்தன. பத்தாயிரக்கணக்கான தமிழர்களின் படுகொலைகளுக்கான அரசியல் பொறுப்பினை ந.ச.ச.கட்சி பங்கிட்டுக் கொண்டது.

ந.ச.ச. கட்சிக்கும் அரசுக்கும் இடையிலான உறவு-1988 அளவில் குட்டி முதலாளித்துவ ஜே.வி.பி. தமிழர்களுக்கும் தொழிலாளர் இயக்கத்திற்கும் எதிரான தாக்குதல்களில் ஈடுபட்டு, முழுவதுமாய் பாசிச இயக்கமாக முளைவிடத் தொடங்கிய போதும் மேலும் அபிவிருத்தி அடைந்தது. அப்போது புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம். ஜே.வி.பி.யின் தாக்குதலுக்கு எதிராக தொழிலாள வர்க்கத்தைப் பாதுகாக்க, தொழிலாளர் வர்க்க இயக்கங்களின் ஐக்கிய முன்னணியை அமைப்பதற்காகப் போராடியது. (NSSP) ந.ச.ச.கட்சித் தலைவர்கள் இந்தப் பிரச்சாரத்தைக் கோபத்துடன் எதிர்த்து அதற்குப் பதிலாக முதலாளித்துவ SLMPயுடனுன மக்கள் முன்னணியை முன் வைத்தனர். எல்லாவற்றுக்கும் மேலாக, தொழிலாளவர்க்கம் தனது சொந்த சுதந்திரமான தற்காப்பு வழிமுறைகளைப் பின்பற்றுவதைக் கண்டு அஞ்சி ந.ச.ச.க. (NSSP) ஜே.வி.பிக்கு எதிரான அரசின் தலையீட்டுக்கு அழைப்பு விடுத்தது.

1990-ஜுலையில் தமிழ் மக்களுக்கு எதிராக யு.என்.பி அரசாங்கத்தால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இனவாத யுத்தத்திற்காக. 5 மில்லியன் கூடுதல் பட்ஜெட் நிதிக்கு யு.என்.பி. அரசாங்கத்துடன் சேர்ந்து, ந.ச.ச. கட்சியின் பாராளுமன்ற பிரதிநிதியான வாசுதேவ நாணயக்கார வாக்களித்த போது, ந.ச.ச. கட்சியின் பிற்போக்குத்தனம் அம்மணமாக வெளிப்பட்டது. ந.ச.ச. கட்சித் தலைமைகள் விடுதலைப் புலிகளை (LTTE) பாசிஸ்டுகள் என்று கண்டனம் செய்து கொண்டு யு.என்.பி. அரசாங்கத்தினதும், ராணுவத்தினதும் கைக்கூலிகளாகவும் அடியாட்களாகவும் சேவை செய்துவரும் தமிழ்க் குழுக்களுடன் ஐக்கியப்பட்டுக் கொண்டு, இவ்வகை அமைப்புக்கள் பலவற்றை ''மார்க்சிஸ்ட்'' எனவும் விவரித்து வருகின்றனர்.

தொழிற் சங்கங்களில் ந.ச.ச. கட்சியின் வர்க்கக் கூட்டு அரசியலானது, கார்ப்பரேட்டிசத்திற்கும் லஞ்சலாவண்யத்திற்கும் இட்டுச் சென்றுள்ளது. பன்ளுட்டுக் கம்பெனியான யுனிலீவர், ந.ச.ச. கட்சித் தலைவர்களால் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தத்தை, ஏனைய நாடுகளில் உள்ள தங்களின் நிறுவனங்களுக்கு முன்மாதிரியாக இப்போது பயன்படுத்துகின்றனர். ஒப்பந்தக் காலம் முழுமையும் வேலை நிலைமைகள் சம்பள சம்பந்தமாக எந்த போராட்டமும் தொடுக்கக் கூடாது என்பதற்கு ந.ச.ச. கட்சி தலைவர்கள் சம்மதித்துள்ளனர்.ந.ச.ச.வின் துரோகக் கொள்கைகளுக்கு நன்றிக் கடனுக, அண்மையில் ஒரு முதலாளி, தொழிற்சங்கப் பிரமுகருக்கு 5,000ரூபாய்களை பிரச்சார நிதியாகக் கொடுத்துள்ளார். கடந்த ஆண்டு உள்ளூராட்சி தேர்தலில் இவர் ந.ச.ச. கட்சியின் வேட்பாளராக நின்றவராவார்.

ந.ச.ச.கட்சி தற்போது ''காணுமற் போனேர் பெற்றேர் உறவினர் இயக்கம்'' என்ற அமைப்பில் தலையிட்டுள்ளது. யு.என்.பி.யாலும் இராணுவ கொலைப் படையாலும் கடந்த இரண்டு ஆண்டுகளில் லட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் கொடூரமாக சித்திரவதை செய்யப்பட்டனர்; கொல்லப்பட்டனர். இதுபற்றிய கிராமப்புற மக்களின் கோபாவேசத்தை தவருக திசை திருப்பவும் மழுங்கடிக்கவும் செய்வதே இந்த அமைப்பின் குறிக்கோளாகும். ந.ச,ச. கட்சி சிங்கள மொழி பேசும் கிராமப்புறப் பகுதிகளில்—தமிழ் மக்களுக்கெதிரான போரில் இறந்த படை வீரர்களையும் கொலைப் படையினரால் பழிதீர்க்கப்பட்டுள்ள இளைஞர்களையும் சமமாக வைத்தும்-தமிழ் எதிர்ப்பு இனவாத நஞ்சை ஏற்றுகின்றனர். ந.ச.ச. கட்சி ஒடுக்குமுறைக்கெதிரான இயக்கத்திற்கான தலைமைப் பொறுப்பினை சிறில. சு. கட்சிக்கு (SLFP) வழங்கியுள்ளது. கருணுரத்ன தானே இவ்வித ஒடுக்கு முறைக்கு ''மறைமுக ஆதரவை'' வழங்குவதாக ஒப்புக் கொண்டிருக்கிருர். ஒடுக்கு முறைகள் தொடர்பாக கொழும்பில் ல.ச.சூக,, ந,ச.ச.க. கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட பேரணிக்கு தலைமை தாங்குபவராக இருந்தது. சி.றி.ல,சு. (SLFP) கட்சித் தலைவராவார் அந்தப் பேரணியால் முன் வைக்கப்பட்ட முக்கியக் கோரிக்கை'' அனைவரையும்

★ 20ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com



# சோவியத் யூனியனின் முடிவும் நான்காம் அகிலத்தின் பணியும்

## 'வேர்க்கஸ் லீக்' மிட்வெஸ்ட் அங்கத்தவர் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை

*அமெரிக்க ட்ரொட்ஸ்கிச இயக்கமான வேர்க்கஸ் லீக்கின் தேசியச் செயலாளர் டேவிட் நோர்த் 1992 ஜனவரி 04ல் டெட்ரொய்ட்டில் நடைபெற்ற அங்கத்தவர் கூட்டத்தில் சமர்ப்பித்த அரசியல் அறிக்கை.*

இதைப் போன்ற கூட்டங்களில் ஆரம்ப அரசியல் அறிக்கைக்கு முன்னுரையாக மிகச் சமீபகாலச் சம்பவங்கள் வரலாற்றுப் பண்பு கொண்டனவாக இருப்பதால் அவை பற்றிய அறிக்கையுடன் ஆரம்பிப்பது முற்றிலும் அவசியமாகிவிட்டது. ஏறக்குறைய ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் அனைத்துலகக் குழு. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் அபிவிருத்தி செய்யப்பட்ட அரசியல் சமபலநிலையின் துரிதமான வெடிப்புக்கு இட்டுச் சென்ற உலகப் பொருளாதாரத்தின் அமைப்பில் இடம்பெற்ற அடிப்படை மாற்றங்களை ஆய்வு செய்யத் தொடங்கியது. 1987ன் நடுப்பகுதியில் அந்த ஆய்வு முதலில் சமர்ப்பிக்கப்பட்டதில் இருந்து நாம் உலக அரசியலின் முகத் தோற்றத்தினை மாற்றிய ஒரு தொகை அரசியல் வெடிப்புக்களைத் தரிசித்தோம். கிட்டத்தட்ட கட்சியின் ஒவ்வொரு பெரும் கூட்டத்திலும் மிகவும் சமீபகால கிளர்ச்சி எழுச்சிகளின் அரசியல் தாக்கங்கள் பற்றி அரசியல் கலந்துரையாடல்களில் கவனம் செலுத்துவது அவசியமாகிவிட்டது.

இந்தக் கூட்டம் அதே பாதையிலே தொடரும். நான்கு மாதங்களுக்குமுன்னர் எமது 15வது காங்கிரசில் நாம் கணிசமான அளவு நேரத்தை சோவியத் யூனியனின் ஆகஸ்ட் சதியை ஆய்வு செய்வதில் செலவிட்டோம். செல்வாக்கிழந்த ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் ஒரு கன்னையினால் ஒழுங்கு செய்யப்பட்ட அந்தச் சதியை எதிர்க்கையில் அனைத்துலகக் குழுவும், வேர்க்கஸ் லீக்கும் அந்த யெல்ட்சினின் 'ஜனநாயகவாதிகள்' எனப்படுவோர் 'தொழிலாள வர்க்கத்தின் மிகவும் ஈவிரக்கமற்ற எதிரிகளை' பிரதிநிதித்துவம் செய்வதாகவும் அவர்களின் நோக்கம் சோவியத் யூனியனின் சகல சொத்துக்களையும் விற்றுத்தள்ளி அதனை ஒருஅரைக் காலனித்துவ அந்தஸ்துக்கு இறக்குவதற்கு ஒன்றும் குறைந்ததல்ல' எனவும் நாம் சொன்னோம். மேலும் நாம் ''ஒரு சோசலிச வேலைத் திட்டத்தின் அடிப்படையில் தொழிலாள வர்க்கத்தின் சுயாதீனமான தலையீடு இல்லாமல் சோவியத் யூனியனில் ஸ்டாலினிசத்தின் சரிவு இன்னும் கொடூரமான ஒடுக்குமுறை வடிவங்களுக்கும் சமூகப் பேரழிவுக்கும் இட்டுச் செல்லும்'' எனவும் வலியுறுத்தினோம்.



டேவிட் நோர்த்

இந்த 'மிட் வெஸ்டேர்ண்' கிளைகளின் அங்கத்தவர் கூட்டம், சோவியத் யூனியனுக்கு முடிவுகட்டி, சுதந்திர அரசுகளின் பொதுநல வாயத்தினை அமைப்பதாக யெல்ட்சின், சுஸ்கேவிச், கிராவ்சுக்கும் மின்ஸ்க் கூட்டத்தில் பிரகடனம் செய்த கூட்டத்திற்கு 3 கிழமைகளுக்குப் பின்னர் இடம் பெறுகின்றது. இச்சம்பவம் ஒரு வரலாற்று மைற்கல்லைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது — மீன்ஸ்கில் மூன்று பன்றிக் குட்டிகள் இட்டுக்கட்டிய இந்த பரிதாபமானதும் முக்கியமற்றதுமான வஸ்துவுக்கு நாம் ஏதும் விசேட தரங்களைக் கற்பிப்பதாலன்றி சோவியத் ருஷ்யா கலைக்கப்பட்டமை உண்மையில் அக்டோபர் புரட்சியினதும் சோவியத்தினதும் அனைத்துலக தொழிலாள வர்க்கத்தினதும் அடிப்படைக் கொள்கைகளை ஸ்டாலினிசம் காட்டிக்கொடுத்ததின் உச்சக் கட்டத்தினைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது.

1920பதுகளில் இருந்து ட்ரொட்ஸ்கிசஇயக்கம்செய்து வந்த இடைவிடாத எச்சரிக்கை—ஸ்டாலினிசம் சோவியத் தொழிலாளர்களை ஒரு பேரழிவுக்கு இட்டுச் செல்லும் என்பது ஆழமான முறையிலும் துன்பகரமான முறையிலும் நிரூபிக்கப்பட்டுள்ளது. கடந்த வாரத்தில் அமுலுக்கு வந்த பிரமாண்டமான விலை அதிகரிப்பின் அழிவுமிக்க தாக்கங்கள் கோடானுகோடி ருஷ்யர்களால் உணரப்பட்டு வருகின்றது. முதலாளித்துவத்தின் புனருத்தாரணத்தால் கட்டாயம் உதயமாகப் போகும் சமூகப் பேரழிவின் ஆரம்பத்தை மட்டுமே இது குறிக்கின்றது.

முதலாளித்துவத்தினைப் புனருத்தாரணம் செய்யும் முயற்சிகள் சகல குடியரசுகளிலும் - சிறப்பாக ருஷ்யாவிலும் உக்ரேனிலும் — தொழிலாள வர்க்கத்தினை வெடிக்கும் போராட்டங்களுக்கு இட்டுச் செல்வது தவிர்க்க முடியாதது. அத்தோடு முதலாளித்துவத்தின் பயங்கரங்களுக்கு எதிராக ஒரு தன்னியல்பான இயக்கத்தின் அபிவிருத்திக் காகக் காத்திருப்பது எமது இயக்கத்துக்குப் போதுமானதல்ல. மாறாக, அனைத்துலகக் குழுவும் வேர்க்கஸ் லீக்கும் சோவியத் யூனியன் கலைக்கப்பட்டமையின் பாரதூரமான தாக்கங்களை புறநிலையாக ஆய்வு செய்வதன் மூலம் ருஷ்யாவிலும் அனைத்துலகிலும் தொழிலாள வர்க்கத்தின் எதிர்கால இயக்கத்தினைத் தயார் செய்ய வேண்டும்.

### வரலாற்று ஆய்வு

சோவியத் அரசினையும் ஸ்டாலினிச ஆட்சியையும் பற்றிய எமது இயக்கத்தின் ஆய்வின் இந்த வரலாற்று அபிவிருத்தியை மீளாய்வு செய்வதுடன் நாம் தொடங்க வேண்டும். சோவியத் அரச இயந்திரத்தினுள்ளும் கம்யூனிஸ்ட் கட்சியினுள்ளும் அதிகாரத்துவத்தின் வளர்ச்சியின் பிரதிபலிப்பாக 1923ல் இடதுசாரி எதிர்ப்பு நிறுவப்பட்டது. புதிய பொருளாதாரக் கொள்கைக் காலப்பகுதியில் அதிகாரத்துவம் தோன்றிற்று. ஐரோப்பியப் புரட்சியின் தோல்வியுடன் பிணைக்கப்பட்டிருந்த சோவியத் அரசின் நீடித்த தனிமைப்படுத்தலுடன் இது மனமுடைந்து போயிற்று. இந்த அதிகாரத்துவப் போக்குக்களின் வளர்ச்சியை எதிர்க்கும் பொருட்டு இடதுசாரி எதிர்ப்பு அமைக்கப்பட்டது. அதன் ஆய்வுகளதும் வேலைத் திட்டத்தினதும் தூரதிருஷ்டிக்கு இடையேயும் ஆரம்பத்தில் இடதுசாரி எதிர்ப்பு தோற்கடிக்கப்பட்டது. முக்கியமாக ஐரோப்பாவில் தொழிலாள வர்க்கம் அடைந்த தொடர்ச்சியான தோல்விகள்—''ஒரு நாட்டில் சோசலிசம்'' என்ற பிற்போக்குக் கோட்பாட்டின் அடிப்படையில் ஸ்டாலினிஸ்டுகள் கடைப்பிடித்த துரோகக் கொள்கைகளின் நேரடி விளைவாகும் என்பதை நாம் நினைவில் கொண்டாக வேண்டும்.

1927ல் ட்ரொட்ஸ்கியும் இடதுசாரி எதிர்ப்பின் ஆதரவாளர்களும் ருஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து நீக்கப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் சோவியத் யூனியனில் வெகுதூர இடங்களுக்கு நாடுகடத்தப்பட்டனர். சுதந்திர அரசுகளின் கூட்டின் எதிர்காலத் தலைவர்களின் பரிதாபகரமான சமீப கூட்டம் கூடிய அல்மா அட்டாவுக்கு ட்ரொட்ஸ்கி நாடு கடத்தப்பட்டார்; ஸ்டாலினை எதிர்த்த மார்க்சிஸ்டுகளின் விலக்கல்கள் நாடுகடத்தல்களுக்கிடையேயும் இடதுசாரி எதிர்ப்பின் தலைவர்களும் அங்கத்தவர்களும் கம்யூனிஸ்ட் கட்சியைச் சீர்திருத்தத் தொடர்ந்து போராடி வந்தனர். இடதுசாரி எதிர்ப்பு, உத்தியோகபூர்வமான கட்சிக்குள்ளேயும் கம்யூனிஸ்ட் அகிலத்தின் உள்ளேயும் தன்னை ஒரு கன்னையாக நோக்கியது.

1933வரை இதுவே எமது இயக்கத்தின் நிலைப்பாடாக விளங்கியது. ஜேர்மன் தொழிலாள வர்க்கம் ஹிட்லரால் தோற்கடிக்கப்பட்டமை ஸ்டாலினிசக் கட்சிகள்,சோவியத் ஆட்சியாளர்கள் தொடர்பான மனப்பாங்கினைப் புதுப்பிக்குமாறு ட்ரொட்ஸ்கிஸ்டுகளை நெருக்கியது. ஸ்டாலினிசக் கட்சிகளைச் சீர்திருத்தும் வேலைத்திட்டம் கைவிடப்பட்டது. அதற்குப் பதிலாக ட்ரொட்ஸ்கி ஒரு புதிய அனைத்துலகத்தை — நான்காம் அகிலத்தை அமைக்க அழைப்பு விடுத்தார். அந்த மாற்றத்தில் இருந்து சோவியத் யூனியனின் உள்ளே, ஒரு அரசியல் புரட்சி மூலம் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தினைத் தூக்கிவீசும் அழைப்பு எழுந்தது.

இந்தப் புரட்சியைச் சமூகப் புரட்சியாக அல்லாமல்- அரசியல் புரட்சியாக வரைவிலக்கணம் செய்ததன் மூலம் நான்காம் அகிலம் இன்னமும் சோவியத் அரசினை 1917ல் அமைக்கப்பட்ட பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வெளிப்பாடாகக் கொள்வதாக விளக்கியது. அந்தத் தொழிலாளர் அரசு ஆழமான சீர்கேடுகளுக்குள்ளான போதிலும் அக்டோபர் புரட்சியால் சிருஷ்டிக்கப்பட்ட சொத்து வடிவங்கள் இன்னமும் கரைக்கப்பட்டு விடவில்லை என்பதை அங்கீகரிக்க வேண்டும். நான்காம் அகிலம் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தினைத் தூக்கிவீசும்படி தொழிலாள வர்க்கத்துக்கு அழைப்பு விடுத்தது. தனது சொந்தச் சட நலன்களைக் காக்கும். அதிகாரத்துவத்தின் செயல் சோவியத் யூனியனின் உற்பத்திச் சக்திகளின் முற்போக்கு அபிவிருத்தியுடன் ஒத்துப்போக மாட்டாது என இது எச்சரிக்கை செய்தது. ஆனால் அக்டோபர் புரட்சியின் பின்னர் நிலைநாட்டப்பட்ட சொத்து வடிவங்களை அடிப்படையாகக் கொண்டு அதன் சொந்தச் சலுகைகள் இருக்கும் வரையில் அதிகாரத்துவம் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக இந்தச் சொத்து வடிங்களைக் காக்கத் தள்ளப்பட்டுள்ளது என ட்ரொஸ்கி விளக்கினார்.

ஸ்டாலினின் குற்றங்களின் அடிப்படையில் சோவியத் அரசினை ஒரு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமாக வரைவிலக்கணம் செய்ய முடியாது எனவும் அது சீர்கெட்டுவிட்டது அல்லது அதிகாரத்துவம் ஒரு புதிய வடிவிலான வர்க்க வடிவம் என்ற முடிவுக்கு வந்தவர்களை ட்ரொட்ஸ்கி நான்காம் அகிலத்தினுள் உறுதியாக எதிர்த்தார். ஒன்றில் முதலாளித்துவம் புனருத்தாரணம் செய்யப்பட்டுவிட்டது அல்லது மார்க்சிசம் கண்டிராத ஒரு அதிகாரத்துவ பிரமுகர்களால் ஆளப்படும் ஒரு புதிய சுரண்டல் சமுதாயம் சிருஷ்டிக்கப்பட்டு விட்டது என்றனர். ட்ரொட்ஸ்கி இந்த நிலைப்பாடுகளை நிராகரித்தார். 1934- 1940ல் அவரின் மரணத்திற்கும் இடையே அவர் சோவியத் யூனியன் தொழிலாளர் அரசாகத் தொடர்ந்து இருந்து வருகின்றது எனவும் அதிகாரத்துவத்தின் குற்றங்களுக்கிடையேயும் தொழிலாள வர்க்கம் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக நிபந்தனையின்றிப் பேணப்படவேண்டும் என்வும் தொடர்ந்து வாதிட்டார். அவர் எழுதியதாவது:-

''அரசின் வர்க்கத் தன்மை தொடர்ந்து நிர்ணயம் செய்யப்படுவது அதன் அரசியல் வடிவங்களால் அன்றி

(4 -ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# சோவியத் யூனியனின் முடிவும் நான்காம் அகிலத்தின் பணியும்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அதன் சமூக உள்ளடக்கத்தினாலாகும். அதாவது: குறிக்கப்பட்ட அரசு காத்து, பேணிக்கொண்டுள்ள சொத்து வடிவங்களின் பண்பினாலாகும். அரசில் சமூக ஜனநாயகத்தின் ஆளுமையும் 1918–19ல் ஜேர்மன் சோவியத்துக்களும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கு பொதுவான எதையும் கொண்டிருக்கவில்லை. ஏனெனில் இது முதலாளித்துவ சொத்தினை மீறவில்லை. ஆனால் இந்தப் பறிமுதல் செய்த தேசிய சொத்தினைக் காக்கும் ஆட்சியானது சுதந்திரமான அரசியல் வடிவங்களை- பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தினைக் கொண்டுள்ளது....

"ஸ்டாலின் அதிகாரத்துவத்துக்கும் அதன் மூலம் உலக ஏகாதிபத்தியத்துக்கும் சேவை செய்கின்றார். ஆனால் அவர் அதிகாரத்துவம் தனது சொந்த நலன்களின் பேரில் சுரண்டும் சமூக அடிப்படைகளை பேணாமல் அதிகாரத்துவத்துக்குச் சேவை செய்ய முடியாது. அந்தளவுக்கு ஸ்டாலின் தேசியமயமாக்கப்பட்ட சொத்துக்களை ஏகாதிபத்திய தாக்குதல்களில் இருந்தும் அதிகாரத்துவத்தின் பொறுமையிழந்ததும் பேராசை கொண்டதுமான தட்டினரிடமிருந்தும் கூடப் பேணுகின்றார். எவ்வாறெனினும் அவர் இந்த பாதுகாப்பினை சோவியத சமுதாயத்தினை பொதுவாக ஒழித்துக்கட்டும் தயாரிப்பு நடவடிக்கைகளுடனேயே இதை அமுல் செய்கின்றார். சரியாக இதன் காரணமாகவே ஸ்டாலனிசக் கும்பல் தூக்கிவீசப்பட வேண்டும். ஆனால் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கமே கட்டாயம் இந்த தூக்கிவீசலைசெய்ய வேண்டும். பாட்டாளி வர்க்கம் இந்த வேலையை ஏகாதிபத்தியவாதிகளிடம் உப—ஒப்பந்தகாரருக்கு விட முடியாது. ஸ்டாலினுக்கிடையேயும் பாட்டாளி வர்க்கம் ஏகாதிபத்தியத் தாக்குதலில் இருந்து சோவியத் ருஷ்யாவைப் பேணுகின்றது."

பின்னர் அதே பந்தியில் அவர் எழுதியதாவது: "ஹிட்லர் முதலாளித்துவச் சொத்து வடிவங்களைப் பாதுகாக்கின்றார். ஸ்டாலின் அதிகாரத்துவத்தின் நலன்களை பாட்டாளி வர்க்கச் சொத்து வடிவங்களுக்கு இயைந்து கொடுக்கிறார். ஸ்டாலின் அன்ட் கம்பனியை ஓட்டிக் கலைப்பது சோவியத் தொழிலாளர்களுக்கு அவசியம். உரிய காலத்தில் பாட்டாளி வர்க்கம் சோவியத் அதிகாரத்துவத்தினை அப்புறப்படுத்துமானால் அதன் வெற்றியின் பின்னர் தேசியமயமாக்கப்பட்ட சொத்து சாதனங்களும் திட்டமிட்ட பொருளாதாரத்தின் அடிப்படை மூலகங்களும் இன்னமும் இருந்து வருவதைக் காணும். இது ஒரு மாபெரும் அனுகூலமாகும்."

ட்ரொட்ஸ்கி அடிக்கடி இந்த அடிப்படை அம்சத்துக்குத் திரும்பினார். அதன் சொந்தச் சட நலன்களின் சேவையின் பேரில் என்றாலும் அதிகாரத்துவம் அக்டோபரின் அடிப்படையில் சிருஷ்டிக்கப்பட்ட சொத்து வடிவங்களைப் பேணும்படி தள்ளப்படுவதை காணும் வரையில் சோவியத் யூனியன் - அதன் அடிப்படைப் போக்குகளில் — ஒரு தொழிலாளர் அரசாக இருந்து வருகின்றது எனவும் அரசியல் புரட்சி முன்நோக்கு நின்று பிடிக்கத்தக்கதாக இருந்து வருகின்றது எனவும் நாம் கூறியாக வேண்டும். அதாவது அதிகாரத்துவத்தினைத் தூக்கிவீசியதன் பின்னர் தொழிலாளர் வர்க்கம் அக்டோபர் புரட்சியினால் நிலைநாட்டப்பட்ட சொத்து வடிவங்களின் மேல் இன்னமும் கட்டியெழுப்பக் கூடியதாக இருக்கும்."

இந்த ஆய்வு, கட்சிக்கும் முன்னேறிய தொழிலாளர்களுக்கும் ஒரு தெளிவான தகவமைவினை வழங்கியது. சோவியத் யூனியனைப் பேணுவதென்பது ஏகாதிபத்தியத் தலையீடு உருவாக்கியுள்ள நேரடி அச்சுறுத்தலுக்கும் சோவியத் யூனியனின் அதிகாரத்துவச் சீர்கேட்டின் நீண்டகால விளைவுகளுக்கும் எதிராகத் தொழிலாள வர்க்கத்தினை அணிதிரட்டுவதை வேண்டிநிற்கும் ஒரு முன்நோக்குடன் பிணைக்கப்பட்டுள்ளது. பல தடவைகள் நாம் கூறிப்பிட்டது போல் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக நாம் சோவியத் யூனியனை நிபந்தனையின்றிப் பேணிய போதிலும் நாம அதிகாரத்துவத்தினை தூக்கிவீசுவதை ஆதரித்தோம. எமது கொள்கையின் இந்த வேறுபட்ட மூலகங்கள் பிரிக்க முடியாத வகையில் இணைந்து கொண்டுள்ளன.

சோவியத் அரசின் வர்க்கத் தன்மை பற்றிய இந்த வரைவிலக்கணம் ஸ்டாலினிஸ்டுகளுக்கு எதையும் விட்டுக் கொடுக்கவில்லை. அதிகாரத்துவத்தினால் இழைக்கப்பட்ட எண்ணற்ற குற்றங்களுக்கு இடையேயும் சோவியத் அரசுபலதசாப்தங்களுக்கு உயிர்வாழ்ந்ததன் மூலம் அக்டோபர் புரட்சியின் அடிப்படையில் சிருஷ்டிக்கப்பட்ட புதிய சொத்து வடிவங்களின் அற்புதமான உள்ளார்ந்த சக்தியைவெளிப்படுத்தியுள்ளது. எவ்வாறெனினும் போல்ஷிவிக்குகள் தமது ஆட்சிக்கான முன்நோக்கினை தனியொரு தனிமைப்படுத்தப்பட்ட தொழிலாளர் அரசின் அரச சொத்தின் உள்ளார்ந்த சக்தியினை அடிப்படையாக - சிறப்பாக ஒரு பின்தங்கிய பொருளாதாரத்தின் வறிய அடித்தளத்தில் நிறுவப்பட்ட ஒன்றினை அடிப்படையாக ஒரு போதும் கொள்ளவில்லை. மாறாக அவர்கள் தம்மை அனைத்துலகத் தொழிலாள வர்க்கத்தின் உள்ளார்ந்த சக்தியினையும் உலக முதலாளித்துவத்திற்கு எதிரான அதன் புரட்சிகரப் போராட்டங்களையும் அடிப்படையாகக் கொண்டனர். லெனின், ட்ரொட்ஸ்கி, லக்சம்பேர்க்கும் அச்சகாப்தத்தின் சகல மாபெரும் மார்க்சிஸ்டுகளும் பூரணமாக ஐக்கியப்பட்ட ஏதேனும் ஒன்றிருப்பின் அது அனைத்துலக புரட்சிகர இயக்கத்தின் அபிவிருத்தியின் மீது- சிறப்பாக ஐரோப்பிய பாட்டாளி வர்க்கத்தின் மீதான ருஷ்யப் புரட்சியின் பரிபூரணமான சார்பு தன்மை பற்றியதே.

55 ஆண்டுகளுக்கு மேலாக சோவியத் அரசு பற்றிய இந்த ஆய்வுகள் எமது தகவமைவினை நிர்ணயம் செய்தன. சோவியத் அரசு பற்றிய மார்க்சிசக் கருத்துப்பாட்டினையும் அத்தோடு ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் தன்மையையும் திரிபுசெய்ய முயன்ற எண்ணற்ற முயற்சிகளுக்கு எதிராக இதை நாம் பேணியுள்ளோம். 1930பதுகளில் அதிகாரத்துவம் ஒரு புதிய வர்க்கம் எனக் கூறவும் முன்வந்தவர்கள் இருந்தார்கள். பின்னர் நாற்பதுகளின் இறுதியிலும் ஐம்பதுகளின் முற்பகுதியிலும் இந்தத் திரிபுவாதக் கருத்துப்பாடு பப்லோவாதிகளால்-டியூச்சர் தொடக்கம்-உள்ளே கொணரப்பட்டது. அவர் அதிகாரத்துவத்திற்கு ஒரு மிதமிஞ்சிய முற்போக்குப் பாத்திரத்தினைவழங்கினார். ட்ரொட்ஸ்கி ஸ்டாலினிசத்தின் எதிர்ப்புரட்சிப் பண்பினை மிகைப்படுத் திக்காட்டிவிட்டதாகவும், ஸ்டாலினிசம் ஒரு நீண்ட அரசியல் சீர்திருத்தத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் துர்அதிஸ்டவசமாக இரத்தம் தோய்ந்த பாணியாக இருந்த போதிலும் ஸ்டாலின் புரட்சியின் நலன்களை அமுல் செய்யும் ஒரு வகையான பாட்டாளி வர்க்கக் குரோம்வெல் எனவும் டியூச்சர்வாதிட்டார். ஸ்டாலினிசம் சோவியத் யூனியனில் முதலாளித்துவத்தின் புனருத்தாரணத்துக்குஇட்டுச் செல்லும் என்ற ட்ரொட்ஸ்கியின் கருத்து பொருத்தமற்றதும், நகைப்புக்கிடமான மிகைப்படுத்தலுமாகும் என அவர் குறிப்பிட்டார். மார்க்சிசத்தின் இச்சகல திரிபுவாத திரிபுக்களும் அம்பலமாக்கப்பட்டுள்ளன. ஸ்டாலினிசத்தை ருஷ்யப் புரட்சியின் சவக்குழி தோண்டியாக ட்ரொட்ஸ்கி செய்த மதிப்பீட்டின் சரியான தன்மை முழுமனே நிரூபிக்கப்பட்டுள்ளது.

## பண்புமயமான திருப்புமுனை

1985 மார்ச்சில் கொர்பச்சேவ் ஆட்சிக்கு வந்ததில் இருந்து அதிகாரத்துவம் கடைப்பிடித்த அரசியலின் உச்சக்கட்டமாக விளங்கிய கடந்த மாதச் சம்பவங்களின் பின்னர் சோவியத் யூனியன் சட்டரீதியாகக் கலைக்கப்பட்டதில் இருந்து பொருத்தமான முடிவுகளைப் பெறுவது அவசியம். சுதந்திர அரசுகளின் கூட்டினை முழுமையாகவோ அல்லது அது உள்ளடக்கியுள்ள எந்தவொருகுடியரசினையோ தொழிலாளர் அரசாக வரைவிலக்கணம் செய்ய முடியாது.

சோவியத் யூனியனின் சீர்கேட்டின் தொகை ரீதியான தொடர் ஒரு பண்புரீதியான மாற்றத்திற்கு இட்டுச் சென்றுள்ளது. சோவியத் யூனியனின் கலைப்பும் (U.S.S.R) சுதந்திர அரசுகளின் கூட்டும் (CIS) வெறுமனே எழுத்துவரிசையை மாற்றியமைப்பது அல்ல. இதற்குத் திட்டவட்டமான அரசியல், சமூகத் தாக்கங்கள் உண்டு. இது தொழிலாளர் அரசினைச் சட்டரீதியில் கலைப்பதையும் அதை அக்டோபர் புரட்சியில் இருந்து வந்த தேசியப் பொருளாதாரத்தினதும் திட்டமிடும் அமைப்பினதும் மிச்சசொச்சங்களை ஒழிப்பதில் வெளிப்படையாகவும் சந்தேகத்துக்கிடமின்றியும் ஈடுபட்ட ஆட்சியாளர்களால் பதிலீடு செய்வதையும் பிரதிநிதித்துவம் செய்கின்றது.

சுதந்திர அரசுகளின் கூட்டினை (C.I S) அல்லது அதன் தனிப்பட்ட குடியரசுகளை ஒரு தொழிலாளர் அரசு என வரைவிலக்கணம் செய்வதானது முன்னைய வரலாற்றுக் காலப் பகுதியில் இது வெளியிட்ட ஸ்தூலமான உள்ளடக்கத்தில் இது வரைவிலக்கணத்தினை பூரணமாகத் தனிமைப்படுத்துவதாக இருக்கும்.

ஒரு புரட்சிக் கட்சியதார்த்தத்திற்கு முகம் கொடுப்பதோடு அது என்ன என்பதையும் கூறி வைக்க வேண்டும். சோவியத் தொழிலாள வர்க்கம் ஒரு பாரதூரமான தோல்வி கண்டுள்ளது. தொழிலாள வர்க்கம் அதிகாரத்துவத்தினை துடைத்துக் கட்டுவதற்கு முன்னர், அதிகாரத்துவம் தொழிலாளர் அரசினைக் கபளீகரம் செய்துள்ளது. இந்த உண்மைஎவ்வளவுதான் துன்பகரமானதாக இருந்த போதிலும் நான்காம் அகிலத்தின் முன்னோக்கினை அது தவறானதாக நிரூபித்துவிடவில்லை. 1938ல் அது ஸ்தாபிக்கப்பட்டதில் இருந்து எமது இயக்கம், தொழிலாள வர்க்கம் இந்த அதிகாரத்துவத்தினைத் தாண்டி அதனை நிர்மூலமாக்க முடியாது போகுமாயின் சோவியத் யூனியன் ஒரு உடைந்த கப்பலாக வேண்டியிருக்கும் எனத் திரும்பத் திரும்பக் கூறியுள்ளது. ட்ரொட்ஸ்கி அரசியல் புரட்சிக்கு அழைப்பு விடுத்தது இந்த அல்லது அந்த அதிகாரத்துவ அடாவடித்தனங்களின் பேரிலான ஏதோ ஒரு வகையான மிகைப்பட்ட பிரதிபலிப்பாக அன்று. ஒரு அரசியல் புரட்சி அவசியமென அவர் குறிப்பிட்டார். ஏனெனில் அந்த வழியில் மட்டுமே சோவியத் ஒன்றியம் ஒரு தொழிலாளர் அரசு என்ற முறையில் ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப் பேணப்பட முடியும்.

சீர்கேடுப் போக்கு என்பது முடிவின்றித்தொடர்ந்துசெல்லும் ஒன்றல்ல. ஒரு கட்டத்தில் இச் சீர்கேடு மரணமாக மாறுகின்றது. இயக்கவியலாளர்களைப் பொறுத்தமட்டில் தொகை பண்பாக மாறுவதை ஆய்வதானது விஞ்ஞான அறிக்கையின் மிகவும் முக்கிய பணியாகும். பேர்ண்ஹாமுக்கும் ஷட்மனுக்குமான பதிலாக 1939ல் ட்ரொட்ஸ்கி எழுதிய அவரது மாபெரும் பத்திரமான 'குட்டி முதலாளித்துவ எதிர்ப்பில்' இயக்கவியல் அளவையியலுக்கும் (Logie) சோவியத் யூனியன் பற்றிய ஆய்வுகளுக்கும் இடையேயான உறவுகளை அவர் விளக்கினார்.

"கடைகெட்ட சிந்தனைகள் 'முதலாளித்துவம்', 'ஒழுக்கம்', 'சுதந்திரம்', 'தொழிலாளர் அரசு', ஆகியவற்றை நிலையான சாராம்சங்களாக கொண்டு முதலாளித்துவம் முதலாளித்துவத்துக்குச் சமமானது, ஒழுக்கங்கள் ஒழுக்கத்திற்குச் சமமானவை ஆகியன எனக்கொண்டு செயற்படுகின்றது. இயக்கவியல் சிந்தனை சகல பொருட்களையும், தோற்றப்பாடுகளையும் அவற்றின் தொடர்ச்சியான மாற்றத்தில் ஆய்வு செய்கின்றது. அந்த மாற்றங்களின் சடவாத நிலைமைகளினை நிர்ணயம் செய்கையில் ஒரு ஆய்வுக் கட்டத்துக்கு அப்பால் ஒரு A, A இல்லாமல் போகின்றது. ஒரு தொழிலாளர் அரசு, ஒரு தொழிலாளர் அரசு இல்லாது போகின்றது.

"கடைகெட்ட சிந்தனையின் அடிப்படை விதியானது, நிலையான உள்வரி அசைவினைக் கொண்ட யதார்த்தத்தின் அசைவற்ற பதிவுகளை உள்ளடக்கிக் கொள்ளவே விரும்புகின்றது என்பதிலேயே தங்கியுள்ளது. அவை இயக்கவியல் சிந்தனை கருத்துப்பாடுகளுக்கு நெருங்கிய கிட்டத்தட்டச் சரியானவை திருத்தங்கள், ஸ்தூலமானவை, வளமான உள்ளடக்கம், வளைந்து கொடுக்கக்கூடியவற்றை வழங்குகின்றது. சதைப்பற்றுள்ளது என்றும் கூட நான் சொல்லலாம். அவை ஒரளவுக்கு அவற்றை உயிர்வாழும் யதார்த்தத்துக்கு நெருக்கமாக கொணர்கின்றது. ஒரு தரப்பட்ட அபிவிருத்தி கட்டத்தில் முதலாளித்துவம் பொதுவானதன்றி ஒரு தரப்பட்ட முதலாளித்துவம் ஆகும். ஒரு பின்தங்கிய நாட்டில் ஒரு பொதுவான தொழிலாளர் அரசாக்வன்றி தரப்பட்ட ஒரு தொழிலாளர் அரசாகும், ஒரு ஏகாதிபத்திய சுற்றிவளைப்பாகும்.

"ஒரு அசையும் படம் எங்ஙனம் இன்னமும் ஒரு புகைப்படத்துடன் தொடர்பு படுத்தப்படுகின்றதோ அதே வழியில் இயக்கவியல் சிந்தனை கடைகெட்ட சிந்தனையுடன் தொடர்பு படுத்தப்படுகின்றது. ஒரு அசையும்படம் இன்னமும் புகைப்படத்தினை தள்ளிவிடாததோடு அசைவு விதிகளின்படி அவற்றில் ஒரு தொகையை கூட்டிணைக்கின்றது. இயக்கவியல் முப்பரிமான எடுப்பினை நிராகரிக்கவில்லை. ஆனால் இது எமது விளக்கத்தினை நிலையாக மாறும் யதார்த்தத்துக்கு நெருக்கமாக முப்பரிமாண எடுப்பினை இணைக்குமாறு எமக்குப் போதிக்கின்றது. ஹேகல் தமது அளவையியலில் ஒரு தொகை விதிகளை நிலைநாட்டினார்: தொகை பண்பாக மாறுதல், முரண்பாடுகள் ஊடாக அபிவிருத்தி,



யெல்ட்சின்

உள்ளடக்கத்தினதும் உருவத்தினதும் மோதுதல், தொடர்ச்சியின் தடை, சாத்தியமானது தவிர்க்கமுடியாத தடைக்கு உள்ளாதல் ஆகியன. அரம்பப் பணிக்கு ஒரு சாதாரண முப்பமான எடுப்புப் போன்று இவை கோட்பாட்டுச் சிந்தனைக்கு முக்கியமானது."

பின்னர் ட்ரொட்ஸ்கி குறிப்பிட்டதாவது: "பேர்ண்ஹாம் ஒரு இயக்கவியல் சடவாதியாக இருந்திருப்பின் அவர் பின்வரும் மூன்று பிரச்சினைகளை ஆய்ந்திருப்பார்: சோவியத் ருஷ்யாவின் வரலாற்று மூலம் என்ன? இதன் இருப்பின் போது என்ன மாற்றங்களுக்கு இந்த அரசு உள்ளாகியுள்ளது? இந்த மாற்றங்கள் தொகையில் இருந்து பண்பாக மாறியுள்ளதா?"

1939ல் ட்ரொட்ஸ்கி இந்த மூன்று கேள்விகளை எழுப்பிய போது, பேர்ண்ஹாமின் குற்றச்சாட்டை நிராகரிக்கவே அங்ஙனம் செய்தார். சோவியத் யூனியன் எமது வேலைத் திட்ட மாதிரியைத் தொடர்ந்து கொண்டிராததால் ஒருவர் அதனை ஒரு தொழிலாளர் அரசாக வரைவிலக்கணம் செய்ய முடியாது என்பதே பேர்ண்ஹாமின் குற்றச்சாட்டு. சோவியத் யூனியனில் இருந்துவரும் தொழிலாளர் அரசு1917க்குமுன்னையமார்க்சிச வேலைத்திட்டத்தின்சீரிய தொழிலாளர் அரசாக இருந்துவராததால் சோசலிஸ்டுகள் சோவியத் ருஷ்யாவில் இருந்துவரும் சொத்து உறவுகளின் தன்மை போன்ற ஸ்தூலமான விவகாரங்களுக்கு இனியும் கவனம் செலுத்த வேண்டியதில்லை என்ற கருத்தை பேர்ண்ஹாம் கொண்டிருந்தார்.

ஆனால் 1939ல் ட்ரொட்ஸ்கி எழுப்பிய அதே கேள்வியை நாம் எழுப்பின், தொழிலாளர் அரசுநிர்மூலமாக்கப்பட்டுவிட்டது 'என்ற முடிவுக்கே அப்புதில் எம்மை இட்டுச் செல்கின்றது. 1985ல் இருந்து கிரேம்ளின் ஆட்சியில் கொள்கை மாற்றங்கள்—சந்தையின்

படிப்பகம்

www.padippakam.com



# சோவியத் யூனியனின் முடிவும் நான்காம் அகிலத்தின் பணியும்

இறுக்கமான தொழிற்பாட்டிற்குச் சாதகமாக திட்டமிடல் கொள்கையை நிராகரித்தல், தேசியமயமாக்கப்பட்ட கைத்தொழில். விவசாயம் மீதான தாக்குதல், உற்பத்திச் சாதனங்களின் தனிச் சொத்துடமைக்கும், கூலி உழைப்பினை அமர்த்துதலுக்கும் அரசியல் சட்ட காப்பீடுகள் வழங்கபபட்டமை - 1991



கொர்பச்சேவ்

டிசம்பர் 8ல் சோவியத் யூனியன் சட்டப்படி கலைக்கப்பட்டதன் மூலம் உச்சக் கட்டத்தை அடைந்தது. மின்ஸ்க் பிரகடனம் புதிய அரசுகள் சந்தையினதும் தனிப்பட்ட சொத்துடமையினதும் மேலாதிக்கத்தினை அடிப்படையாகக் கொண்டிருக்கும் எனப் பிரகடனம் செய்தது. சோவியத் யூனியன் திரிக்கப்பட்ட, சீர்குலைக்கப்பட்ட வடிவிலும் அக்டோபரின் சொத்து வடிவங்களை இன்னமும் கொண்டுள்ளது. சொன்னாலும்சொல்லாவிட்டாலும் சுதந்திர அரசுகளின் கூட்டில் உள்ள ஆட்சியாளர்களின் இலக்கு இது தான் என எவருமே கூற முடியாது.

## பப்லோவாத முடிமறைப்பு

இன்று நானாவிதமான குடியரசுகளின் சொத்துக்கள் — ருஷ்யக் குடியரசு உட்பட — அரச சொத்தாகவே உள்ளது என வாதிட முடியும். பிரித்தானியாவில் ட்ரொட்ஸ்கிச விரோத தொழிலாளர் புரட்சிக் கட்சியின் இரண்டுகன்னைகளுக்கு தலைமை தாங்கும் டொரன்ஸ், சுலோற்றரின் போக்கு இதுவே. இந்த உண்மையில் இருந்து அவர்கள் அரசு ஒரு தொழிலாளர் அரசாகவே இருந்து வருவதாக ஊகிக்கிறார்கள். இந்தத் தர்க்கத்தின்படி ந சுதந்திர அரசுகளின் கூட்டினை ஒரு முதலாளித்துவ அரசுகளின் சங்கம் அல்லது அமைக்கப்பட்டுக் கொண்டுள்ள முதலாளித்துவ அரசுகள் என அழைப்பதற்கு நாம் குறைந்த பட்சம் பொருளாதாரத்தில் 51% தனியார்மயமாக்கப்படும் வரை காத்திருக்க வேண்டும். அரசுக்கும் தனியார் சொத்துடமைக்குமான எண்ணளவிலான மதிப்பீட்டின் அடிப்படையில் அரச பண்பினைக் கொண்டுள்ளவற்றை நிர்ணயம் செய்ய வேண்டும் என்பது பான ஒரு மூடத்தனமான அணுகுமுறையன்றி வேறொன்றுமல்ல. உண்மையில்கடந்த காலத்தில் பப்லோவாதிகள் தொழிலாளர் அரசின் இருப்பினை அத்தகைய ஆழமற்ற அனுபவவாத ஆய்வின்மூலமே கண்டுபிடிக்க முயன்றனர்.

இது எந்த விதத்திலும் மார்க்சிசத்துடன்தொடர்புபட்டதல்ல. புதிய அரசுகள் பழைய சொத்து வடிவங்களை நிர்மூலமாக்குவதில் முனைப்பாக ஈடுபட்டுள்ளன. அவர்கள் தமது முழுச் சக்தியையும் ஒரு முதலாளி வர்க்கத்தின் வளர்ச்சியிலேயே செலுத்துகின்றார்கள். அத்தோடு உண்மையில் புதிய முதலாளி வர்க்கம் அதே பழைய ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் அடிக்குடலில் இருந்தே தோன்றுகின்றது. ஒரே பாய்ச்சலில் ஆட்சியாளர்கள் அரச சொத்துக்களை ஒழித்துக்கட்ட முடியாதிருப்பின் அதற்குக் காரணம் இந்த தேசியமயமாக்கப்பட்ட சொத்துக்களில் பெரும்பாலானவை தனியார்மயமாக்கப்படுவதற்கு நீண்ட காலத்துக்கு முன்னரே முதலாளித்துவப் புனருத்தாரணத்தின் அதே தர்க்கம் இது அழிக்கப்படும் என கட்டளையிட்டுள்ளதே. கிழக்கு ஜேர்மன் போக்கினை நாம் நல்லசிறந்த உதாரணமாக பார்க்கலாம்.

ஆனால் கிழக்கு ஐரோப்பா பூராவும் இதில் ஒன்றே அமுல் செய்யப்பட்டு வருகின்றது.

நாம் உண்மையில் செக்கோசலவாக்கிய ஹவலை அல்லது போலத்து வலஷா ஆட்சியை 'உருக்குலைந்த' தொழிலாளர் அரசுகளாக வரைவிலக்கணம் செய்ய முடியாது. அவை முதலாளித்துவ அரசுகள் என்பது தெளிவு. இது கிழக்கு ஐரோப்பா பூராவுமுள்ள ஆட்சிகளுக்கும் உண்மை. ஹவல், வலசா, இலிசு ஆட்சிகளுக்கும் யெல்ட்சின், கிராவ்சுக், சுஷ்கிவிச் ஆட்சிகளுக்கும் இடையே ஒரு பண்பு ரீதியான வேறுபாடு உள்ளது என வாதாட ஏதேனும் காரணம் உண்டா?

தேசியமயமாக்கப்பட்டதும் தனியார் சொத்துக்களுக்கும் இடையேயான இடம்பெயர் உறவின் மீது நீண்டகாலம் வசிப்பதற்கு இன்றுள்ள அரச சொத்துக்களின் அடிப்படையில் குறைந்தபட்சம் அதன் ஆட்சியின் ஆரம்பக் கட்டங்களில் ஒரு எதிர்ப்புரட்சி குட்டி முதலாளித்துவ அல்லது முதலாளித்துவ அரசாங்கம் ஆட்சி செய்யும் என ட்ரொட்ஸ்கி தீர்க்கதரிசனமாகக்கண்டதை நாம் குறிப்பிடுவோமாக. அவர் எழுதியதாவது:

''பொருளாதாரத்துக்கும் அரசுக்கும் இடையேயான வர்க்க மோதுதல் வழக்குகளை வரலாறு உண்மையில் அறிந்திருக்க வில்லையா? அறிந்திருந்தது. 'மூன்றாம் எஸ்டேட்' ஆட்சியைக் கைப்பற்றியதன் பின்னர் பல வருட காலங்களுக்கு சமுதாயம் நிலப்பிரபுத்துவமாகவே இருந்து வந்தது. சோவியத் ஆட்சியின் முதல் மாதங்களில் பாட்டாளி வர்க்கம் ஒரு முதலாளித்துவ பொருளாதாரத்தின் அடிப்படையிலேயே ஆட்சி செலுத்தியது. விவசாயத்துறையில் பல வருட காலங்களுக்கு குட்டி முதலாளித்துவ பொருளாதாரத்தின் அடிப்படையிலேயே சர்வாதிகாரம் தொழிற்பட்டது. இன்றும் கூட கணிசமான அளவுக்கு அப்படித்தான். சோவியத் ருஷ்யாவில் ஒரு முதலாளி வர்க்க எதிர்ப்புரட்சி வெற்றி கொள்ள புதிய அரசாங்கம், ஒரு நீண்ட காலப்பகுதிக்கு தேசியமயமாக்கப்பட்ட சொத்துக்களை அடிப்படையாகக் கொள்ள வேண்டியிருக்கும். பொருளாதாரத்துக்கும் அரசுக்கும் இடையேயான அந்த வகையானதொரு தற்காலிக மோதுதல் எதைக் குறிக்கிறது? இது ஒரு புரட்சியா அல்லது எதிர்ப்புரட்சியா என்பதைக் குறிக்கிறது. ஒரு வர்க்கத்தின் மீதான வேறோர் வர்க்கத்தின் வெற்றி என்பது அது பொருளாதாரத்தினை வெற்றியாளர்களின் நலன்களின் பேரில் மீளநிர்மாணிக்கும் என்பதைக் குறிக்கின்றது.''

சுதந்திர அரசுகளின் கூட்டு எனப்படும் வரலாற்று இழிவினைக் கொண்டுள்ள அரசாங்கங்கள் ஒரு புதிய முதலாளி வர்க்கத்தின் ஆட்சிக்காக சொத்துக்களின் தேசியமயமாக்கலை ஒழிக்கவும், பொருளாதார அடிப்படையை அமைக்கவும் சபதம் பூண்டுள்ளன. ஏகாதிபத்திய சந்தைகளின் மேலாதிக்கத்தின் அடிப்படையில் தமது பொருளாதாரங்களை உலக ஏகாதிபத்திய அமைப்பினுள் மீள இணைக்கஅவர்கள்சபதம் பூண்டுள்ளனர். அதில் உள்ளூர் முதலாளி வர்க்கமும் கொம்பிரதோர் பிரமுகர்களும் பெரும் ஏகாதிபத்திய சக்திகளின் கனிஷ்ட பங்காளர்களாகச் செயற்படுவர்.

## எதிர்பார்க்கப்படும் ஆபத்து

மிகவும் சரியான முறையில். இது நிகழ்வதற்கு முன்னரே இது நடந்துவிட்டது என்ற முடிவுக்கு வர நாம் மறுத்துள்ளோம். இது யதார்த்தமாகுவதற்கு எதிராக சோவியத் யூனியனிலும் அனைத்துலகிலும் தொழிலாள வர்க்கத்தை கிளர்ந்து எழச் செய்ய நாம் முயன்றுள்ளோம். ஆனால் முதலாளித்துவப் புனருத்தாரணத்தின் சாத்தியம் இன்று ஒரு யதார்த்தமாக மாற்றப்பட்டுள்ளது. புதிய நிலைமைகளில் இருந்து அவை இருந்தபடி நாம் விரும்புவது போலன்றி அவை இருப்பது போல் முன்னேறிச் செல்வது அவசியம். எந்தவிதத்திலும் நாம் சுயதிருப்தி நிலைப்பாட்டில் இருந்தன்றி - சோவியத் யூனியன் முகம் கொடுத்துள்ள ஆபத்தினை நாம் எதிர்பார்த்து காட்டவேண்டும். கிட்டத்தட்ட இரண்டு வருடங்களுக்கு முன்னர் எமது 14வது காங்கிரசில் இயற்றப்பட்ட பிரேரணையை தோழர்களுக்கு நான் வாசித்துகாட்ட விரும்புகின்றேன். அத்தோடு அது தற்போதைய 'நான்காம் அகிலம்' சஞ்சிகையிலும் அச்சிடப்பட்டுள்ளது.

50வது பிரிவில் நாம் எழுதியதாவது: ''1917ல் ருஷ்ய நிலச் சுவாந்தார்களிடமும், முதலாளிகளிடமும் இருந்து பறிமுதல் செய்து அமைக்கப்பட்ட சோவியத் யூனியனின் அரச சொத்து வடிவங்கள், இற்றைக்கு 50 ஆண்டுகளின் முன்னர் நாசி இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டதன் பின்னர் இன்று மாபெரும் ஆபத்துக்கு முகம் கொடுக்கின்றது.''

இந்த எச்சரிக்கை சட்சியில் முதலில் கலந்துரையாடப்பட்ட போது இது மிகைப்படுத்திக் கூறல் என கருதப்பட்டது. 1941ல் பல இலட்சம் ஜேர்மன் போர்ப் படைகள் சோவியத் யூனியன் எல்லைக்குள் நிலைகொண்டிருந்தன. ஆனால்,1990ல் அவ்வாறான நிலைமை உண்மையில் இல்லை. ஆதலால் 1941ன் ஆபத்து நிலைமை 1990ன் ஆபத்து நிலைமையை விட பெரிதானது அல்ல என எவ்வாறு ஒருவர் கோர முடியும்?

இந்த வேறுபாட்டினை விளக்குகையில் நாம், 1941ல் தனது சொந்த சலுகைகளின் நலனின் பேரில் அக்டோபரின் அடிப்படையில் நிறுவப்பட்ட சொத்து வடிவங்களைக் காக்கும் பொருட்டு அதிகாரத்துவம் வெகுஜனங்களை அணிதிரட்டுமாறு தள்ளப்பட்டது எனக் கூறினோம். 1941ல் அதிகாரத்துவ ஆட்சி தனியார் சொத்துக்களை புனர்நிர்மாணம் செய்யும் ஆட்சிக்கு தனது அச்சினை — 1985ல் போல் — ஏற்கனவே நகர்த்தியிருப்பின் அது முழுப்படியே பாசிஸ்டுகளுடன் சேர்ந்து அவர்களை மாஸ்கோவுக்குள் வரவழைத்திருக்கும் என நாம் சுட்டிக் காட்டினோம். 1941ல் இன்னுமோர் மிகவும் தீர்க்கமான காரணி, புரட்சியின் தாக்கங்கள் பற்றிய சோவியத் தொழிலாள வர்க்கத்தின் அரசியல் நனவாகும். அந்த வெற்றிகள் வெகுஜனங்களின் அரசியல் சிந்தனையில் பெரிதும் உயிர் வாழ்ந்து கொண்டிருந்தன. அதிகாரத்துவம் தனது சொந்தச் சலுகைகளின் பேரில் தொழிலாளர்களின் புரட்சிகர உணர்வுகளுக்கு இசைந்து கொடுத்ததோடு லெனினின் வேலைத்திட்டத்தின் காப்பாளர்களாகவும் தன்னைக் காட்டிக்கொண்டது.

அதே பாத்திரத்தில் நாம் புரட்சிகரத் தலைமையை அபிவிருத்தி செய்வதன் அவசியம் பற்றி பல அறிக்கைகளை வெளியிட்டோம். ஸ்டாலினிச ஆட்சிகளைத் தூக்கிவீசுதலானது மார்க்சிசத் தலைமையின் கீழ் அணிகளால் தலைமை தாங்கப் படவில்லை என்ற உண்மையில் இருந்து எழுந்த ஆபத்துக்களை நாம் சுட்டிக்காட்டினோம்.

உதாரணமாக 33ம் பிரிவில் நாம் கூறியதாவது:

''கிழக்கு ஐரோப்பிய ஆட்சிகளின் வீழ்ச்சியும் ஒரு புதிய புரட்சிகரச் சகாப்தமும் முற்றிலும் வர்க்கப் போராட்டத்துக்கும் அரசியல் சக்திகளின் நனவான மோதுதலுக்கும் அப்பாற்பட்டதாக முன்னேறிச் செல்வதுபோல் காட்டுவதானது சம்பவங்களின் வெறும் 'புறநிலை' பக்கத்துக்கு மட்டும் வெளிச்சம் பாய்ச்சுவதாக இருப்பதோடு ஒரு பக்கச்சார்பும், ஆபத்தும் நிறைந்ததாகும். ஒரு புரட்சிகரத் தலைமை கட்டி எழுப்பப்படாதவிடத்து இன்றைய நெருக்கடி தொழிலாள வர்க்கம் மீண்டும் பேரழிவுக்குள் தூக்கிவீசப்படும் ஆபத்தினை தன்னுடன் சுமந்து கொண்டுள்ளது. ஏகாதிபத்திய நாடுகளிலும் பின்தங்கிய முதலாளித்துவநாடுகளிலும்போன்று கிழக்கு ஐரோப்பாவிலும் சோவியத் யூனியனிலும் பழம் தொழிலாளர்அதிகாரத்துவங்கள் சிதறுண்டு போவது மட்டுமன்றி அத்துடன் தொழிலாள வர்க்கம் வென்றெடுத்த சகல சமூகத் தோட்டங்களும் நிர்மூலமாக்கப்படும் ஆபத்தும் தோன்றியுள்ளது''

இப்போது நினைத்துப் பாருங்கள் இவை கிழக்கு ஐரோப்பாவில் சம்பவங்கள் பரந்துபட்டு வந்த வேளையில் எழுதப்பட்டவை. அப்போது நாம் எந்தவிதமான நெழிவு சுழிவுகளுக்கோ அல்லது மனத்திருப்திக்கோ இடம் வைக்காமல் ஸ்டாலினிச ஆட்சிகளின் வீழ்ச்சி ஏதோ ஒரு வகையான தன்னியல்புபோக்கின் ஊடாக தொழிலாள வர்க்கத்தின் வெற்றிக்குத்தன்பாட்டில் பாதையைத் திறந்துவிடும் என்ற கருத்துப்பாட்டுக்குஎதிராகப் போராடி வந்தோம். 35ம் பிரிவில் நாம் மேலும் கூறியதாவது:

''எதிர்ப்புரட்சிஆபத்தினை வெறுமனே தொழிலாள வர்க்கத்தின் தன்னியல்பான இயக்கத்தின் அடிப்படையில் திசை திருப்பிவிட முடியாது. கிழக்கு ஐரோப்பாவில் நான்கு தசாப்தகால அடக்குமுறைகளும், ஊழல்களும், சோவியத் யூனியனின் உள்ளே ஆறு தசாப்த கால அதிகாரத்துவ கடைகெட்ட ஆட்சியும், அனைத்துலக ரீதியில் ஏகாதிபத்தியத்துடனான எதிர்ப்புரட்சிக்கூட்டும் தொழிலாள வர்க்கத்தினை ஆழமான தகவமைவின்மைக்கு இட்டுச்சென்றுள்ளன. ஸ்டாலினிசத்தை சோசலிசத்துடன் தவறாக இனங்காணும் அநேககிழக்குஐரோப்பியத் தொழிலாளர்களின் கண்களில் ஸ்டாலினிச குற்றங்கள் சோசலிசத்தை செல்வாக்கிழக்கச் செய்தஅளவுக்கு தொழிலாள வர்க்கம் ஏகாதிபத்தியத்தினதும், ஸ்டாலினி

படிப்பகம்

www.padippakam.com



# சோவியத் யூனியனின் முடிவும் நான்காம் அகிலத்தின் பணியும்

(5 -ம் பக்கத் தொடர்ச்சி)

சத்தினதும் குட்டி முதலாளித்துவ 'ஜனநாயகவாதிகளதும்' ஒரு எதிர்ப்புரட்சிச் சதியின் எதிரில் அரசியல் ரீதியில் நிராயுதபாணியாக்கப்படும் ஆபத்து இருந்து வருகின்றது. கிழக்கு ஐரோப்பிய, சோவியத் யூனியன் தொழிலாள வர்க்கம் முகம் கொடுக்கும் ஆபத்து என்னவெனில், பாட்டாளி வர்க்கத்தினுள் புரட்சிகர நனவின் அபிவிருத்தி வேகத்தைக் காட்டிலும் ஸ்டாலினிச ஆட்சிகளின் சிதறுண்டு போகும் வேகம் அதிகம் முன்னேறியுள்ளதேயாகும்.

இறுதியாக 37ம் பிரிவில் நாம் எழுதியதாவது: வரலாற்றுப் பிரச்சினைகள் பின்வருமாறு எழுப்பப்படலாம்: ஸ்டாலினிச நாடுகளில் அரசியல் புரட்சி, முதலாளித்துவப் புனருத்தாரணத்தினைக் காட்டிலும் அதிக வேகத்துடன் வளர்ச்சியடையுமா? முதலாளித்துவ நாடுகளில் சோசலிசப் புரட்சி ஏகாதிபத்தியவாதிகளின் மூன்றாம் உலக யுத்த உந்துதலைக் காட்டிலும் அதிக வேகமாக வளர்ச்சி பெறுமா?

## தோல்வியின் காரணிகள்

முதலாளித்துவப் புனருத்தாரணம் அரசியல் புரட்சியைக் காட்டிலும் அதிக வேகமாக விரிந்துள்ளதை இன்று நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். சம்பவங்களின் புதிய திருப்பத்தில் குட்டி முதலாளித்துவச் சந்தேகப் பிரகிருதிகள் தவிர்க்க முடியாத விதத்தில் புரட்சிகர முன்நோக்கினையும், தொழிலாள வர்க்கத்துக்கு மார்க்சிசம் வழங்கியுள்ள வரலாற்றுப் பாத்திரத்தினையும் தாம் நிராகரிப்பதற்கான புதிய நியாயப்படுத்தல்களையும் தேடுவர். நாம் எந்த விதத்திலும் இதற்கு இயைந்து போகாமல் இந்த இயக்கத்தின் முன்தோன்றியுள்ள புதிய பணிகளுக்கு முகம் கொடுக்க வேண்டும்,

தொழிலாள வர்க்கத்தின் தோல்வியில் பாட்டாளி வர்க்கப் புரட்சிகரமற்ற பண்புக்கான அத்தாட்சியை கண்டு பிடிப்பது எப்போதும் மிகச் சுலபம். ஆனால் ஒருவர் சோவியத் தொழிலாள வர்க்கத்தைத் கைகழுவிவிடுவதற்கு முன்னர் அல்லது இன்றைய அபிவிருத்திகளில் சோசலிசப் புரட்சிக்கான இயலாமையை காண்பதற்கு முன்னர், இந்நூற்றாண்டில் சோவியத் தொழிலாள வர்க்கம் செய்த மாபெரும் சாதனைகளையும் தியாகங்களையும் கணக்கில் கொள்ள வேண்டும்: 1905ல், 1917ல், தொடர்ந்து வந்த உள்நாட்டு யுத்தத்தில், சோவியத் யூனியனின் ஆச்சரியமான சமூக மாற்றங்களில், இரண்டாம் உலக யுத்தத்துக்கு முன்னால் 1941க்கும் 1945 க்கும் இடையே பாசிச இராணுவத்தின் தோல்வியில், இழப்புக்களின் போது அவற்றின் பருமனை புரிந்து கொள்வது இன்னமும் கடினமாகியுள்ளது. இழப்புக்களின் பருமனைப் பற்றிய ஒரு எண்ணத்தினை வழங்கும் ஒரு புள்ளி விபரத்தினை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். 1923-25க்கும் இடையே பிறந்த ஆண்களின் சனத்தொகையில் 90%க்கும் அதிகமானோர் யுத்தத்தில் அழிந்தனர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

யுத்தத்தின் பின்னர் நூற்றுக்கணக்கான நகரங்கள், பட்டினங்கள், கிராமங்களின், அழிபாடுகள் சுத்திகரிக்கப்பட்டு சோவியத் பொருளாதாரம் நிர்மாணிக்கப்பட்டது. அத்துடன் சோவியத் மக்களின் விஞ்ஞான, கலாச்சார சாதனைகள் வெளிவந்தன. அவை வெகு சமீபத்திலேயே முழு உலகினையும் ஆச்சரியப்படுத்தின. எல்லாவற்றுக்கும் மத்தியிலும் — மனக்கிலேசமூட்டும் கஷ்டங்களுக்கும், உலகளாவிய ஏகாதிபத்திய எதிர்த்தாக்குதல்களுக்கும் இடையேயும் சோவியத் தொழிலாள வர்க்கத்தின் சாதனைகள் தொழிலாள வர்க்கத்தின் 'புரட்சிகரமற்ற' பாத்திரம் எனப் படுவதை நன்கு பலம் வாய்ந்த முறையில் வரலாற்று ரீதியில் தவறென நிருபித்துள்ளது.

எவ்வாறெனினும் இந்தச் சாதனைகளைக் கணக்கில் எடுக்கும்போது — சோவியத் யூனியனின் சரிவு, சில வேளை எல்லாவற்றுக்கும் மேலாக விவரிக்க முடியாததாகத் தோன்றலாம். தாமே சிருஷ்டிக்கபோரிட்ட ஒன்றை பாதுகாப்பதன் அவசியத்தை அங்கீகரிக்க சோவியத் தொழிலாளர்கள் தவறியது எப்படிச் சாத்தியமாகும் என சோசலிச நனவு படைத்த பல தொழிலாளர்கள் கேட்கலாம். சோவியத் சமுதாயத்தின் கழிவுகளின் நலன்களின் பேரில் செயற்படும் ஒரு குட்டிக் கொள்ளையர்கள் கும்பலினூடாக சோவியத் யூனியனைச் சட்ட ரீதியில் கலைப்பது எப்படிச் சாத்தியம்?

எல்லாவற்றுக்கும் முதலாக நாம் இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் சோவியத் யூனியலின் உள்ளே ஸ்டாலினிச ஆட்சி மேற்கொண்ட பிரமாண்டமான புரட்சிகரக் காரியாளர்கள் ஒழிப்பின் தாக்கங்களை வலியுறுத்த வேண்டும். புரட்சிகர பாரம்பரியங்களின் சகல மனித பிரதிநிதிகளும்-அதாவது, புரட்சியை நனவுடன் தயார் செய்து, தலைமைதாங்கியோர் முழுமனே துடைத்துக் கட்டப்பட்டனர். அத்தோடு புரட்சியின் அரசியல் தலைவர்களுடன் சோவியத் அரசின் ஆரம்ப வருடங்களில் செழித்துவளர்ந்த புத்திஜீவிகளின் மிகவும் சிருஷ்டிகரமான பிரதிநிதிகள் ஒழித்துக் கட்டப்பட்டனர் அல்லது மௌனம்சாதிக்குமாறு பயமுறுத்தப்பட்டனர்.

மேலும் அரச சொத்தில் இருந்து தொழிலாளி வர்க்கம் ஆழமான முறையில் அந்நியப்படுத்தப்பட்டது என்பதை நாம் அங்கீகரிக்க வேண்டும். ட்ரொட்ஸ்கி குறிப்பிட்டது போல் சொத்து அரசுக்குச் சொந்தமானது; ஆனால், அரசு அதிகாரத்துவத்துக்குச் சொந்தமானது. ஒரு கோட்பாட்டு நிலைப்பாட்டில் இருந்து அரச சொத்துக்கும் முதலாளித்துவச் சொத்துக்கும் இடையேயான அடிப்படை வேறுபாடு ஒரு நடைமுறைநிலைப்பாட்டில்இருந்து பார்க்கையில் சற்றும் சம்பந்தமற்றதாகியது. வார்த்தையின் விஞ்ஞான அர்த்தத்தில் முதலாளித்துவச் சுரண்டல் இருக்கவில்லை என்பது உண்மையே. ஆனால் இது பக்டரிகளிலும் சுரங்கங்களிலும் ஏனைய வேலைத்தலங்களிலும் நாளாந்த வாழ்க்கை நிலைமை எந்தவொரு முன்னேறிய முதலாளித்துவ நாடுகளிலும் உள்ளது போல் பரிதாபகரமானதாகவும் பல தருணங்களில் இன்னும் மோசமானதாகவும் உள்ளது என்ற உண்மையை மாற்றிவிடவில்லை.

இறுதியானதும் எல்லாவற்றையும் விட மிக முக்கியமானதும் அனைத்துலக சோசலிச இயக்கத்தின் நீண்டுவந்த சிரழிவாகும். ஸ்டாலினிசம் நீண்ட காலத்துக்கு முன்னரே தனி ஒரு நாட்டில் சோசலிசம் இலக்கினைப் பிரகடனம் செய்தது. ஆனால் அது அனைத்துலகத் தொழிலாளர் இயக்கத்தின் முக்கியத்துவத்தினை அடியோடு மறுத்துவிடவில்லை. மோசடிக் காரணங்களுக்காக மட்டும் முதலாளித்துவத்திற்கு எதிரான அனைத்துலக இயக்கமாக சோவியத் யூனியனை வாயளவில் காட்டிக் கொண்டது. அதிகாரத்துவம் துரோகமான முறையில் அனைத்துலகப் பாட்டாளி வர்க்கத்தின் போராட்டங்களைக் காட்டிக் கொடுத்தது. ஆனால் சோவியத் யூனியனின் அரசியலில் முன்னேற்றம் கண்ட ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் உலக சோசலிசத்தின் வெற்றியை வாழ்வில் காணும் நம்பிக்கையை இன்னமும் கொண்டிருந்தனர். பல தசாப்தங்களுக்கு நின்று பிடித்து வந்த இந்த அனைத்துலக உணர்வு, இலட்சோப லட்சம் சோவியத் தொழிலாளர்களின் மன வுறுதியில் ஆழமான தாக்கத்தை உண்டு பண்ணியது.

ஆனால் அனைத்துலகத் தொழிலாளர் இயக்கத்தின் அதிகரித்துவந்த பலவீனங்கள் சோவியத் தொழிலாளர்களின் சிந்தனையில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. சோவியத் தொழிலாளர்களின் பரந்த தட்டினருக்கு சோசலிச இலக்கு இன்னும் சொன்னால் கம்யூனிச இலக்கு ஒரு கானல் நீராகவே தெரிந்தது. சோவியத் பொருளாதார நெருக்கடி பிரச்சினைகள் நீண்ட காலத்துக்கு முன்பே 'தனி நாட்டில் சோசலிசம்' முன்நோக்கினை செல்வாக்கிழக்கச் செய்துவிட்டது. அத்தோடு அனைத்துலக நிலைமையின் சுமைகள் சோவியத் தொழிலாள வர்க்கத்தின் மேல் அதிகரிக்க அதிகரிக்க இம்முன்நோக்கு மேலும் செல்வாக்கிழந்தது.

சிறப்பாகக் கடந்த தசாப்தத்தில் உலகின் எந்தவொரு பாகத்திலும் முதலாளித்துவ எதிர்த்தாக்குதலின்பேரிலான தொழிலாள வர்க்கத்தின் எந்தவொரு எதிர்ப்பும் வெளிப்படையாகச் சரிந்தமை சோவியத் தொழிலாளவர்க்கத்தின் சிந்தனையில் மனவிரக்தி தாக்கத்தை உண்டுபண்ணியது. முதலாளித்துவம் 'வெல்லமுடியாத' வாசனையைப் பெற்றது. இந்த வாசனை உலகம் பூராவும் இருந்த முதுகெலும்பற்ற தொழிலாளர் அதிகாரத்துவங்களின்வெறும்மாயையின் வெளிப்பாடாக இருந்த போதிலும் அது ஒவ்வொரு தருணத்திலும் தொழிலாளர்களைக் காட்டிக் கொடுத்து, முதலாளி வர்க்கத்துக்கு இயைந்து போயிற்று. ஆனால் சோவியத் தொழிலாளர்கள் கண்டதோ மூலதனத்தின் அனைத்துலகத் தாக்குதலுக்கு எதிரான தொழிலாளர் பிரிவுகளின் கசப்பான எதிர்த்தாக்குதல் அன்று. ஆனால் கண்டதோ தோல்விகளும் தோல்விகளின் பெறுபேறுகளுமே. உலக அரசியல் பயணத்தில் தொழிலாள வர்க்கத்தின் நேரடிச் செல்வாக்கு நிலையாகவிழ்ச்சி கண்டதன் நேரடி விளைவாக சோவியத் தொழிலாளர்களின் அந்தஸ்து மேலும் மேலும் தனிமைப்பட்டதாய் தோன்றியது. சோவியத் தொழிலாளர்களுக்குப் பாதகமாக இருந்த இந்நிலைமை அதிகாரத்துவங்களதும் குட்டி முதலாளித்துவத்தினதும் கர்வத்தையும், ஆவலையும் அதிகரித்தது. சோவியத் தொழில்சார் நிபுணர்களும் தொழில் நுட்பவியலாளர்களும் அமெரிக்காவுக்குச் சென்ற தமது உறவினர்களிடம் இருந்து கார், இலகுவான காசு பற்றி ஜொலிக்கும் அறிக்கைகளைப் பெற்றதைத் தொடர்ந்து சோவியத் அமைப்பினால் அவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த சார்புரீதியில் அற்பமான வசதிகளையிட்டுப் பெரிதும் அதிருப்தி அடைந்தனர், அதே நேரத்தில் அதிகாரத்துவம் தொழிலாள வர்க்கத்தின் பலவீனம் கண்டுவரும் அந்தஸ்தினைக் கருத்தில் கொண்டு முதலாளித்துவப் புனருத்தாரணத்தினை அமுல் செய்யும் சாத்தியத்தினையிட்டும், உற்பத்திச் சாதனங்களின் உடைமையின் அடிப்படையில் நன்கு உறுதியாகத் தமது சொந்த வசதிகளை அமைப்பதையிட்டும் பெரிதும் நம்பிக்கை கொண்டது.

## உக்கிரமான போராட்டம் எதிரில்

உண்மையில் சோவியத் யூனியனை சட்டரீதியில்கலைப்பதற்கும் தொழிலாள வர்க்கத்தின் போராட்ட இயலளவை கலைப்பதற்கும் இடையே ஒரு வேறுபாடு உண்டு. இந்த இரண்டும் ஒன்றல்ல, முதலாளித்துவப் புனருத்தாரணத்தின் தாக்கத்திற்குத் தொழிலாள வர்க்கத்திடம் இருந்து எதுவித எதிர்ப்பும் ஏற்படாது என்பதை நாம் எந்தவிதத்திலும் கருதவில்லை. முதலாளித்துவத்தினைச் சமாதானமாகவும், ஜனநாயகரீதியிலும் புனருத்தாரணம் செய்ய முடியாது என நாம் பலமுறை குறிப்பிட்டுள்ளோம். நாம் அந்த நிலைப்பாட்டையே கொண்டுள்ளோம். தொழிலாள வர்க்கத்தின் மீதான அரசின் தாக்குதல்கள் வடிவிலும் தொழிலாள வர்க்கத்தின் எதிர்த்தாக்குதல் வடிவிலும் வன்முறைக்கு எதுவித தட்டுப்பாடும் இராது. அரசு, தொழிலாள வர்க்கத்துடனான ஒரு இரத்தம் தோய்ந்த மோதுதலுக்கு தயார்செய்து வருகின்றது. வாழ்க்கைத் தரத்தின் வீழ்ச்சியால் தூண்டப்படும் எதிர்ப்பினைக் கையாள யெல்ட்சின் தனது நேரத்தில் பெரும்பகுதியை இராணுவப் படைகளை மீள அணிதிரட்டுவதிலேயே செலவிட்டு வருவதாக 'த பினான்சியல் டைம்ஸ்' அறிவித்துள்ளது

சோவியத் தொழிலாளர் வர்க்கத்தின் பெரும் பகுதியினர் தாம் வறுமைக்குள் தள்ளப்படுவதைக் காண்கின்றனர், ரூபிளின் உலக விலையின் படி சோவியத் யூனியன் சராசரித் தொழிலாளியின் மாதச் சம்பளம் 5 டாலருக்கும் குறைவானது. அதாவது பங்களாதேஷ் போன்ற நாடுகளின் நிலைமைக்கு சோவியத் தொழிலாளி கிட்டத் தட்ட இரவோடிரவாகத் தரம் இறக்கப்படும் நிலை உள்ளது,

சில தினங்களுக்கு முன்னர் 'நியூயோக் டைம்ஸ்' பத்திரிகையில் கிழக்கு ஐரோப்பிய, சோவியத் யூனியன் பிறப்பு விதத்தின் வீழ்ச்சி பற்றிய ஒரு அறிக்கை பிரசுரமாகியது. அந்த வீழ்ச்சி உள்நாட்டு யுத்தம், பரந்த தொற்று நோய் காலப்பகுதிகளில் காணப்பட்ட பருமனைக் கொண்டது. குழந்தைகளைப் பிரயோசனமுள்ளதாக்கிய சலுகைகளை வழங்குவதன் மூலம் பழைய அமைப்பு ஒரு உயர் பிறப்பு விகிதத்தினைத் தாக்கிப் பிடித்ததே அதற்கான காரணம் என நிபுணர்கள் கூறுகிறார்கள். சோவியத் யூனியனில் பெண்களுக்கு மகப்பேற்று விடுமுறையும், இரண்டு மூன்று வருடங்கள் நீடித்த பிரசவ விடுமுறையும் வழங்கப்பட்டது. ஆனால் இன்று இலட்சோப லட்சம் மக்கள் தம்மையே போஷிப்பது எப்படி என அறியாதுள்ளனர். தமது குடும்பங்களை எப்படிப் போஷிப்பது என்று அறியாதுள்ளனர். கடைசியாகக் கிடைத்த புள்ளிவிபரங்களின் படி சில பெரும் நகரங்களில் இறப்பு விகிதம் பிறப்பு விகிதத்தைத் தாண்டிச் சென்றுள்ளது.

(பாகம் 2: 7ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# சோவியத் யூனியனின் முடிவும் நான்காம் அகிலத்தின் பணியும்

அமெரிக்க ட்ரொட்ஸ்கிச இயக்கமான 'வேர்க்கஸ் லீக்' தேசியச் செயலாளர் டேவிட் நோர்த் 1992 ஜனவரி 4ல் டெட்ரொய்ட் அங்கத்தவர் கூட்டத்தில் சமர்ப்பித்த அரசியல் அறிக்கையின் இரண்டாம் பாகம்.



டேவிட் நோர்த்

சில தினங்களுக்கு முன்னர் 'நியூயோக் டைம்ஸ்' பத்திரிகையில் கிழக்கு ஐரோப்பிய, சோவியத் யூனியன் பிறப்பு வீதத்தின் வீழ்ச்சி பற்றிய ஒரு அறிக்கை பிரசுரமாகியது. அந்த வீழ்ச்சி உள்நாட்டு யுத்தம், பரந்த தொற்று நோய்க் காலப் பகுதிகளில் காணப்பட்ட பருமனைக் கொண்டது. குழந்தைகளைப் பிரயோசனமுள்ள தாக்கிய சலுகைகளை வழங்குவதன் மூலம் பழைய அமைப்பு ஒரு உயர் பிறப்பு விகிதத்தினைத் தாக்கிப் பிடித்ததே அதற்கான காரணம் என நிபுணர்கள் கூறுகிறார்கள். சோவியத் யூனியனில் பெண்களுக்கு மகப்பேற்று விடுமுறையும் இரண்டு மூன்று வருடங்கள் நீடித்த பிரசவ விடுமுறையும் வழங்கப்பட்டது. ஆனால் இன்று இலட்சோப லட்சம் மக்கள் தம்மையே போஷிப்பது எப்படி என அறியாதுள்ளனர். தமது குடும்பங்களை எப்படிப் போஷிப்பது என்று அறியாதுள்ளனர். கடைசியாகக் கிடைத்த புள்ளி விபரங்களின் படி சில பெரும் நகரங்களில் இறப்பு விகிதம் பிறப்பு விகிதத்தைத் தாண்டிச் சென்றுள்ளது.

எதிர்ப்புரட்சிஎதிர்த்தாக்குதலில் இறங்கியுள்ளது என்பது தெளிவு ஆனால் அது தன்னைப் பலப்படுத்திக் கொள்ளவில்லை. எல்லா ஒப்புவமைகளும் வரையறுக்கப்பட்டவை. தொழிலாள வர்க்கம் ஒரு தோல்வி கண்டுள்ளது என நாம் கூறும்போது 1933 சம்பவங்களுடன் பேரளவில் ஒப்பிடுவதை நாம் நோக்கமாக கொள்ளவில்லை. ஹிட்லரின் வெற்றி, அவரின் பெரிதும் அபிவிருத்தி கண்ட பாசிசக் காரியாளர்களினால் அரச அதிகாரம் துரிதமாகப் பலப்படுத்தப்பட்டதால் பண்புமயமாக்கம் செய்யப்பட்டது. குட்டி முதலாளி வர்க்கத்தின் பரந்த ஆதரவின் அடிப்படையில் அவர் ஆட்சிக்கு வந்தார். அவர் வெகு விரைவாக ஆட்சிக் கயிற்றைத் தன் கரங்களுள் கொணரும் நிலையில் இருந்தார்.

சோவியத் யூனியனில் இதற்குச் சமானமான ஒரு நிலைமை இருப்பதாகக் கூறுவது ஒரு மிகைப்படுத்தலாகும். மேலும் சுதந்திர அரசுகளின் கூட்டு ஒரு வரலாற்றுக் கருச்சிதைவாகும். அது முன்னர் இருந்து வந்ததற்கு ஒரு தாக்கிப்பிடிக்கக்கூடிய ஒரு பதிலீட்டினை எதுவிதத்திலும் பிரதிநிதித்துவம் செய்யவில்லை. தாக்கிப் பிடிக்கக் கூடியது என நாம் குறிப்பிடுவது பொருளாதார அபிவிருத்திக்கான ஒரு உறுதியான அத்திவாரத்தையே. இன்று வரை அதிகாரத்துவம், கொம்பிரதோர், 'ஜனநாயக்வாதிகள்' கடைப்பிடித்த கொள்கைகள் முற்றிலும் பாதகமான பண்பினையே கொண்டுள்ளன. அதாவது, இவை தேசியமயமாக்கப்பட்ட பொருளாதாரத்தினை நிர்மூலமாக்குவதையே ஒரே இலக்காகக் கொண்டிருந்தன. ஆனால் ஒரு தீ வைப்பவனின் வேலை, ஒரு கட்டடக்கலைஞன், நிர்மாணிப்பவனின் வேலையைக் காட்டிலும் மிகவும் சிக்கல் குறைந்தது. கட்டடக் கலைஞனும் நிர்மாணிப்பவனும் சிருஷ்டிக்க பல்லாண்டுகள் எடுத்தவற்றை ஒழித்துக்கட்ட ஒரு தீ வைப்பவனுக்கு ஒரு நெருப்புக் குச்சியும் மண்ணெண்ணையில் தோய்த்தெடுத்த ஒரு கந்தல் துணியும் மட்டுமே தேவை: இப்போது இந்தத் தீ வைப்பவர்கள் அவர்களின் சொந்தப் பைத்தியத்தின் பெறுபேறுகளுடன் நேருக்கு நேர் கொணரப்பட்டுள்ளனர். சுதந்திர அரசுகளின் கூட்டுக்கு எந்தவொரு நீடித்து நிற்கும் தாக்கிப்பிடிக்கும் தன்மையைக் கற்பிப்பது மிகவும் பாரதூரமான தவறாகும் என நான் நினைக்கின்றேன். மாறாக இந்தச் சுதந்திர அரசுகளின் கூட்டு எனப்படுபவை சோவியத் ருஷ்யாவினதும் குடியரசுகளதும் அழிவுப்போக்கில் ஒரு இடைமருவு கட்டம் மட்டுமே. குடியரசுகளுக்கு இடையேயும் குடியரசுகளுக்கு உள்ளேயுமான போர்கள் தவிர்க்க முடியாதவை.

## தேசிய இனப் பிரச்சினை

சோவியத் புரட்சியின் வீரியம் நிறைந்த காலப்பகுதியில் போல்ஷிவிக்குகள் ஆற்றிய பணிக்கும் ஸ்டாலினிச 'கொம்பிரதோர்' மாபியாவுக்கும் இடையேயான பெரும் வேறுபாட்டினைக் காண ஒருவர் 1991ன் முடிவில் தோன்றிய பலவீனமான கூட்டினை 1922ல் ஸ்தாபிதம் செய்யப்பட்ட சோவியத் யூனியனுடன் எதிரும் புதிருமாக நிறுத்தவேண்டும்.

அக்டோபர் புரட்சியின் பல மூல வெற்றிகளைப் போலவே லெனினின் தலைமையின் கீழ் போல்ஷிவிக்குகளால் அமுல் செய்யப்பட்ட தேசியக் கொள்கை ஸ்டாலினிஸ்ட்டுகளால் முழுமனே காட்டிக் கொடுக்கப்பட்டது. ஆதலால் முன்னர் மிகவும் பாரதூரமான பின்தங்கிய நிலைமையில் வாழ்ந்து வந்த மக்களிடையே சமூக, கலாச்சார, பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு முதலில் பெரிதும் ஆக்கபூர்வமான தீர்வுகளை வழங்கிய - தேசிய சொத்துப் போன்ற சோவியத் அரசின் வரலாற்றின் மூலங்கள் பெரிதும் மறுக்கப்பட்டுவிட்டன.

சமீபத்தில் நான் ஈ.எச். கார் எழுதிய 'ருஷ்யப் புரட்சியின் வரலாறு' என்னும் நூலின் முதலாவது தொகுப்பில் போல்ஷிவிக்குகளால் அமுல் செய்யப்பட்ட தேசியக் கொள்கையின் ஒரு தலைசிறந்த சுருக்கத்தினை வாசித்தேன். தான் ஒரு மார்க்சிஸ்டாக இல்லாது போனாலும் சோவியத் யூனியனின் சிருஷ்டியில் லெனினின் சாதனை ஒரு ஆக்கபூர்வமான மேதாவியின் பணி எனவும், அது 1917ல் போல்ஷிவிக்குகளின் வெற்றியையுமகூடத் தாண்டிவிட்டது எனவும் கார் அதில் வலியுறுத்தியுள்ளார். லெனினின் சுயநிர்ணய வேலைத்திட்டம் முன்னேறிய முதலாளித்துவ நாடுகளின் முதலாளி வர்க்கம் தீர்வு காணாத பிரச்சினைகளுக்குப் பதில் வழங்கியுள்ளதாகக் கார் சுட்டிக்காட்டியுள்ளார்.

கார் எழுதியதாவது :— ''தேசிய சுயநிர்ணயம் பற்றிய போல்ஷிவிக்குகளின் கொள்கை, ஒரு முதலாளித்துவ சமுதாயத்தில் பிரிந்து செல்லும் உரிமையை அங்கீகரிப்பதில் இருந்து தேசிய இனங்களுக்கிடையே சமத்துவத்தை அங்கீகரித்தல், தேசிய இனங்களைக் கொண்ட ஒரு சோசலிச சமூகத்தில் ஒரு தேசிய இனம் மற்றுமோர் தேசிய இனத்தினால் சுரண்டப்படுவதை ஒழித்தல் வரையிலான அதன் பரிணாமத்தினை பூர்த்தி செய்துள்ளது. அவற்றுக்கிடையேயான இணைப்பு லெனினின் எடுகோளான ஒரு சுயவிருப்பின் பேரிலான கூட்டாகும். அதன் ஊடாக இந்த பூரணத்துவம் அடையப்படும். சோசலிசத்தின் கீழ் நிர்ப்பந்தத்தின் மூலகம் அரசாங்கத்திடமிருந்து மறைந்து, நிர்வாக விதிகளை சுயவிருப்பின் பேரில் ஏற்றுக்கொள்வதால் பதிலீடு செய்யப்படும் என்ற லெனினின் உறுதியான சொந்த நம்பிக்கையில் இந்த எடுகோள் சார்ந்திருந்தது... 1919 அளவில் முதலாளித்துவச் சுயநிர்ணயக் கோட்பாடு தலைதப்புவது சாத்தியமில்லாத வகையில் முட்டுச் சந்தினை எட்டியதை இதற்குச் சாதகமாகக் கூற முடியும்.''

கார் குறிப்பிடும் முட்டுச் சந்து தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை பற்றிய முதலாளித்துவக் கொள்கை. வழக்காறான சமத்துவத்தினை மட்டும் அங்கீகரித்துவிட்டு, ஒடுக்கப்படும், ஒடுக்கும் தேசிய இனங்கள் இருந்து வருகின்றன என்ற உண்மையைக் கணக்கில் எடுக்காமல் விட்டுவிடுகிறது என்ற உண்மையாகும். உலகம் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு தொகை ஏகாதிபத்திய அரசுகளால் ஆளப்படுகின்றது என்பதையும் அவை ஒரு தொகை பின்தங்கியநாடுகளைஈவிரக்கமின்றிச் சுரண்டிக் கொண்டு கபடத்தனமாக தேசங்களின் சமத்துவம் பற்றிப் பிரகடனம் செய்கின்றன.

கார் விளக்கியது போல் :— ''முதலாளித்துவ ஒழுங்கு, ஊழியப் பகுப்பினை முன்னேறிய அல்லது கைத்தொழில் நாடுகளுக்கும் பின்தங்கிய அல்லது காலனித்துவ நாடுகளுக்கும் இடையேயான வடிவினை எடுக்கச் செய்துள்ளது. இது நாடுகள் நிச சமத்துவத்தினை அடைய முடியாமல் செய்துள்ளது. ஒரு சோசலிச அமைப்பில் மீள இணைதல்கருத்துப்பாடு உண்மையானதும் வெறும் வழக்கானான சமத்துவம் அற்றதும் தேசியங்களிடையே முட்டுக்கட்டையை உடைக்க ஒரு உறுதியான கற்பனாதிறன் கொண்ட முயற்சியாகும். கொள்கையின் முக்கியத்துவம், கைத்தொழில் விவசாய நாடுகளிடையேயான வேறுபாட்டை நீக்கி, அதிகாரத்தினை நிலைநாட்ட எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் தங்கியுள்ளது என்பதை குறைத்து மதிப்பிடமுடியாது.... சோவியத் தேசிய இனக்கொள்கையின் முக்கியத்துவத்தினை அதன் வரலாற்று அமைப்பிலோ அல்லது அதன் இறுதி செல்வாக்கிலோ மிகைப்படுத்தி விடுவது கடினம். யுத்தத்தின் அழிபாடுகள், சிதைவுகள், புரட்சி, உள்நாட்டு யுத்தங்களின் பின்னர் ஸாரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த ஏறக்குறைய சகல பிராந்தியங்களையும் மீளக்கூட்டிய லெனினின் ஆச்சரியமான சாதனை ஆரம்பத்தில் பருதீர்க்கமான காரணியாகும். அத்தோடு உலகின் பல பாகங்களிலும் இது சோவியத் வெளிநாட்டுக் கொள்கையின் ஒரு சக்திவாய்ந்த பாகமாகவும் நீண்டகாலம் விளங்கியது.''

சோவியத் ருஷ்யாவின் பெரிதும் பின்தங்கிய பிராந்தியங்களின் பொருளாதார அபிவிருத்தியை சோவியத் யூனியன் முன்னேற்றிய அளவுக்கு-உதாரணமாக மத்திய ஆசியக் குடியரசுகளில் சில அக்டோபர் புரட்சி அடிப்படையாகக் கொண்ட ஆரம்பஅடிப்படைக் கொள்கைகளுள் நின்று வந்தன. ஸ்டாலினிச நடைமுறையால் அவை சமரசம் கண்டும் மீறப்பட்டும் வந்த போதிலும் யூனியன் ஆரம்பத்தில் ஒரு வரம்பினை வழங்கியது. முதலாளித்துவம் அபிவிருத்தி செய்ய இலாயக்கற்றதென நிரூபித்த உலகின் அந்தப் பிராந்தியங்களில் பெரும் உயர்ந்த மட்டப் பொருளாதார, சமூக, கலாச்சாரங்களைச் சாதிக்க முடிந்தது. சோவியத் தொழிலாளர்களால் ஸ்டாலினிச ஆட்சியாளர்களைத் தூக்கிவீசமுடிந்திருப்பின் சோவியத் ஒன்றியத்தின் ஜனநாயக உள்வல்லமை மறுமலர்ச்சி செய்யப்பட்டிருக்கும். ஆனால் சுதந்திர அரசுகளின் கூட்டின் தலைவர்களால் உருவாக்கப்பட்டுள்ள குடியரசுகளுக்கிடையேயான உறவுகளில் முற்போக்குத் தன்மை எதுவும் கிடையாது. இந்த அடிப்படை ஒரு காலத்துக் கொவ்வாத பிற்போக்கானது.

குடியரசுகளுக்கிடையேயான உறவுகளை 'நிச சந்தைப் பெறுமானங்களின்' அடிப்படையில் சுதந்திர அரசுகளின் கூட்டினுள்ளே வைத்துக் கொள்ள விரும்புவதாகக் குறிப்பிடும் யெல்ட்சினின் அறிக்கை சுதந்திர அரசுகளின் கூட்டின் பிற்போக்குப் பண்பினை நன்கு விளக்கமாக அம்பலப்படுத்தியுள்ளது. அவர் கருதுவது என்ன? ருஷ்யன் பெடரேசன் பழைய சோவியத் யூனியனால் அநீதியான முறையில் மத்திய ஆசிய குடியரசுகளுக்கும் ஏனையவற்றுக்கும் சுமார் 3300 கோடி டாலர்களை ஆண்டொன்றுக்கு மானியமாக வழங்கும்படி நெருக்கப்பட்டுள்ளது என்பதே அவரின் வாதம். இன்று யெல்ட்சின் இம்மானியத்தை ருஷ்யா கியூபாவுக்கான மானியத்தை ஏற்கனவே வெட்டியது போல் வெட்டிவிட யோசிக்கின்றார்.

முதலாளித்துவப் பத்திரிகைகள் சு. அ. கூட்டினுள்ளான உறவுகளின் தன்மை பற்றிக் குறிப்பிடுகையில், ருஷ்

10 ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com

 இலங்கையில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது.


# தொழிலாளர் பாதை

3/-

● மாதமிரு இதழ் — 418 ● 1992 ஏப்ரல் 09 வியாழக்கிழமை


## விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடையின் பின்னணியில்

விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்ய முதலாளித்துவ இந்திய நரசிம்மராவ் அரசாங்கம் எடுத்த நடவடிக்கையை வன்மையாகக் கண்டனம் செய்யும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், இது தொழிலாள—ஒடுக்கப்படும் மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளுக்கு எதிராக இந்தியத் துணைக்கண்ட ஆளும் வர்க்கம் எடுத்துள்ள பிற்போக்கு நடவடிக்கையின் மற்றுமோர் உச்சக்கட்டம் எனச் சுட்டிக் காட்டுகின்றது. விடுதலைப் புலிகள் இயக்கத் தலைமையின் வங்குரோத்து முதலாளித்துவ தேசியவாத கொள்கையுடன் கிஞ்சித்தும் சமரசமின்றிப் போராடிவரும் பு. க. க., இத் தடை கடந்த 40ஆண்டுகளுக்கு மேலாக 'நேரு சோசலிசம்', 'கூட்டுச் சேராமை' போன்ற முகமூடிகளில் நடத்திய அர

(14 ம் பக்கம் பார்க்க)

# இனவாத யுத்தத்தின் பின்னணியில்:
# ஏகாதிபத்தியப் படைகளை அழைக்க முயற்சி

வடக்கு — கிழக்குக் கடற் பிராந்தியத்தில் இந்திய — இலங்கைக் கடற்படைகளின் கூட்டு ரோந்தினை ஒழுங்கு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பிரேமதாச அரசாங்கம் இந்திய அரசாங்கத்திடம் வேண்டியுள்ளதாக முதலாளித்துவப் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன. அமெரிக்க ஏகாதிபத்திய யுத்த இயந்திரத்துடன் மிகவும் நெருங்கிய உறவுகளை ஏற்படுத்திக் கொண்டுள்ள இந்திய இராணுவத்துக்கு பிரேமதாச அரசாங்கத்தின் இந்தக் கூட்டு ரோந்துக்கான அழைப்பு, ஏகாதிபத்தியப் படைகளை அழைத்துக் கொள்வதற்கான ஒரு முயற்சி என தொழிலாளர் பாதை' தொழிலாள வர்க்கத்தினையும், ஒடுக்கப்படும் மக்களையும் எச்சரிக்கை செய்கின்றது.

இந்தக் கடற்படைக் கூட்டு ரோந்துக்கான இலங்கை அரசாங்கத்தின் யோசனை, விடுதலைப் புலிகளின் ஆயுத விநியோக வழியைத் தடை செய்யும் சாட்டிலேயே இடம் பெறுகின்றது. சமீபத்தில் இலங்கைக் கடற்படையின் கிளான்சி பெர்னாந்து இந்தியாவுக்கு விஜயம் செய்தபோது இதுபற்றிஇந்தியக்கடற்படை மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தியதாக முதலாளித்துவப் பத்திரிகைகளுக்குத் தெரிவித்தார். இந்தியக் கடலோரப் பாதுகாப்புப் படைகளின் தலையீட்டினால் ஏற்கனவே பலன் கிடைத்துள்ளதாகக் குறிப்பிட்ட பெர்னாந்து, விடுதலைப் புலிகளுக்கு இறுதி அடி கொடுக்கும்

(16 ம் பக்கம் பார்க்க.)

## மார்ச் 22, தொழிலாளர் பேராளர் மாநாடு:
# யூ. என். பி.யை வெளியேற்றும் பொது வேலை நிறுத்தத்துக்கு அழைபபு

மார்ச் 22ம் திகதி கொழும்பு பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் அதன் இளைஞர் இயக்கமான இளம் சோசலிஸ்டுகளும் நடாத்திய தொழிலாளர் பேராளர் மகாநாடு யூ. என். பி. தாக்குதங்களுக்கு எதிராக புரட்சிகர வேலைத் திட்டத்தின் அடிப்படையில், அணிதிரளுமாறு தொழிலாளர்களையும், ஒடுக்கப்படும் மக்களையும், இளைஞர்களையும் வேண்டிக் கொண்டது.

இம்மகாநாட்டில் நகர, தோட்டத் தொழிலாளர்களையும், கிராமப்புற ஏழைகளையும், ஒடுக்கப்படும் பெண்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் சுமார் 200 பேராளர்கள் கலந்து கொண்டனர். இம்மகாநாடு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் அரசியல் குழுவினால் வெளியிடப்பட்ட 'யூ. என். பி. தாக்குதல்களுக்கு எதிரான போராட்ட வேலைத்திட்டம்' என்ற பிரசுரத்தின் அடிப்படையில் இடம்பெற்ற அரசியல் பிரச்சாரத்தினை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

யூ. என். பி. அரசாங்கத்தின் தாக்குதல்களுக்கு எதிராக தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களிடையே வெடித்துள்ள கொதிப்பினை வெறும் 'பாத யாத்திரை' போன்ற மோசடி எதிர்ப்பியக்கங்களுள் தள்ளிவிட சமசமாஜ — கம்யூனிச-நவசமசமாஜ கட்சிகளின் தலைவர்கள் மும்முரமாக ஈடுபட்டு வந்த ஒரு கால கட்டத்தில் இம் மகாநாடு இடம் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

மகாநாட்டின் அரசியல் அறிக்கையை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பொதுச் செயலாளர் தோழர். விஜே டயஸ் சமர்ப்பித்தார். ஏகாதிபத்திய அமைப்பு நெருக்கடியையும், ஏகாதிபத்திய முன்னணி நாடுகளுக்கிடையேயான மோதுதல்களையும், மூன்றாம் உலக யுத்த ஆபத்தினையும், புதிய காலனித்துவ சரண்டலுக்கான தயாரிப்புக்களையும் அவர் தமது அறிக்கையில் விரிவாகச் சுட்டிக்காட்டினார். (இந்த அறிக்கை அடுத்த தொழிலாளர் பாதையில் வெளிவரும்)

இந்நிலைமையில் இலங்கையிலும் உலகளாவிய ரீதியிலும் தொழிலாளி வர்க்கம் வேலைத்திட்டம், தலைமை தொடர்பாக முகம் கொடுக்கும் நெருக்கடியின் ஆழத்தினைப் புரிந்து கொள்ள சோவியத் யூனியனின் வீழ்ச்சியுடன் அங்கு தொழிலாள வர்க்கம் முகம் கொடுக்கும் நெருக்கடியைப் புரிந்து கொள்வது அவசியம் என அவர் சுட்டிக்காட்டினார்.

தொழிலாள வர்க்கத்தினுள் துரோகத் தலைமைகளை வெளியேற்றி, நான்காம் அகிலத்தை கட்டியெழுப்பும் விதத்தில் பலம் வாய்ந்த அரசியல் கோட்பாட்டு, அமைப்பு போராட்டத்தினைத் தொடுக்கும்படி தோழர். விஜே டயஸ் மகாநாட்டின் பேராளர்களையும் தொழிலாள வர்க்கத்தினையும் வேண்டிக் கொண்டார்.

பு. க. க. மத்திய குழு உறுப்பினர் தோழர். டபிள்யூ. ஏ. சுனிலின் தலைமையில் நடைபெற்ற இம்மகாநாட்டில் நானாவித துறைகளில் இருந்தும் பங்கு கொண்ட தொழிலாளர்களும், இளைஞர்களும் உரை நிகழ்த்தினர். அவர்கள் தமது உரையின் மூலம் தோழர். விஜே டயசின் அறிக்கையை மேலும் வளப்படுத்தியதோடு புரட்சித் தலைமையைக் கட்டி எழுப்புதற்குத் தமது தயார் நிலையையும் வெளிக்காட்டினர்.



மார்ச் 22ல் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் கொழும்பு பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் நடாத்திய தொழிலாளர் பேராளர் மாநாட்டிற்கு வருகை தந்த பேராளர்களில் ஒரு பகுதியினர்.

## வடக்கு — கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று!

படிப்பகம்

www.padippakam.com



# ஏகாதிபத்திய யுத்த ஆத்திரமூட்டலை நிறுத்து...

(1 -ம் பக்கத் தொடர்ச்சி)

குழுவின், 1991 மே தின அறிக்கை உலகத் தொழிலாள ஒடுக்கப்படும் மக்களின் முன்னிலையில் எழுப்பிய தீர்க்கமான அரசியல் ஆபத்து எச்சரிக்கையை நிரூபித்துள்ளது.

இந்த மே தின அறிக்கை பின்வருமாறு குறிப்பிட்டது:- ''ஆகஸ்ட் 1990ல் இருந்து இவ்வ எல்லாம் இடம் பெற்ற தன் பின்னரும் பாரசீக வளைகுடா யுத்தம் ஒரு வெறும் தனிமைப்பட்ட நிகழ்வு எனவும், அது எந்தவொரு பரந்த ஏகாதிபத்திய நலன்களுடனும் தொடர்புபட்டது அல்ல எனவும், ஈராக் குவைத்தினை இணைத்துக் கொண்டதால் மட்டுமே அது தூண்டிவிடப்பட்டது எனவும் குணப்படுத்த முடியாத அப்பாவிகள் மட்டுமே இனியும் நம்பிக் கொண்டிருக்க முடியும். எண்ணெய் வளம் கொண்ட வளைகுடா அரசுகளை அமெரிக்காவின் பாதுகாப்பு வலயங்களாக மாற்றியதைத் தொடர்ந்து யுத்தத்தின் பின்னர் ஏகாதிபத்திய வல்லரசுகளின் இராணுவத்தினால் ஈராக்கின் வட பகுதி கைப்பற்றப்பட்டுள்ளது. தொடர்ந்து வரும் ஈராக் பாகப் பிரிவினையானது ஏகாதிபத்தியவாதிகளின் புதிய உலகப் பிரிவினையின் ஆரம்பத்தினைச் சைகை காட்டி நிற்கின்றது. நேற்றைய காலனிகள் மீண்டும் அடிமைப்படுத்தப்படவுள்ளன, ஏகாதிபத்தியத்தின் சந்தர்ப்பவாதிகளாலும் வக்கீல்களாலும் கடந்த காலத்துக்குரியது எனக் கூறிக்கொள்ளப்பட்ட கைப்பற்றல்களும், இணைப்புக்களும் திரும்பவும் இன்றைய நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டுள்ளன''.

## தொழிலாளர் அதிகாரத்துவத்தின் கடைகெட்ட பணிவு

ஈராக்குக்கு எதிரான ஆக்கிரமிப்பின் பின்னர் இன்று லிபியாவுக்கும் அத்தோடு கியூபாவுக்கும் வட கொரியாவுக்கும் எதிரான ஆத்திரமூட்டல்களைச் சிருஷ்டித்துக் கொண்டுள்ளது. இதன் மூலம் முழு உலகினையும் அணுவாயுத தாக்குதல்களின் மூலம் சுட்டெரிக்கவும் உலகினைத் திரும்பவும் காலனிகளாக கூறு போடவும் முயற்சிகள் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளன. சகல நாடுகளிலும் உள்ள தொழிலாளர் அதிகாரத்துவங்களின் கேவலமான அடிபணிவுகளை பயன்படுத்தியே ஏகாதிபத்தியவாதிகள் இந்த நாசகார நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன. முன்னைய சோவியத் யூனியனின் உள்ளும் கிழக்கு ஐரோப்பாவிலும் ஏனைய நாடுகளிலும் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் உள்ளிருந்து தோன்றிய 'கொம்பிரதோர்' கும்பல்கள் ஏகாதிபத்தியவாதிகளின் காலனித்துவ வேலைத்திட்டத்தின் அப்பட்டமான வக்கீல்களாகியுள்ளனர். ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபையில் லிபியா மீது தடைகளை விதிப்பதற்கு எதிராகத் தமது இரத்து அதிகாரத்தினைப் பாவிக்க இடமிருந்த போதிலும் அங்ஙனம் செய்யாத சீன அதிகாரத்துவம் ஈராக்குக்கு எதிரான ஆக்கிரமிப்பில் கொர்பச்சேவின் வழியையே பின்பற்றியது. அத்தோடு கம்போடியாவில் ஐக்கிய நாடுகள் சபையின் படையுடன் சேர்ந்து மக்கள் படுகொலையில் ஈடுபடக் காட்டும் உஜாரினை சீன அதிகாரத்துவம் ஐ நா. படைகளைப் பலப்படுத்த படை வழங்கியதன் மூலம் காட்டிக்கொண்டுள்ளது. நீண்ட காலமாக சோவியத் யூனியன் ஸ்டாலினிஸ்டுகளுக்கு இராகம் பாடி வந்த இலங்கை ஸ்டாலினிஸ்டுகள் சமீபத்தில் இந்த ஏகாதிபத்திய சார்பு சீன அதிகாரத்துவத்தினை மூன்றாம் உலகின் புதிய காவலர்கள் என அழைத்தனர். ('மூன்றாம் உலகின் பாதுகாப்புக்கு சீனாவும இந்தியாவும்' — 'அத்த') உலகம் பூராவும் உள்ள ஸ்டாலினிஸ்டுகள் காட்டும் இந்த அடிபணிவும் துரோகமும் தொழிலாள வர்க்க அதிகாரத்துவங்களின் பூரண நாற்றமெடுப்பின் உச்சக் கட்ட வெளிப்பாடாகும்.

அனைத்துலகக் குழுவின் 1991 மே தின அறிக்கை இந் நிலைமையைப் பின்வருமாறு சுட்டிக்காட்டியது: பாரசீக வளைகுடா யுத்தம் தொழிலாள வர்க்கத்தின் பாரம்பரிய லேபர் கட்சிகளதும் தொழிற்சங்க அமைப்புக் களதும் அடியோடு உதவாக்கரையான தன்மையை அம்பலமாக்கியுள்ளது. ஈராக்குக்கு எதிரான யுத்தத்துக்கு உலகின் எந்தவொரு பாகத்திலும் அணிதிரண்ட தொழிலாளி வர்க்கத்தின் கணிசமான எதிர்ப்புக் கிடைக்கவில்லை. இலட்சோப இலட்சம் தொழிலாளர்களின் நேர்மையான ஆத்திரமும் வெறுப்பும் நிலவிய போதிலும் ஏகாதிபத்தியத் தாக்குதலின் பேரிலான அவர்களின் இயற்கையான வர்க்க எதிர்ப்பு எந்த விதமான அணிதிரண்ட ஒரு சுயாதீன அரசியல் உருவம் எடுக்க அனுமதிக்கப்படவில்லை. எங்கு ஆர்ப்பாட்ட ஊர்வலங்களையும் எதிர்ப்புக்களையும் முற்றாகத் தடுத்து விட முடியவில்லையோ அங்கெல்லாம் லேபர் அதிகாரத்துவங்களும், சமூக ஜனநாயக வாதிகளும் அத்தோடு ஸ்டாலினிஸ்டுகளும் அவை தமது அரசாங்கங்களின் யுத்தக் கொள்கைகளுக்கு அச்சுறுத்தும் உருவம் எடுத்துவிடா வண்ணம் பார்த்துக் கொண்டனர். ஆயிரக்கணக்கான சோம்பேறிக் குட்டி முதலாளித்துவ அலுவலர்களைக் கொண்டதும் உத்தியோக பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டதுமான தொழிலாளர் இயக்கங்களின் சகல பழைய அமைப்புக்களும் முழுமனே முதலாளித்துவ அரசின் இணைப்புக்களாக மாற்றப்பட்டன. அவர்களின் நடைமுறை மட்டுமன்றி அவர்களின் உத்தியோகபூர்வமான வேலைத்திட்டத்தினைப் பொறுத்த மட்டிலும் ஸ்டாலினிஸ்டுகள், சமூக ஜனநாயக வாதிகளுக்கும் உத்தியோக பூர்வமான முதலாளித்துவக் கட்சிகளுக்கும் இடையேயான அரசியல் வேறுபாடு அடியோடு மங்கிப்போய்விட்டது.''

தொழிலாளி - ஒடுக்கப்படும் மக்களின் மேல் பிடியை இறுக்கிக் கொண்டுள்ள தலைமைகளின் கேவலமான காட்டிக் கொடுப்புக்களும் அடிபணிவுகளும் ஏகாதிபத்திய அமைப்பின் முரண்பாடுகளைப் போக்கிவிடாது. அதற்குப் பதிலாக அந்தக் காட்டிக் கொடுப்புக்கள் ஏகாதிபத்தியவாதிகள் தமது அமைப்பின் முரண்பாடுகளை தீர்த்துக் கொள்ளச் செய்யும் இரத்தம் தோய்ந்த முயற்சிகளை உக்கிரமாக்கவே சேவை செய்கின்றது, நாட்டுக்கு நாடு உள்நாட்டு யுத்தத்தினைத் தூண்டி விடுவதன் மூலம் தொழிலாள - ஒடுக்கப்படும் மக்களின் மேல் காட்டுமிராண்டிப் பாசிச இராணுவ சர்வாதிகாரத்தினை திணிப்பதிலும் உலகினை காலனித்துவத்துக்கு அடிமைப்படுத்தி மீண்டும் பங்குபோடும் பொருட்டு உலக யுத்தத்தினைக் கிளறிவிடும் முயற்சியினையும் ஏகாதிபத்தியவாதிகள் துரிதப்படுத்தக் காரணம் அதுவே.

உற்பத்திச் சக்திகளின் தனியார் உரிமைக்கும் அதைக் காக்கும் பொருட்டு வெவ்வேறாகக் கட்டியெழுப்பப்பட்டுள்ள தேசிய — அரச அமைப்புக்கும் எதிராக வளர்ச்சி காணும் உற்பத்திச் சக்திகள் நடாத்தும் கிளர்ச்சியில் இருந்தே ஏகாதிபத்தியத்தின் நெருக்கடி தோன்றுகின்றது. உலக ரீதியில் இடம் பெறும் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியின் மூலம் உறுதி செய்யப்படும் உலக ரீதியில் சமூகமயமாக்கப்பட்ட உற்பத்தி முறைக்கு எதிராக உற்பத்திச் சக்திகளின் தனியார் உரிமையையும் அந்த உரிமைகளின் அவசியமான ஏகபோக இலாபத்தினைப் பேணுவதை காப்பதிலும் ஏகாதிபத்திய தேசிய-அரசு அமைப்பு ஈடுபட்டுள்ளது. இக்காரணி இந் நூற்றாண்டில் இரண்டு தடவைகள் உலக யுத்தத் தீப்பிளம்பில் தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களைப் பலியிட்டதன் மூலம் ஏகாதிபத்தியவாதிகள் நிரூபித்துள்ளனர். சீர்திருத்தவாதிகளதும் வர்க்கச் சமரசக்காரர்களதும் சகல சமரச மாயாஜாலங்களால் மூடிமறைக்க முடியாத விதத்தில் இந்த ஏகாதிபத்தியவாதிகளின் காட்டுமிராண்டி தேவைகள் இப்போது உலகைப் பிடித்துக் கொண்டுள்ளது.

## யுத்தத்தின் பின்னைய உலக அமைப்பின் வீழ்ச்சி

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் ஸ்தாபிதம் செய்யப்பட்ட ஏகாதிபத்திய உலக அமைப்பு சரிந்து கொட்டியுள்ள நிலையிலேயே ஏகாதிபத்தியங்களுக்கு இடையேயான போட்டி உக்கிரம் கண்டு உலக யுத்தத்தினையும் காலனித்துவத்தினையும் நோக்கிய நடவடிக்கையை தீவிரமடையச் செய்துள்ளது.

யுத்தத்தின் பின்னைய உலக அமைப்பின் முக்கிய இரண்டு அம்சங்களாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைமை உலக ஆதிக்கமும், ஸ்டாலினிச-சமூக ஜனநாயக அதிகாரத்துவம் தொழிலாளி வர்க்கத்தின் மேல் கொண்டிருந்த அரசியல் ஆளுமையும் விளங்கின. இப்போது இந்த இரண்டுமே சிதறுண்டு போய்விட்டன.

சிறப்பாக 1980பதுகளில் மலையெனக் குவியத் தொடங்கிய அமெரிக்க வர்த்தக, சென்மதி நிலுவைப் பற்றாக்குறை அந்நாட்டின் உலகப் பொருளாதார ஆளுமையின் வீழ்ச்சியை எடுத்துக் காட்டியது. அமெரிக்கா இன்று உலகின் பெரும் கடனாளி நாடாகியுள்ளது. அமெரிக்க ஆளுமையின் கீழ் இயங்கிய உலக நாணய அமைப்பான உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், உலக வர்த்தக அமைப்பின் நிர்வாக பீடமான (Gatt) வரி அமைப்பினுள்ளும் ஈடு செய்ய முடியாத பிளவினைத் தோற்றுவித்துள்ளது. அமெரிக்க ஏகாதிபத்தியம் அதனுடன் போட்டியிடும் முன்னணி ஏகாதிபத்திய வல்லரசுகளான ஜேர்மனியினதும், யப்பானதும் பொருளாதாரச் சவாலைச் சகித்துக் கொண்டிருக்க முடியாது. இந்த நானாவித ஏகாதிபத்திய ஏகபோகங்கள் தத்தமது இலாப மூட்டைகளை நிரப்ப நடாத்தும் போட்டிக்கு உலகச் சந்தை இந்த விதத்தில் சிறிதாகிவிட்டது!

அமெரிக்க பொருளாதார பலம் வீழ்ச்சி கண்டு சென்றதைத் தொடர்ந்து எழுச்சி கண்ட யப்பானியப் பொருளாதாரத்தினைச் சூழவும் இன்று பொருளாதார வீழ்ச்சியின் இருள் நிழல் படிந்து கொண்டுள்ளது. டோக்கியோ பங்கு முதல் சந்தையில் ஏற்பட்டுவரும் வேகமான வீழ்ச்சி இதற்கு நல்ல வெளிப்பாடாகும். கடந்த மூன்று ஆண்டுகளுள் நிகேய் பங்குமுதல் சந்தையில் பெறுமானம் நூற்றுக்கு 57% ஆல் வீழ்ச்சி கண்டுள்ளது. ஐரோப்பிய நாணய உடன்பாடுகளின் பேரில் இடம்பெறும்பேச்சுவார்த்தைகளில் தோன்றியுள்ள முரண்பாடுகளை கிழக்கு ஜேர்மனியை இணைத்துக் கொண்டதன் பின்னர் ஜேர்மன் மார்க் நாணயத்தின் பெறுமான வீழ்ச்சியும் ஏனைய ஐரோப்பிய ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து ஜேர்மன் ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிராக இடம்பெறும் தாக்குதல்களும் எடுத்துக் காட்டுகின்றன.

ஏகாதிபத்திய உலகில் வளர்ச்சி கண்டுள்ள இந்த முரண்பாடுகளைத் தீர்க்கும் பொருட்டு ஏகாதிபத்திய ஆளும் வர்க்கங்கள் தத்தமது நாடுகளில் தொழிலாளி வர்க்கத்தினை வேலையின்மைக்கும், வறுமைக்கும் பலியிடவும் பொதுமக்கள் மேல் பாசிச இராணுவ சர்வாதிகாரத்தினைத் திணிப்பதிலும் ஈடுபட்டுள்ளனர். இதனால் சகல ஏகாதிபத்திய நாடுகளிலும் சோவினிசத்தையும் இனவாதத்தையும் தூண்டிவிடுவதன் மூலம் பாசிசக் கும்பல்களை திரும்பவும் தலையெடுக்கச் செய்ய வைப்பதில் இறங்கியுள்ளனர். இந்நடவடிக்கைகள் காலனித்துவத்துக்கான மூன்றாம் உலக யுத்தத்தினை நோக்கிய அணிதிரளலுடன் நெருக்கமாக இணைந்து கொண்டுள்ளது.

உலக சோசலிசப் புரட்சியின் வேலைத் திட்டத்தின் அடிப்படையில் ஏகாதிபத்திய யுத்தத்துக்கும் காலனித்துவத்துக்கும் எதிராக உலகத் தொழிலாள வர்க்கத்தையும் ஒடுக்கப்படும் மக்களையும் அணிதிரட்டும் பிரமாண்டமான ஒரு முன்னோடி நடவடிக்கையாக கடந்த நவம்பர் 16-17ம் திகதிகளில் பேர்ளின் நகரில் இடம்பெற்ற உலகத் தொழிலாளர் மகாநாட்டின் வரலாற்று முக்கியத்துவம் இப்பின்னணியில் இருந்தே பெருக்கெடுக்கின்றது. அந்த மகாநாட்டுக்கு அழைப்பு விடுத்த நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு உலகத் தொழிலாளி வர்க்கத்தின் ஒரே புரட்சிகரத் தலைமை என்பதையும் இந் நடவடிக்கை மூலம் சர்ச்சைக்கு இடமின்றி ஊர்ஜிதம் செய்தது. பாசிச இராணுவ சர்வாதிகாரங்களில் இருந்தும் அவ்வாறே உலக யுத்தத்தின் அழிவில் இருந்தும், முதலாளித்துவ அமைப்பு பொதுமக்கள் மேல் திணித்த சகல வகையான துன்பங்களில் இருந்தும் பொதுமக்கள் மீட்சி பெறுவதற்கு தொழிலாளி வர்க்கம் அனைத்துலகப் புரட்சிகர வேலைததிட்டத்தின் அடிப்படையில் ஒன்று திரண்டு, ஏகாதிபத்தியத்தினை பூமியில் இருந்து துடைத்துக் கட்ட வேண்டும். இந்த வேலைத்திட்டத்தின் பேரில் உலகம் பூராவும் போராடுவது அனைத்துலகக் குழுவின் தலைமையிலான நான்காம் அகிலமும் அதன் கிளைகளுமே.

## பின்தங்கிய நாடுகளில் தேசிய முதலாளித்துவம்

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நிழலின் கீழ் ஸ்டாலினிச அதிகாரத்துவ ஆட்சிகளுடன் காதல் களியாட்டங்களில் ஈடுபடுவதன் மூலம் இது காறும் உயிரைப் பிடித்து வந்த பின்தங்கிய நாடுகளின் தேசிய முதலாளித்துவ ஆட்சியாளர்கள் ஏகாதிபத்தியவாதிகளின் காலனித்துவ முறை தீவிரம் அடைந்ததையும் ஸ்டாலினிச ஆட்சிகள் அழிந்ததையும் தொடர்ந்து முன்னொருபோதும் இல்லாத நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளனர். ஏகாதிபத்திய

(12 -ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# சோவியத் யூனியனின் முடிவும்

(7 ம் பக்கத் தொடர்ச்சி)

யத் தலைவர்கள் கடைப்பிடிக்கும் சுயநலக் கொள்கைகள் நின்று பிடிக்கக் கூடிய கூட்டினைத் தள்ளிவிடுகின்றது எனப் புத்திசாதுரியமாகக் குறிப்பிட்டிருந்தன.

'பினான்சியல் டைம்ஸ்' கடந்த வாரம் குறிப்பிட்டதாவது: சுதந்திர அரசுகளின் புதிய பொதுநலவாய தலைவர்கள் பைலோ ரூஷ்ய தலைநகரான மின்ஸ்கில் இன்று சந்திக்கின்றனர், முக்கிய அங்கத்தவர்கள் வர்த்தகமும், பாதுகாப்பும் நாசகரமான முறையில் குழம்பிப் போகாமல் தம்மைப் பாதுகாக்கும்பொருட்டு அடிப்படைப் பொருளாதார, நிதி அமைப்புக்கள் பற்றிய இணக்கத்துக்குவருவதற்கான சாத்தியங்கள் தென்படவில்லை. ரூஷ்யா, உக்ரேன் பைலோ ரூஷ்யா ஒரு புதிய பொதுநலவாயத்தை அமைத்து மூன்று வாரங்கள் கழிவதற்குள் அவர்கள் ஒவ்வொருவரின் 'பொருளாதாரங்களுக்கும் உதவுவதற்கு மாறாசத் தீங்கிளைக்கும் பொருளாதார நடவடிக்கைகளையே எடுத்துள்ளனர்.''

அத்தகையகொள்கைகளின் அடிப்படையில் . இரத்தம் தோய்ந்த உடன் பிறப்பைக் கொல்லும் போராட்டங்கள் - கடந்த சில மாதங்களில்அவை யூகோசலவாக்கியாவை சின்னாபின்னமாக்கியுள்ளது போல்—தவிர்க்க முடியாதவை. வர்க்கங்களை அடிப்படையாகக் கொண்டு போராட்டங்களை மத்தியமயமாக்குவதன் மூலமும் ஏகாதிபத்தியத்துக்கும் அதன் உள்ளூர் ஏஜன்டுகளுக்கும் எதிரான போராட்டத்தில் சகல ஒடுக்கப்படும் மக்களதும் ஐக்கியத்தினை நிலைநாட்டுவதன் மூலமும் தேசியப் பிளவுகளை வெற்றி கொள்ள முயன்ற போல்ஷிவிக்குகளுக்கு எதிரான விதத்தில் இன்று புனருத்தாரணவாதிகள் மக்களை முட்டுச் சந்துக்கு இட்டுச் செல்ல தேசியப் பகைமையைப் பயன்படுத்துவர்.

## புதிய தலைமை தேவை

இந்தக் கூட்டில் இணைந்து கொண்டுள்ள அரசுகள் வெகு சமீபத்தில் தாமாகவே இணைவது அடியோடு தவிர்க்கப்பட்டுள்ளது. ஒரு வெறும் பொதுஜன அதிருப்தியினால் சோவியத்யூனியனில் ஆயுதக்கிளர்ச்சி தன்னியல்பாகவே தோன்றும் என நம்புவது ஒரு மூலோபாயத் தவறாக விளங்கும். தன்னியல்பான இயக்கத்தின் இயலளவில் அங்ஙனம் நம்பிக்கை வைப்பது எப்போதும் குறையானதும் ஆபத்தானதுமாகும். ஒரு வெகுஜன இயக்கம் அபிவிருத்தியடையவும் ஒரு பயனுள்ள வழியைக் கடைப்பிடிக்கவும் அது ஒரு முன்நோக்கினைக் கொண்டிருக்க வேண்டும். இது தீர்க்கமான ஒரு விவகாரமாக இருந்து வருகின்றது. வெடிப்புக்களும், வேலைநிறுத்தங்களும் அங்கு இடம் பெறலாம். அங்கு பக்டரிகள் கூடக் கைப்பற்றப்படலாம். ஆனால் சோவியத் வெகுஜனங்களின் எதிர்காலம், ஒரு புரட்சிகரத் தலைமையின் வளர்ச்சியிலும் சோவியத் யூனியனின் முழு வரலாற்று ,அனுபவங்களின் படிப்பினைகளை உள்ளீர்த்துக் கொள்வதிலும் தங்கியுள்ளது.

இந்தப் பிரச்சினை எமக்கு மிகவும் முக்கியமானது. உலகின் எந்தவொரு பாகத்திலும் தொழிலாள வர்க்கம் ஒரு தலைமையை முயற்சியின்றிச் சிருஷ்டிக்க முடியாது. இந்தப் பிரச்சினையில் ட்ரொட்ஸ்கியின் மிகவும் ஆழமான கருத்துக்கள் அவர் எழுதிய கடைசிக் கட்டுரைகளில் ஒன்றில் அடங்கியுள்ளது; அவரின் வாழ்க்கையின் முடிவில் அவரின் மேசை மீதிருந்த 'வர்க்கம், கட்சி, தலைமை' என்ற தலைப்பிலான கட்டுரையில் அடங்கியிருந்தது. அவர் எழுதியதாவது:

''தலைமைக்கும் வர்க்கத்துக்கும் இடையேயான முரண்பாடுகளை ஆழமாக வெளிக்கொணர ஒரு மாபெரும் அதிர்வு அவசியம். பலம் வாய்ந்த வரலாற்று அதிர்வுகளாக யுத்தங்கள், புரட்சிகள் விளங்குகின்றன. இதன் காரணமாக தொழிலாள வர்க்கம் அடிக்கடி யுத்தத்திடமும் புரட்சியிடமும் அறியாமலேயே மாட்டிக் கொள்கின்றது. பழைய தலைமை தனது உள்ளார்ந்த ஊழல்களை அம்பலமாக்கிக் கொண்ட தருணங்களிலும் கூட வர்க்கம் சிறப்பாக பழைய முன்னணிக் கட்சியின் சரிவினைப் பயன்படுத்திக் கொள்ளும் திறன் படைத்த பலம் வாய்ந்த புரட்சிகரக் காரியாளர்களை உரித்தாக்கிக் கொண்டிராது போனால் அதனால் ஒரு புதிய தலைமையை உடனடியாக வழங்கிவிட முடியாது.''

நாம் தலைமைப் பிரச்சினையைக் கணக்கில் எடுக்கும் போது நாம் சோவியத் யூனியனை மட்டும் கையாளவில்லை. உண்மையில் சுதந்திர அரசுகளின் கூட்டின் தன்மை பற்றிய எமது ஆய்வானது சோவியத் தொழிலாளர் வர்க்கம் முகம் கொடுக்கும் உடனடிப் பிரச்சினைகளைப் போலவே அனைத்துலகத் தொழிலாளர் இயக்கத்தின் பிரச்சினைகளுடனும்தொடர்புபட்டுள்ளது. சோவியத் அரசினைக் கலைப்பதில் ஸ்டாலினிச அதிகாரத்துவம் வகித்துள்ள பங்கு. தொழிலாள வர்க்கத்தின் கடந்தகால வெற்றிகள் தொடர்பாக ஒவ்வொரு நாட்டிலும் உள்ள பழைய தொழிலாளர் அதிகாரத்துவங்களின் உறவுக்கு நல்லதோர் எடுத்துக் காட்டாகும்.


## ஒரு உலகளாவிய போக்கு

சோவியத் ரூஷ்யாவினைச் சட்டரீதியாகக் கலைத்ததில் இருந்து நாம் கற்கவேண்டிய படிப்பினைகள் என்ன? என்னதான் சொன்னாலும் சோவியத் அரசும் அதன் பொருளாதார அடிப்படைகளும் அடியோடு தூக்கி வீசப்பட்டுவிடவில்லை. அவை மேலிருந்து பகிரப்பட்டு வருகின்றது. சிறிய அதிகாரத்துவக் கும்பல்கள் தமது அதிகாரத்தினையும் அந்தஸ்தினையும் பயன்படுத்தித் தொழிலாளர் இயக்கத்தினை ஸ்தம்பிக்கச் செய்யவும், அவர்களின் கடந்தகால சாதனைகளை கரைக்கவும் இந்த மாற்றங்களை வெகுஜனங்களின் தலைக்கு மேலாக அமுல் செய்து வருகின்றன. முன்னைய சோவியத் யூனியனில் நிகழ்ந்துள்ளது, ஒரு அனைத்துலகத் தோற்றப்பாட்டின் ஒரு வெளிப்பாடாகும், உலகம் பூராவுமுள்ள தொழிலாள வர்க்கம் தான் முன்னைய காலப்பகுதியில் சிருஷ்டித்த தொழிற்சங்கங்கள், கட்சிகள், அரசுகள் கூட ஏகாதிபத்தியத்தின் நேரடி ஆயுதமாக மாற்றப்பட்டுவரும் உண்மைக்கு முகம் கொடுத்துள்ளது. தொழிலாளர் அதிகாரத்துவங்கள் வர்க்கப் போராட்டங்களுக்கு 'பேரம்பேசிய வர்க்கங்களுக்கு இடையே எல்லைப் பாத்திரம் வகித்த நாட்கள் கடந்துவிட்டன. அதிகாரத்துவங்கள் பொதுவில் தொழிலாள வர்க்கத்தின் வரலாற்று நலன்களைக் காட்டிக் கொடுத்துவிட்டபோதிலும் அவர்கள் இன்னமும் ஒரு வரையறுக்கப்பட்ட அர்த்தத்தில் அதன் தினசரி நடைமுறைத் தேவைகளுக்குச் சேவை செய்து வந்தனர். அந்தளவுக்கு தொழிலாள வர்க்க அமைப்புக்களின் தலைவர்களாக இருந்துவருவதை 'நியாயப்படுத்தினார்கள்'. அந்தக் காலப்பகுதி கடந்துவிட்டது. இன்றைய காலப்பகுதியில் அதிகாரத்துவம் அத்தகைய எந்தவொரு சுயாதீனமான பாத்திரத்தினையும் வகிக்க முடியாது.

இது சோவியத் யூனியனின் ஸ்டாலினிச அதிகாரத்துவத்துக்கு மட்டுமன்றி அமெரிக்க தொழிற்சங்க அதிகாரத்துவங்களைப் பொறுத்தமட்டிலும் உண்மை. எமது கடந்த காங்கிரசில் இந்த உண்மையை நாம் வலியுறுத்தினோம். இன்றைய தொழிற் சங்கத் தலைவர்களை வரையறுக்கப்பட்டு, திரிபு செய்யப்பட்ட விதத்தில் தன்னும் தொழிலாள வர்க்கத்தின் நலன்களைப் பேணிப் பிரதிநிதித்துவம் செய்கின்ற ஒரு சக்தியாக எந்தவிதத்திலும் கொள்ள முடியாது எனக் குறிப்பிடுவது முற்றிலும் நியாயமானது. AFL—CIO தலைவர்களை 'தொழிற்சங்கத்' தலைவர்களாக வரைவிலக்கணம் செய்வதோ அல்லது அக்காரணத்துக்காக AFL—CIOஐ ஒரு தொழிலாள வர்க்க அமைப்பாக வரைவிலக்கணம் செய்வதோ அவர்கள் முகம் கொடுக்கும் யதார்த்தத்தினை தொழிலாள வர்க்கத்திடம் இருந்து மூடிமறைப்பதாகும். நான் ஏற்கனவே மேற்கோள் காட்டியுள்ள தொழிலாளர் அரசும் அல்ல முதலாளித்துவ அரசும் அல்ல' என்ற கட்டுரையில் ட்ரொட்ஸ்கி சுட்டிக்காட்டிய ஒரு விடயத்தை உங்களின் கவனத்துக்குக் கொணர விரும்புகின்றேன். அவர் பின்வரும் விடயத்தை முன்வைத்தார்:

''ஒரு தொழிலாளர் அரசுக்கும் ஒரு தொழிற் சங்கத்துக்கும் இடையேயான நன்கு பழக்கமான ஒரு ஒப்புவமையை நாம் எடுத்துக் சொள்வோம். எமது வேலைத்திட்டத்தின் நோக்கில் இருந்து தொழிற்சங்கம் வர்க்கப் போராட்டத்தின் ஒரு அமைப்பாக விளங்க வேண்டும். அமெரிக்க தொழிலாளர் சம்மேளனம் (ஏ.எப்.எல்) தொடர்பான எமது நிலைப்பாடு என்னவாக இருக்க வேண்டும்? அதன் தலைமையில் முதலாளி வர்க்கத்தின் அப்பட்டமான ஏஜன்டுகள் உள்ளனர். கிறீன் வோல அன்ட் கம்பனியின் திருவாளர்கள் பாட்டாளி வர்க்கத்தின் நலன்களுக்கு நேர் எதிரான அரசியல்போக்கினைக்கடைப்பிடிக்கின்றனர். நாம் இந்த ஒப்புவமையை விரிவுபடுத்தி பின்வருமாறு கூறமுடியும்: சி. ஐ. ஓ தோன்றும் வரை ஏ. எப். எல். சிறிது முற்போக்கான பணியினை இட்டு நிரப்பியிருக்குமேயானால் இன்று அதன் நடவடிக்கைகளின் முக்கிய உள்ளடக்கம் சி. ஐ. ஓ. ன் பெரிதும் முற்போக்கான அல்லது குறைந்த பிற்போக்கான போக்குகளுக்கு எதிரான ஒரு போராட்டத்திலேயே அடங்கியுள்ளது. கிறீனின் இயந்திரம் திட்டவட்டமாக ஒரு பிற்போக்குக் காரணியாகி விட்டது எனக் கூறின் அது முற்றிலும் சரியானது.

''ஆனால் இதன் காரணமாக ஏ.எப்.எல் தொழிற் சங்கங்களின் ஒரு அமைப்பாக இல்லாது போய்விடவில்லை. அரசின் வர்க்கத் தன்மை உற்பத்திச் சாதனங்களின் சொத்து வடிவங்களைக் கொண்டு நிர்ணயம் செய்யப்படுகின்றது. தொழிற் சங்கம் போன்ற ஒரு தொழிலாளர் அமைப்பின் வர்க்கப் பண்பு, தேசிய் வருமானத்தினைப் பங்கீடு செய்வது தொடர்பான உறவினைக் கொண்டு நிர்ணயம் செய்யப் படுகின்றது. கிறீன் அன்ட் கம்பனி உற்பத்திச் சாதனங்களில் தனிச் சொத்துடமையைப் பேணுகின்றனர் என்ற உண்மை அவர்களை முதலாளித்துவமாகப் பண்பாக்கம் செய்கின்றது. இதற்கு மேலாக இக்கனவயன்கள் தொழிலாளர்களின் தாக்குதல்களில் இருந்து முதலாளி வர்க்கத்தின் வருமானத்தினைப் பேணவும், வேலை நிறுத்தங்களுக்கு எதிராகவும், சம்பள உயர்வுக்கு எதிராகவும், வேலையற்றோருக்கு உதவி வழங்குவதற்கு எதிராகவும் (வேறு வார்த்தையில் சொன்னால் இன்று லேன் கீர்க்லன்டும் யூ.ஏ.டபிள்யூ வும் செய்வது போல் சகலதையும் செய்ய!) அவர்கள் போராடினாலும் அப்போது இருப்பது கருங்காலிகளின் அமைப்பேயன்றி தொழிற் சங்கம் அல்ல. எவ்வாறெனினும் கிறீன் அன்ட் கம்பனி தமது அடிப்படையை இழந்து போகாதிருக்கும் பொருட்டு- ஒரு வரையறைக்குட்பட்டு தேசிய வருமானத்தில் அவர்களின் பங்கினை அதிகரிப்பதற்கு அல்லது குறைந்த பட்சம் தேசிய வருமானத்தில் அவர்களின் பங்கு குறைக்கப்படுவதற்கு



மாஸ்கோ

எதிராக தொழிலாளர்களின் ஒரு போராட்டத்தினை நடாத்த வேண்டியுள்ளது. இந்தப் புறநிலை அறிகுறிகள் சகல முக்கிய சம்பவங்களிலும் மிகவும் பிற்போக்கான தொழிற் சங்கங்களுக்கும் கருங்காலி அமைப்புக்களுக்கும் இடையேயான ஒரு பிரிகோட்டினை வரைந்து கொள்ள எமக்குப் போதுமானவை.''

தேசிய வருமானத்தைப் பங்கீடு செய்வது தொடர்பான அதன் உறவினால் வர்க்கத் தன்மையை நிர்ணயம் செய்யும் ஒரு அமைப்பே தொழிற்சங்கம் என்ற ட்ரொட்ஸ்கியின் வரைவிலக்கணத்தினை நாம் கொள்ளின், ஒரு தொழிற் சங்கம் ஒரு தொழிலாளர் அமைப்பாக இல்லாது போய்விடாது தொழிலாளர் வர்க்கத்தின் நீண்ட கால நலன்களுக்கு எதிரான கொள்கைகளை அமுல் செய்ய முடியும் என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

தொழிற் சங்கத் தலைவர்களும் அமைப்புக்களும் தொழிலாளர்களின் தேசிய வருமானத்தின் பங்கினை அதிகரிக்க முயற்சிப்பதற்குப் பதிலாக தொழிலாளவர்க்கத்தின்வாழ்க்கைத் திரத்தினைக் குறைக்கவும், வேலை நிறுத்தங்களைச் சிதறடிக்கவும், தொழிலாளர்கள் மீது பொய் வழக்குத் தாக்கல் செய்யவும், தொழிலாளர்களை வேலையற்றோர் பட்டியலில் தள்ளிவிடவும் முதலாளி வர்க்கத்துடன் உற்சாகமாக ஒத்துழைக்கும் போது என்ன நடக்கின்றது. அப்போது உண்மையில் நாம் அத்தகைய அமைப்புக்களின் பண்பில் ஒரு ஆழமான மாற்றத்தினைக் கையாள்கின்றோம்.

இவை எல்லாம் ஏற்கனவே நடந்து விட்டன. ஆகவே

www.padippakam.com



# நான்காம் அகிலத்தின் பணிகளும்

ர்கள் குறைந்த
ய வருமானத்தில்
ர்களா துபங்கினை
யேனும். அடிப்
கொள்ளாமல்
குறைப்பதையே
சட நலன்களாகக்
5 சமூகத் தட்டின
டுப்படுத்தப்படும்
நள் அடைபட்டுக்
ர்கள். அதற்குக்



ல் உணவு 'கியூ'

புவர்கள் தொழி
ந்தவொரு ஜன
யையும் கொண்
காபரேட்வாத'
தலைவர்களாக
சரிக்குமாறு மட்
சளைக் கோரு

வர்க்கத்
டிக்கொடுக்கப்
விதத்தில் தாம்
எதிர்பார்த்த
டுமோசமாயும்
ம் காட்டிக்
ட்டுள்ளதைச்
யன் தொழி
ண்டு கொண்டு
ர். அங்கு அரச
ற்றி கொள்ளப்
ால் அதிகாரத்
ாடகாலக் குற்
த் யூனியனை
முதலாளித்
மீள ஸ்தா
லும் உச்சக்கட்
டைந்துள்ளன.
பாரு பாகத்தி
றிய நாடுகளி
ளர்கள் தமது
ளும் சொந்தத்
மைப்புக்களும்
வர்க்கத்தினை
திலும், வறு
றுவதிலும் ஈடு
கண்டு கொண்

## காம்
## த்தின்
## யம்

ரமான யதா
து நான்காம்
சியம் தோன்
ந்த அரசியல்
அடிப்படை
னைத்துலகத்
இயக்கத்தினை
ஒரு உயர்

மட்டத்துக்கு உயர்த்தவும் முடியும். இங்கு நாம் கூறுபவைக்கும் அவநம்பிக்கைவாதத்துக்கும் எதுவித தொடர்பும் கிடையாது. எமது இயக்கம் ஒரு போதுமே சோவியத் அரசின் தேசிய வல்லமையின் அடிப்படையில் முன்னேறிச் சென்றதில்லை. நாம் நீண்ட காலத்துக்கு முன்பே அந்தத் தேசிய அத்திவாரத்தின் குறைபாடுகளைத் தெளி

வுபடுத்தியுள்ளோம். எமது நம்பிக்கை ஒரு வரலாற்று ஆய்வில் இருந்து தோன்றுகின்றது. சோவியத் யூனியனின் சீரழிவும், சரிவும் 1917 புரட்சியைச் செல்லுபடியற்றதாக்கிவிடவில்லை. சிறப்பாக அந்தப் புரட்சியின் தலைவர்கள் திரும்பத் திரும்பக் குறிப்பிட்டது போல் சோவியத் யூனியனின் தலைவிதி உலகச் சோசலிசப் புரட்சியில் தங்கியுள்ளது.

சோவியத் அரசின் சரிவானது ஒரு காலத்தில் சோவியத் யூனியனின் பாகமாக விளங்கிய பிராந்தியங்களில் மட்டும் ஒரு நீண்டநெடும் ஸ்திரமின்மையோடு நின்றுவிடப் போவதில்லை என ஒருவர் கூறமுடியும், மாறாக சோவியத் யூனியனின் வெடிப்பு ஏகாதிபத்திய அமைப்பின் உலகளாவிய முரண்பாடுகளை நிச்சயம் மோசமடையச் செய்யும்.

எம்மைப் பொறுத்தமட்டில் இறுதியாக எமது ஆய்வில் மிகவும் தீர்க்கமான மூலகம் இதுதான். சோவியத் அரசின் வீழ்ச்சியானது 1917 புரட்சியை உண்டுபண்ணிய ஏகாதிபத்தியத்தின் உள்ளேயான முரண்பாடுகள் வெற்றிகொள்ளப்பட்டுள்ளதைக் குறிக்காது. ஒரு போதும் இல்லை. இங்கு நாம் எந்தவொரு முதலாளித்துவ விமர்சகரும் கவனம் செலுத்தாத் மாபெரும் சுயமுரண்பாட்டுக் கூற்றினைக் கையாள வேண்டும்.

வழக்காற்று அளவையியல் நோக்கின்படி சோவியத் யூனியனின் வீழ்ச்சியும், மார்க்சிசம் தவறானதென நிரூபித்தாயிற்று எனப்படுவதும் முதலாளித்துவ உலகம் பூராவும் வாழ்க்கைத் தரத்தின் துரித வளர்ச்சிக்கும் செழிப்பின் பெருக்கத்துக்கும் மதி

யில் யதார்த்தமாகியிருக்க வேண்டும். எவ்வாறெனினும் இதற்கு எதிர்மாறானதே இடம்பெற்று வருகின்றது. 1930பதுகளில் இருந்து முதலாளித்துவம் இத்தகைய நாற்றம கண்ட அழிவு நிலையில் இருந்ததில்லை. பரந்தளவிலான வேலையின்மை, பரந்தளவிலான சீரழிவு, உற்பத்திச் சக்திகளின் தேக்கம், மூன்றாம் உலக யுத்தத்துக்கான தயாரிப்புக்கள் — இவை எல்லாமே சர்ச்சைக்கு அப்பாற்பட்டவை.

அத்தோடு உண்மையில் இந்தச் சமாந்தரமான போக்குக்கள் — பொருளாதார வாழ்வின் சீர்குலைவு, உலக முதலாளித்துவத்தின் நாற்றமெடுப்பு, சோவியத் யூனியனின் வெடிப்பு — ஆழ்மான முறையில் தொடர்புபட்டவை. கிழக்கு ஐரோப்பிய அரசுகளின் வெடிப்பினையும் சரிவினையும் தொடர்ந்து நாம் வலியுறுத்தியது போல் ஸ்டாலினிசத்தின் சரிவு, முதலாளித்துவத்தின் உலக நெருக்கடியில் ஆழமாக வேரோடியுள்ளது.

ஏகாதிபத்தியம் சோவியத் யூனியனை நேரடியாகத் தூக்கி வீசவில்லை. அந்தப்பணி அதற்காக அதிகாரத்துவத்தினால் அமுல் செய்யப்பட்டுள்ளது. ஒரு வரலாற்று அர்த்தத்தில் பின்வருவது நடைபெற்றுள்ளது. நெருக்கடியினால் நாசமாக்கப்பட்ட உலக முதலாளித்துவம் கொர்பச்சேவினை அணுகிக் கூறியதாவது: "என் அருமை நண்பரே, எமது அமைப்பின் முடிவுக் கட்டத்தினை நாம் எட்டி விட்டோம். நாம் தங்களிடம் ஒரு இறுதி உதவி கேட்கிறோம். நீங்கள் எங்களுக்காக எல்லாமே செய்துள்ளீர்கள். அதை நாம் அறிவோம். நாம் அதைப்பாராட்டுகின்றோம். நீங்கள் எண்ணற்ற புரட்சிகளைக் காட்டிக் கொடுத்துள்ளீர்கள். நீங்கள் இலட்சோப லட்சம் தொழிலாளர்களை குழப்பியடித்துள்ளீர்கள். ஆனால் சோவியத் யூனியனை மூடிவிடவும் சோவியத் யூனியனின் வளங்களை நன்கு நேரடியாகச் சுரண்ட குறைந்தபட்சம் வாய்ப்பேனும் வழங்கவும் இறுதியாக உங்களுக்குகாலநேரம் வந்துவிடவில்லையா?" ஸ்டாலினிஸ்டுகள் பதிலளிக்கையில் 'உங்களது நெருக்கடியின் பாரதூரமான தன்மை காரணமாக சோவியத் யூனியனின் வளங்களைத் தங்களின் காலடியில் வைக்கும் காலம் வந்துவிட்டது என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம்".

இந்தச் சம்பாஷணை சில வேளை விநோதமானதாகத் தோன்றலாம். ஆனால் 'பினான்சியல் டைம்ஸ்' என்ன எழுதியது என்பதை அவதானியுங்கள்: "1991ல் ஒரு அதிஸ்ட உணர்வு ஏற்படும் விதத்தில் எமது கலண்டர்களை பத்து ஆண்டுகளால் சரி செய்ய வேண்டியுள்ளது. கம்யூனிசம் அதைப் பின்பற்றிய பல நாடுகளில் சரிந்துள்ளது.

ஆனால் அவற்றைக் கொண்டிருந்து பழைய தலைவர்களாயின அவர்கள் முதலாளித்துவம் அதன் உள்ளார்ந்த முரண்பாடுகளால் சரிந்ததை இன்று கொண்டாடிக் கொண்டிருப்பார்கள்."

அந்தளவுக்கு விவகாரங்களின் நிசத்தன்மையையிட்டு முதலாளி வர்க்கம் நனவாக உள்ளது. வரலாற்று அர்த்தத்தில் பார்ப்பின் உண்மையில் ஏகாதிபத்தியம் தனது சகல கையாட்களுக்கும் அழைப்பு விடுக்கின்றது. தமது அமைப்பு சிதறுண்டு போவதைத் தடுக்கவும் தொழிலாள வர்க்கத்துக்கு எதிராக தம்முடன் இணைந்து கொள்ளவும், சீசருக்கு உரியதை சீசருக்கு வழங்கவும் வந்தருளுமாறு ஏகாதிபத்தியம் பழைய தொழிலாளர் அரசுகளதும், தொழிற்சங்கங்களதும், பழைய தொழிலாளர், சமூக ஜனநாயக கட்சிகளின் சகல அதிகாரத்துவங்களுக்கும் அழைப்பு விடுத்துக் கொண்டுள்ளது.

## ஏகாதிபத்திய உலக அமைப்பும் ஸ்திரப்பாடும்

ஆனால் அவர்களின் உதவியுடனும் ஏகாதிபத்தியத்தினால் அதன் உலக ஒழுங்கமைப்பினை மீள ஸ்திரப்படுத்திவிடுவது சாத்தியமாகாது. சோவியத் யூனியனின் வீழ்ச்சியைப்பற்றி முதலாளி வர்க்கம் பல தசாப்தங்களாக கனவு கண்டு வந்திருப்பினும் இன்று அந்தச் சம்பவம் இறுதியாக முதலாளித்துவத்தினால் அதைச் சுரண்டிக்கொள்ள முடியாதுள்ள நிலையில் வந்துவிட்டது. அமெரிக்க முதலாளித்துவத்தினைப் பொறுத்தமட்டில் இது விளையாட்டில நன்கு காலதாமதமாகி, யதார்த்தமாகியுள்ள ஒரு கனவாகும். இதனைச் சாதகமாக்கிக் கொளவதற்கு முதலாளிகள் பெரிதும் கிழண்டிப்போயும் நோயாளிகளாயும் உள்ளனர்.

ஸ்டாலினிசத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் இடையேயான சகல முக்கிய உறவுகள் உட்பட உலக ஏகாதிபத்தியத்துக்கு உறுதிப்பாட்டினை உத்தரவாதம் செய்த அல்லது வழங்கிய சகல பழைய உறவுகளும் உடைந்து போய் விட்டன. கடந்த ஒரு சில மாதங்களில் எமது முன்நோக்கின் அடிப்படையான சகல மூலகங்களும் — சோவியத் யூனியனின் சரிவில் மட்டுமன்றி அமெரிக்காவுக்கும் ஏனைய பெரும் ஏகாதிபத்திய சக்திகளுக்கு இடையே ஆழமாகி வரும்மோதுதல்களிலும் தெளிவாக நிரூபணமாகியுள்ளன.

ஓராண்டிற்கு முன்னர் தான் வளைகுடா யுத்தம் ஆரம்பமாகியது எல்பதை நம்புவது கடினமாகத் தோனறலாம். வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள அமெரிக்க வெற்றிக் களிப்பு கொண்டாட்டங்களின் மதுபோதையில் மூழ்கியிருந்தன. வேர்க்கஸ் லீக் இதனால் சிறிதும் கவரப்படா

மல் யுத்தம், அமெரிக்க வீழ்ச்சியின் பெரிதும் ஆழமான வரலாற்றுப் போக்குகளை மாற்றிவிடப் போவதில்லை என்ற அனைத்துலகக் குழுவின் முன்நோக்குகளின் அடிப்படையை தொடர்ந்தும் கொண்டிருந்தது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வரலாற்றுப் பலவீனங்கள் பெரிதும் அம்பலமானதைத் தொடர்ந்து இந்த சுபீட்ச மனோபாவம் தணிந்துபோகும் என்பதில் நாம் பெரிதும் நம்பிக்கை கொண்டிருந்தோம். நாம் அதிக காலம் காத்திருக்க நேரிடவில்லை,

நாம் இந்த கூடியுள்ள வேளையில் புஷ் உலகச் சந்தையில் தமது அந்தஸ்தினைப் பேணிக் கொள்ள இலாயக்கற்று வீழ்ச்சிகாணும் கும்பலின் தலைமையிலுள்ள ஒரு பரிதாபகரமான 'கோர்ப்பரேட்' குழுவின் தலைவராக யப்பானுக்குப் பயணம் செல்கின்றார்.

ஆனால் புஷ்சின் பயணத்தைக் காட்டிலும் பெரிதும் முக்கியமானது என்னவெனில் உலகப் பொருளாதாரம் என அழைக்கப்படும் இந்தப் பலம் வாய்ந்த சக்தியின் புறநிலை அளவையியலே என ட்ரொட்ஸ்கி விளக்கியது போன்று ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் உலக ஏகாதிபத்தியத்தில் புறநிலை முரண்பாடுகள் முதலாளித்துவத் தலைவர்களின் சகல அகநிலைக் கணிப்புக்களையும் கப்பலிலிருந்து வெளியே தூக்கி வீசுகின்றது,

சோவியத் யூனியனின் தகர்வானது உலக நெருக்கடியை உக்கிரமாக்குவதோடு இது தொழிலாளி வர்க்கத்தின் புதிய எதிர்த் தாக்குதலுக்கான சாத்தியத்தினையும் வழங்குகின்றது. ஆனால் இதன் அபிவிருத்தியும் வெற்றியும் எமது இயக்கத்தினைக் கட்டி எழுப்புவதிலேயே தங்கியுள்ளது. நாம் எமது வேலைகளை நான்காம் அகிலத்தின் பாத்திரத்தின் அசைக்க முடியாத நம்பிக்கையினை அடிப்படையாகக் கொண்டுள்ளோம். தொழிலாளி வர்க்கத்தின் உள்ளே எமது அதிகாரத்தினை நாம் நிலைநாட்டுமளவிற்கு ஸ்டாலினிசம் பற்றிய தடுமாற்றங்கள் கரைந்து போகும். இந்த அபிவிருத்திகளில் இருந்து தோன்றும் ஒரு தெளிவான சாதகம்; என்னவெனில் மார்க்சிசத்தின் ஈவிரக்கமற்ற எதிரியான ஸ்டாலினிசம் அடியோடு சிதரடிக்கப்பட்டுள்ளதே. ஸ்டாலினிசக் கட்சிகளின் சரிவுடன் அந்த அரசியல் பொய் அதன் பொன் யுகத்தின் முடிவினைக் கண்டுள்ளது என்று கூட ஒருவர் கூறலாம். ஸ்டாலினிசம் இனியும் தொழிலாளி வர்க்கத் தலைமைக்கான ஒரு சவால்காரனாக அல்லது போட்டியாளனாகத் தன்னைக் காட்டிக் கொள்ள முடியாது. தொழிலாளி வர்க்கம் முகம் கொடுக்கும் நிலைமையை நாம் எதிர்கொண்டு, அதன் என்றுமில்லாத சசப்டான

போராட்டங்களுக்குத் தலைமை கொடுப்பின் அந்த நிலைமையில் இருந்து நாம் பலன அடைய முடியும்.

நான்காம் அகிலத்தினால் மட்டுமே என்ன நடக்கின்றது என்பதைத் தொழிலாளருக்கு விளக்க முடியும். எமது இயக்கம் மட்டுமே இந்தப் பேராபத்தில் இருந்து தனது நேர்மை குலையாத நிலையில் வெளிப்படுகின்றது. தொடர்ந்து ஆதரவாளர்கள் பெருகிவரும் சோவியத் யூனியனில் மட்டுமன்றி முதலாளித்துவ நாடுகளின் முன்னேறிய தொழிலாளர்களும் புரட்சிகரத் தலைமையின் அவசியத்தினை உணரவே செய்வர்.

இதற்கு முன்னர் சோவியத் யூனியனில் தன்னியல்பான மறுமலர்ச்சி ஏற்பட்டு விடாது என நான் குறிப்பிட்டிருந்தேன். இது இரட்டை அர்த்தத்தில் உண்மையானது. தொழிலாள வர்க்கத்தின் நனவற்ற போராட்டத்தின் ஊடாக சோவியத் யூனியன் புனருத்தாரணம் அடைவது முடியாத காரியம் மட்டுமன்று; ஒரு சோவியத் ஒன்றியத்தின் மறுநிர்மாணம் ஒரு ஐரோப்பிய, உண்மையில் ஒரு உலகளாவிய புரட்சியின் மூலம் மட்டுமே சாத்தியமாகும். சோவியத் யூனியனின் இன்றைய எல்லைகள் பெருமளவுக்கு வெண்காவலர்களுக்கு எதிரான போல்ஷிவிகுகளின் வெற்றியினால் மட்டுமன்றி 1920- 23க்கும் இடையேயான ஐரோப்பியப் புரட்சியின் தோல்விகளாலுமே நிர்ணயம் செய்யப்பட்டன என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. சோவியத் யூனியனில் புரட்சியின் மறுமலர்ச்சி அதற்கான உள்ளுணர்வினை நான்காம் அகிலத்தினால் தலைமை தாங்கப்படும் அனைத்துலகப் புரட்சியின் அபிவிருத்தியில் இருந்தே பெற்றுக்கொள்ளும்.

## அக்டோபர் புரட்சி

முடிவுரையாக நான் இதை குறிப்பிட விரும்புகின்றேன். அக்டோபர் புரட்சி எமது சகாப்தத்தின் மாபெரும் நிகழ்வினை உண்டாக்கியது. நாம் சோவியத் யூனியனின் சட்டரீதியான கலைப்பின் முக்கியத்துவத்தினை குறைக்கவில்லை. ஆனால் அது தொழிலாளி வர்க்கத்தின் போராட்ட இயலளபின் கலைப்பினைக் குறிக்காது. அத்தோடு அது அக்டோபரின் வரலாற்றுத் தாக்கங்களைச் செல்லுபடியற்றதாக்கிவிடாது. பாரிஸ் கம்யூன் 71 நாட்களுக்கு நின்று பிடித்ததோடு உலக வரலாற்றையும் மாற்றியது. தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர அபிவிருத்தியின் அடுத்த கட்டம், அந்த அனுபவங்களின் அத்தியாவசியமான வரலாற்றுப் படிப்பினைகளைத் தொழிலாளி வர்க்கம் உள்ளீர்த்துக் கொள்வதையே அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

(15 ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# ஏகாதிபத்திய யுத்த ஆத்திரமூட்டலை நிறுத்து...

(9 -ம் பக்கத் தொடர்ச்சி)

முகாம்கள் பிளவுபட்டுப் போயுள்ள நிலைமையில் தாம் எந்த முகாமின் அடிவருடிகள் என்பதை தீர்மானம் செய்யும்படி பின்தங்கிய நாடுகளின் முதலாளிகள் நெருக்கப்பட்டுள்ளனர். இத்தகைய ஒரு தேர்வுக்கு முதலாளிகளுக்கு அவகாசம் கிடைப்பதை குட்டி முதலாளித்துவ கையாட்கள் மட்டுமே பெரும் வரப்பிரசாதமாகக் கொள்ள முடியும். நவ சமசமாஜ தலைவர்கள் 'லிபரல் ஏகாதிபத்தியத்தின் ஆதரவு பெறும்' பிரிவினர் எனத் தம்மை அழைத்துக் கொண்ட முதலாளித்துவ பேர் வழிகளுக்கு இராகம் பாட முடிவு செய்ததன் மூலம் இந்த கடைகெட்ட நிலைப்பாட்டினையே காட்டிக் கொண்டனர். எனினும் எந்த ஏகாதிபத்திய முகாமுக்கு முண்டு கொடுத்தாலும் பேரளவிலான ஜனநாயகத்தினையும் ஒழித்துக் கட்டி, தத்தம் நாடுகளில் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை ஏகாதிபத்தியவாதிகளின் அடிமைகளாக விற்றுத் தள்ளி வயிற்றை நிரப்புவதே தமது பணி என்பதை சகல முதலாளித்துவக் கும்பல்களும் நன்கு அறிவர்.

எந்த இனத்தைச் சேர்ந்த ஏகாதிபத்தியவாதிகளின் நிதி மூலதனம் என்றாலும் அது கேட்கும் அடிமை உழைப்பையும் இலாப வளங்களையும் விநியோகிக்கும் வேறு மார்க்கம் தேசிய முதலாளித்துவ ஆளும் வர்க்கத்துக்கும் எஞ்சியில்லை. முதலாளித்துவக் கும்பல்கள் கோஷ்டி பிரிந்து நிற்கக் காரணம், எந்த ஏகாதிபத்திய முகாமின் சிறைக்காவலர்களாகவும், அலுகோசுகளாகவும் நிற்பது என்னும் பிரச்சனையின் பேரிலேயே. முகாம்களாகப் பிளவுபட்டுக் கொண்ட ஏகாதிபத்தியவாதிகள் தத்தமக்கு ஆதரவான அலுக்கோசுக் கும்பல்களைப் பின்தங்கிய நாடுகளில் திர்மாணம் செய்யும் நனவான முயற்சியில் ஈடுபட்டு உள்ளனர். சமாதான ரீதியில் தீர்க்கமுடியாத இந்த கோஷ்டிப் பிளவின் மூலம் இந்நாடுகளின் ஆளும் வர்க்கங்களுக்கு இடையேயும் முன்னொரு போதும் இல்லாத அளவிலான நெருக்கடியும், பேதங்களும் உருவாகியுள்ளன.

## இந்தியத் துணைக் கண்டம்

உலகின் ஏனைய பாகங்களைப் போலவே இந்தியத் துணைக் கண்டத்திலும் இந்நெருக்கடி தீவிரமாகத் தலை நீட்டியுள்ளது. ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தின் எந்தவொரு பிற்போக்குக் கோஷ்டியுடனும் தொழிலாளிவர்க்கத்தையும்ஒடுக்கப்படும் மக்களையும் பிணைத்து, அடிமைகளாக்கும் உப-கொந்தராத்துக் காரர்களாக அதிகாரத்துவங்கள் செயற்படுகின்றன. இவர்களின் மோசடி இந்திர மாயா ஜாலங்களைத் தோற்கடித்து, தொழிலாளி வர்க்கத்தின் சுயாதீனமானதும், அனைத்துலக ரீதியான புரட்சிகரமானதுமான நெறி முறையைக் கடைப்பிடித்தல் அவசியம். இதற்கு இந்நெருக்கடி பற்றி மிக நெருக்கமாக ஆராய்ந்து அறிதல் அவசியம்.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் கடந்த 4-1/2 தசாப்தங்களுக்குத் தமக்கு உதவியாக நின்ற மலை கூட இதற்கு ஒரேயடியாகத் துணைநிற்பதன் மூலம் பணம் பிச்சையெடுக்கும் அவலநிலைதோன்றும் என்பதை இந்நாடுகளில் உள்ள ஏகாதிபத்தியக் கையாட்கள் அறிவர், அந்த அமெரிக்க ஏகாதிபத்தியம் பொருளாதார ரீதியில் வங்குரோத்தடைந்து விட்டதே காரணம். சார்பு ரீதியில் பலம் வாய்ந்த ஜேர்மன்—யப்பானிய முகாம்கள் ஊடாகச் செல்வதன் மூலமே நிதி உதவி பெற முடியும். எனினும் அந்த ஏகாதிபத்தியக் கையாட்கள் இராணுவ ரீதியில் இன்னமும் போதுமான அளவில் ஆயுதம் தாங்கியவர்கள் அல்லர். தத்தம் நாடுகளுள் காலனித்துவ வேலைத் திட்டங்களை அமுல் செய்கையில் கட்டாயமாக முகம் கொடுக்க நேரிடும் தொழிலாள — ஒடுக்கப்படும் மக்கள் எழுச்சிகளை நசுக்குவதற்கு கொம்பிரதோர் ஆட்சியாளர்களுக்கு இராணுவ உதவியில்லாமல் முடியவே முடியாது. ஆதலால் பின்தங்கிய நாடுகளின் முதலாளிகள் அமெரிக்க முகாமை அடியோடு கைகழுவி விட்டுவிடவும் முடியாது, ஆனால் அத்தகைய திசையில் பயணம் செய்வதற்கு இடமளிக்க முகாம்களாகப் பிரிந்து, தத்தமது காலனிகளை அமைப்பதில் ஈடுபட்டுள்ள ஏகாதிபத்தியவாதிகள் தயார் இல்லை. இராணுவ பலம் கொண்ட அமெரிக்கா இராணுவ ஒடுக்கு முறைகளிலும் முற்றுகைகளிலும் ஈடுபட்டு வரும் அதே சமயத்தில் நிதித் திறவுகோலைக் கொண்ட ஏகாதிபத்தியவாதிகள் இராணுவத் திறவுகோலை உருவாக்கும் வரையில் சதிகள், கழுத்தறுப்புக்கள் மூலம் தற்போதைக்குத் தமது காரியத்தை நிறைவேற்றுவதில் ஈடுபட்டுள்ளனர். இது தற்காலிகம் மட்டுமே. இராணுவத் தலையீடுகள் இல்லாமலும், காலனிமயமாக்கத்தின் கீழ் தமது நாடுகளின் அரச இயந்திரத்தினைத் தமது பிடிக்குள் கொணராமல் தமது முதலீட்டுக்குப் பாதுகாப்பினையும் இலாபத்தையும் உத்தரவாதம் செய்துகொள்ள முடியாது என்பதை அறியாத ஏகாதிபத்தியவாதிகளே கிடையாது.

ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கு இடையேயான உயர்மட்ட சமரசங்களின் மூலம் பொதுவில் உலக வளங்களின் பலனை அனுபவிக்கும் பாரம்பரியம் ஏகாதிபத்தியத்தின் கீழ் இல்லை. எனவே தான் மார்க்சிஸ்டுகள், ஒவ்வொருவரின் ஆளுமையைத் தவிடு பொடியாக்கும் உலக யுத்தங்களினைத் தொடர்ந்து வரும் காலப்பகுதி, அடுத்த யுத்தத்துக்காக ஏகாதிபத்தியவாதிகள் தயாராகும் ஒரு காலகட்டம் மட்டுமே எனச் சுட்டிக்காட்டுகின்றார்கள். இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் அமைக்கப்பட்ட உலக அமைப்பின் அதிகாரத்தினைக் கொண்டிருந்த அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள். வேறு எந்தவொரு ஏகாதிபத்திய வல்லரசுக்கும் இடமளிக்கா விதத்தில் தமது இராணுவ பலத்தைப் பாவித்து, உலகைத் தமது பிடிக்குள் கொணரும் திட்டத்தினை இப்போது 'பென்டகன்' தயார் செய்து கொண்டுள்ளது. ஏகாதிபத்திய வல்லரசுகள் இதற்கு இடமளித்துப் பின்னடிக்கப் போவதில்லை. இதற்கு இணங்கவே கிழக்கு ஐரோப்பாவிலும் அவ்வாறே சோவியத் யூனியனிலும் தமது காலனிகளைத் திணிக்கும் பொருட்டு ஜேர்மன் ஏகாதிபத்தியவாதிகள் ஏனைய ஐரோப்பிய ஏகாதிபத்திய வல்லரசுகளையும் பலாத்காரமாக இழுத்துக் கொண்டு அமெரிக்காவுக்கு எதிராக இறங்கியுள்ளது. அவ்வாறே பசுபிக் பிராந்தியத்திலும் தென் ஆசியாவிலும் தமது ஆளுமையை நிலைநாட்டும் பொருட்டு 1939-40 களில் தயார் செய்த யுத்த தேசப்படங்களை யப்பான் ஏகாதிபத்தியவாதிகள் மறந்து போய்விடவில்லை.

1960பதுகளில் இருந்து இந்திய காங்கிரஸ் கட்சி புதிய பிரதமரைத் தெரிவு செய்ததும் அவரின் முதல் வெளிநாட்டுப் பயணத்துக்கு சோவியத் யூனியனை தெரிவு செய்வது ஒரு மரபாக இருந்து வந்தது. இம்முறை இதை உடைத்த நரசிம்மராவ் தமது முதல் பயணத்துக்கு ஜேர்மனியைத் தெரிவு செய்தது தற்செயலானது அல்ல. எனினும் இந்த ஆட்சியாளர்கள் இதுகாறும் அமெரிக்காவுடன் செய்து கொண்டுள்ள இராணுவ, உடன்படிக்கை அமெரிக்காவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக இருந்து வந்த இராணுவ உடன்படிக்கையைத் தாண்டிச் செல்வதாக உள்ளமையும் அவ்வாறே தற்செயலானதல்ல. சோவியத் ஸ்டாலினிச அதிகாரத்துவத்துடன் சேர்ந்து இந்து சமுத்திரப் பிராந்தியத்தை சமாதான வலயமாக்கவும் தியா-கோகார்ஷியாவில் இருந்து அமெரிக்க முகாம்களை வெளியேற்றவும் பல்லாண்டுகளாகக் குரலெழுப்பிய இந்தியக் காங்கிரஸ் கட்சியின் புதிய திருப்பம் இது தான்!

இதற்கிடையே ஏப்ரல் முற்பகுதியில் நரசிம்மராவ் தமது நிதியமைச்சர் மன்மோகன் சிங்கினை யப்பானின் நிதி மூலதனத்தினை அணைத்துக் கொள்ளும் பொருட்டு டோக்கியோவுக்கு அனுப்பி வைத்தார். இந்திய நிதியமைச்சரை மிகக் குதூகலமாக வரவேற்ற யப்பானிய ஏகபோக உரிமையாளர்கள், இந்திய அரசாங்கம் இன்று பின்பற்றும் போக்கு 'சீர்திருத்தங்களில் இருந்து புரட்சிக்கு செல்லும் அளவிலான முக்கியத்துவம் கொண்டது' எனப் புகழ்ந்ததோடு இராப் போசன விருந்தும் அளித்தனர். அத்தோடு முதலீட்டு போசன விருந்தில் பேசிய மிட்சுபிசி அதிபர், தமது ஏகபோகம் இந்தியாவுக்கு 150 கோடி ரூபாக்களை முதலீடாக வழங்க வாக்குறுதி அளித்தார். ஏகாதிபத்தியச் சார்பு இந்திய ஆளும் வர்க்கம் தொழிலாளி — ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக காட்டுமிராண்டித் தாக்குதலைப் பயன்படுத்தி வழங்கும் அடிமை உழைப்பையும், வளங்களையும் சூறையாடக் காட்டும் இந்த அவதிக்குப் பொருத்தமான அரசியல் விதி முறையான இந்தியாவினைத் தமது தனியுரிமைக்குட்பட்ட ஒரு காலனியாக்கும் 1940பதுகளின் கனவுகளையிட்டு யப்பானிய ஏகபோக உரிமைக்காரர்கள் அசட்டையாக இருந்து வருகின்றார்கள் எனக் குணப்படுத்த முடியாத ஒரு அரசியல் அப்பாவியே நினைக்க முடியும்,

இந்நிலையிலேயே காலனித்துவத்தின் பேரில் போரிட்டு வரும் ஏகாதிபத்தியக் கும்பல்களின் வாலில் தொங்கும் நாய்ச் சண்டை துணைக் கண்டத்தில் கொம்பிரதோர் முதலாளிகள் கும்பல்களிடையே உக்கிரம் அடைந்துள்ளது. இரண்டாம் உலக யுத்த காலத்தில் ஆளும் வர்க்கத்தினுள் காணக் கூடியதாக இருந்த இந்த அவல நிலை இன்று இன்னும் மோசம் அடைந்துள்ளது. இப்பிராந்தியம் பிரித்தானியக் காலனியாக இருந்த காலத்தில் யப்பானுடன் வர்த்தகத் தொடர்புகளுக்கு 1930 களின் நடுப்பகுதியில் வரித்தடைகளை விதித்ததன் மூலம் யப்பான் கோஷ்டிக்கு ஆதரவினை முதலாளித்துவக் கும்பலின் கழுத்தை நசுக்க பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் நடவடிக்கை எடுத்தனர். அந்நிலையில் முதலாளித்துவ இந்திய காங்கிரஸ் கட்சியில் ஒரு சாரார் — காந்தி — நேரு தலைமைக்கு எதிராக பிரித்தெடுக்கப்பட்ட சுபாஷ் சந்திர போசும் அதைவிடக் கோழைத்தனமான முறையில் இலங்கை தேசிய காங்கிரசில் ஜயவர்தனா — டட்லி சேனநாயக்க பிரதிநிதித்துவம் செய்த முதலாளித்துவக் கும்பலும் யப்பானின் காலனித்துவ வேலைத்திட்டத்துக்கு ஆதரவாகச் செயற்பட்டனர். உலக யுத்தத்தில் தமது மோதுதலில் இருந்து அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் தலையெடுப்பதில் வெற்றி கண்டதைத் தொடர்ந்து வந்த யுத்தத்தின் பின்னைய உலக அமைப்பின் கீழ் இந்த வயிற்றுமாரி கொம்பிரதோர் கும்பல்கள் அனைத்தும் வெற்றிபெற்ற கோஷ்டிக்கு 'ஹாய்' போடுவதன் மூலம் (யங்கியின்) கையாட்களாக மாறின. ஏகாதிபத்தியவாதிகள் இதன் அடிப்படையிலேயே சுதந்திர ஆட்சி முறை எனப்படுவதை அமைத்தனர். ஆனால் இன்று உலக அரசியல் சிளர்ச்சியில் தோன்றியுள்ள ஏகாதிபத்தியங்களுக்கு இடையேயான மோதுதல்களுக்கு ஏற்ப பின்தங்கிய நாடுகளில் 'கொம்பிரதோர்' மத்தியில் பிளவுகளும், நெளிவு சுழிவுகளும் ஏற்பட்டுள்ளன. இந்திய ஆளும் வர்க்கத்தினுள் இந்தப் போக்கு நல்ல நாடகப் பாணியில் தெளிவாகியுள்ளது.

மாஸ்கோ ஸ்டாலினிஸ்டுகளதும் அவ்வாறே இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகளதும் ஸ்டாலினிஸ்டுகளதும் ஆதரவுடன் ஆட்சியில் இருந்து வந்த இந்திய ஆளும் வர்க்கக் கட்சியான காங்கிரஸ் கட்சி இப்போது மத்தியில் நான்கு கட்சிகளாகவும், மாநிலங்களில் பல கட்சிகளாகவும் பிளவுபட்டுப் போயுள்ளது. இது ஏகாதிபத்தியவாதி முகாம்கள் பிரிவினையுடன் தொடர்புபடாமல் இடம் பெற்றதல்ல. அவ்வாறே நரசிம்மராவின் கீழ் ஆட்சி நடாத்தி வரும் கட்சியினுள்ளேயே அர்ஜுன் சிங் தலைமையிலான குழு, பழைய நேரு வாதத்தினை கிளறியபடி வெளிப்பட்டுள்ளதும் தற்செயலான ஒன்றல்ல. நாட்டுக்கு நாடு அரசியல் சதிகள், எதிர் சதிகளுள் ஊடாக தத்தமக்குச் சார்பான ஆட்சியாளர்களைப் பதவியில் இருத்த காலனித்துவத்தில் இறங்கியுள்ள ஏகாதிபத்தியவாதிகள் செயற்படுகின்றார்கள். ஏகாதிபத்திய நாடுகளில் ஒரு ஊழலுக்குப் பின்னர் மறு ஊழலைக் கொணர்வதன் மூலம் உலக யுத்தத் திட்டங்களுக்குப் பெரிதும் பொருத்தமான ஆட்சியாளர்களைத் தெரிவு செய்யும் பொருட்டு இடம்பெறும் கயிறிழுப்பும் புதிய உலக அமைப்புக்காக ஆளும் வர்க்கத்தினுள் நடைபெறும் போரைக் காட்டுகின்றது.

## ஏகாதிபத்தியச் சார்பு ஆட்சியின் நெருக்கடி

இந்நிலையில் இலங்கையின் ஏகாதிபத்தியச் சார்பு ஆட்சியாளர்கள் மோசமான நெருக்கடிக்குள் சிக்கியுள்ளனர். பிரேமதாச அரசாங்கத்தின் உள்ளேயும் அவ்வாறே ஏனைய சகல முதலாளித்துவக் கட்சிகளின் உள்ளும் வெடித்துள்ள நெருக்கடியினதும், பிளவினதும் அர்த்தத்தினைக் காலனித்துவத்துக்காக ஏகாதிபத்தியம் செய்யும் முயற்சியின் பின்னணியிலேயே புரிந்து கொள்ள முடியும்.

உலக வங்கியினதும் சர்வதேச நாணய நிதியத்தினதும் சிபார்சின் பேரில் தொழிலாள ஒடுக்கப்படும் மக்கள் மேல் பளுவைத் திணிக்கும் பொறுப்பினை ஏற்ற ஜனாதிபதி ஜயவர்தனாவின் யூ. என். பி. அரசாங்கம் 1980பதுகள் பூராவும் உக்கிரம் கண்ட மக்கள் வெறுப்புக்குப் பாத்திரமாகியது. வட—கீழ் மாகாண தமிழ் தேசிய இனத்தினர் இனவாத முதலாளித்துவ அரசுக்கு எதிரான ஆயுதப்

(13 -ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# ஏகாதிபத்திய யுத்த ஆத்திரமூட்டலை நிறுத்து...

12 -ம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டத்தில் இறங்கியதோடு துரோக அதிகாரத்துவத்தின் கருங்காலி வேலைகளுக்கு மத்தியிலும் தெற்கில் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களின் ஒரு தொகை போராட்டங்களும் அரசாங்கத்துக்கு எதிராகத் தோன்றியது. சமசமாஜ, ஸ்டாலினிச, நவசமசமாஜ, இ. தொ. கா. மற்றும் மத்தியவாதத் தலைவர்களின் காட்டிக்கொடுப்பினை அடிப்படையாகக் கொண்டு ஜே. வி. பி. 1980 பதுகளின் நடுப்பகுதியில் சிறப்பாக கிராமப் புறங்களில் வெடித்த கிளர்ச்சியை முதலாளித்துவ அமைப்பைக் காக்கும் ஒரு பாசிச இயக்கமாகத் திருப்ப முயன்றது. இந்நிலையில் வடக்கில் தேசிய விடுதலைப் போராட்டத்தினாலும் தெற்கில் கிளர்ச்சிகளினாலும் சுற்றிவளைக்கப்பட்ட இராணுவ — பொலிஸ் இயந்திரத்தினால் முதலாளித்துவ ஆட்சியை இனியும் பாதுகாக்க முடியுமா என்பது ஆளும் வர்க்கத்தின் கவனத்தை ஈர்த்தது. இந்திய — இலங்கை உடன்படிக்கையின் படி ஒரு இலட்சம் இந்திய படைகளைக் குவித்த போதிலும் முதலாளித்துவ ஆட்சியினால் ஸ்திரமின்மையில் இருந்து தலையெடுக்க முடியவில்லை. இந்த நெருக்கடியில் இருந்து தலையெடுக்கும் ஒரு தீர்க்கமான நடவடிக்கை எடுக்கும் பொருட்டே ஆளும் வர்க்கம் பிரேமதாசவை ஜனாதிபதியாக நியமனம் செய்தது.

ஜனாதிபதி பதவிக்கு நியமனம் பெற்ற பிரேமதாச மக்களை ஒடுக்கும் இராணுவ — பொலிஸ் இயந்திரத்துக்கு மேலதிகமாகப் பயன்படுத்தக் கூடிய அரசியல் சக்திகளை தமது கைக்குள் போட்டுக் கொள்ளத் தொடங்கினார். சமசமாஜ, ஸ்டாலினிச, நவசமசமாஜ, மற்றும் சந்தர்ப்பவாத அதிகாரத்துவங்களைப் போலவே இந்திய — இலங்கை ஒப்பந்தத்துக்கு ஒரேயடியில் தோள் கொடுத்த ஈ.பீ.ஆர்.எல்.எப், டெலோ, புளொட் போன்ற தலைமைகளும் மக்களிடையே செல்வாக்கிழந்து போயிருந்தால் ஜனாதிபதி பிரேமதாசவின் கவனம் வடக்கு-கிழக்கில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினதும் தெற்கில் ஜே. வீ. பி.யினதும் ஆதரவைப் பெற்றுக் கொள்வதில் திரும்பியது. வடக்கில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினாலும் தெற்கில் பாசிச ஜே. வீ. பி.யினாலும் முண்டு கொடுத்து தாக்கிப் பிடிக்கப்பட்ட பொனபாட்டிச தலையாகத் தோன்றுவது ஜனாதிபதி பிரேமதாசவின் முயற்சியாகியது,

ஆனால் இவ்விரண்டு தோளும் முறிந்து வீழ்ந்தன. யூ. என். பி. அரசாங்கத்துடன் சமரசத்துக்குச் சென்றதும் மக்களிடையே செல்வாக்கிழந்த விடுதலைப் புலிகள் இயக்கம், தனது அரசியல் உயிர் பிழைக்கும் பொருட்டு பிரேமதாச அரசாங்கத்துடன் செய்து கொண்டிருந்த சமரசத்தினை தற்காலிகமாக உடைக்கும்படி தள்ளப்பட்டது. யூ.என். பி.யின் ஏகாதிபத்தியச் சார்பு அழிவு வேலைத்திட்டத்துக்கு இடமளிக்கும் பாசிச ஆயுதமாக மாறிய அளவுக்கு ஜே. வீ. பி. தொழிலாளர்களிடையேயும் அவ்வாறே கிராமப்புற மக்களிடையேயும் வெறுப்புக்கு உள்ளாகியது.

பிரேமதாச ஆட்சிக்கு தற்காலிக வசதி வாய்ப்புக்களை வழங்க விடுதலைப் புலிகள் இயக்கமும், ஜே. வீ. பி.யும் கொடுத்த ஆதரவினைச் சிறிதாகக் கணிக்க முடியாது. இந்தியப் படைகள் வெளியேறியதை தொடர்ந்து இனவாத யுத்தத்தினை மீண்டும் உக்கிரமாக்குவதற்கான இராணுவ், பொலிஸ் முகாம்களை வட— கீழ் மாகாணங்களில் திரும்பவும் திணிக்கும் வாய்ப்பு, ஒன்றரை வருடங்களுக்கு மேலாக விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் நடாத்திய பேச்சுவார்த்தையின் பின்னணியில் இனவாத அரசுக்குக் கிடைத்தது. ஜே. வீ. பி.யுடன் நடாத்திய கொடுக்கல் வாங்கல்களின் முடிவில் 1 இலட்சம் கிராமப்புற இளைஞர்களைப் படுகொலை செய்யும் இராணுவ — பொலிஸ் ஒடுக்குமுறைக்கு வழி சமைக்கப்பட்டது.

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியத்தின் ஊடாக நெருக்குவாரம் கொணரும் ஏகாதிபத்தியவாதிகள் தொழில் வெட்டிலும் இலவசக் கல்வி, இலவச சௌக்கிய சேவை போன்ற எஞ்சியுள்ள சேவைகளை ஒழித்துக் கட்டுவதிலும் பிரேமதாச அரசாங்கத்துக்கு இனியும் அவகாசம் வழங்கத் தயார் இல்லை. கடந்த ஆண்டு இறுதியில் வழங்க வாக்குறுதி அளித்த கடன் பணத்தினை மேற்சொன்ன நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படும் வரை ஒத்திப்போடும் அச்சுறுத்தல் ஏற்கனவே விடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்த ஏகாதிபத்தியச் சிபார்சுகளை அமுல் செய்கையில் தவிர்க்க முடியாத விதத்தில் தோன்றும் தொழிலாளி — ஒடுக்கப்படும் மக்களின் கிளர்ச்சியை நசுக்குவது எப்படி? ஏகாதிபத்தியவாதிகளின் இராணுவத் தலையீடுகளுக்குப் பின்னணி வழங்க சமசமாஜ, ஸ்டாலினிச, நவசமசமாஜ, இ.தொ.கா. மற்றும் சந்தர்ப்பவாத அதிகாரத்துவங்கள் இந்திய- இலங்கை உடன்படிக்கைக்கு ஆதரவு வழங்கியது போல் தயாராக இருந்தாலும், இக் கட்டத்தில் அத்தகைய ஒரு இராணுவத் தலையீடு பாம்புக்கு அடிக்கப் போய் சறுக்கிய பொல்லின் கதையாகுமோ என்ற சலனம் சில முதலாளித்துவக் கும்பல்களிடையே இருந்து வருகின்றது. சிறப்பாக ஒரு இலட்சம் இந்தியப் படைகளின் தலையீட்டின் மூலம் கிடைத்த பெறுபேறுகள் அவர்களின் மூளையைக் குளப்பி வருகின்றது.

கிராமப்புறங்களைப் போலவே நகர்ப்புறங்களிலும் கதியற்றுப் போன குட்டி முதலாளித்துவ ஊதாரிகள் பிரிவினை — இல்லாதோரை உள்ளோராக்கும் மோசடிப் பிரச்சாரத்தின் மூலம் அணிதிரட்டிக் கட்டியெழுப்பிய பாசிச இயக்கத்தினை இராணுவ- பொலிஸ் இயந்திரத்துடன் கூட்டாகப் பயன்படுத்தி மக்களை ஒடுக்குவதன் மூலம் ஏகாதிபத்தியவாதிகளின் நலன்களை இட்டு நிரப்புவது தமது இலாபமூட்டைகளைக் காப்பதாகும் என ஏகாதிபத்தியச் சார்பு முதலாளிகள் கும்பல்கள் கணித்துக் கொண்டுள்ளன. பௌத்த ஆலயங்களை களமாகக் கொண்ட அத்தகைய ஊதாரிகள் கும்பல்களைக் கொண்டு கட்டியெழுப்பப்படும் 'தேசிய சிந்தனை' (ஜாதிக சிந்தனை) யின் சகல பலத்தையும் பயன்படுத்த ஜனாதிபதி பிரேமதாசவின் தலைமையிலான கும்பல் திரும்பியுள்ளது. அரசாங்க பத்திரிகைப் பைத்தியங்களைப் பயன்படுத்தி ஜே. வி. பி.யின் நசல்களின் மிச்சசொச்சங்களை திரும்பவும் அணிதிரட்டும் முயற்சியில் பிரேமதாச அரசாங்கம் ஈடுபட்டுள்ளதற்கு காரணம் அதுவே.

ஆனால் பாசிச பேர்வழிகள் 'ஜாதிக சிந்தனை'யின் நிழலில் தலையெடுக்க முடியாது. அதற்குப் பணச் செலவினை தாங்க வேண்டும். முதலாளித்துவ அமைப்பினைக் காக்கும் பாசிச அலுகோசு வேலையில் ஈடுபட்டிருப்போர் தமது வயிற்றை நிரப்பும் அவஸ்தைக்கும் உள்ளாகியிருப்போர், அந்த அவஸ்தை நடவடிக்கையில் இந்த சமூகத் தட்டினரைத் தள்ளிய முதலாளித்துவ அமைப்பு அந்த முதலாளித்துவத்தின் பாதுகாப்புக்காக பயன்படுத்தும் பாசிச சேவையாக இச்சமூகத் தட்டினரையும் ஈடுபடுத்துகின்றது. அது பன்றியின் இறைச்சியைபன்றியின் உடம்பில் வைத்தேவெட்டும் செயலாகும். மரணிக்கப் போகும் பன்றியை அருகே கொணரும் பொருட்டு தீன் பண்டம் அவசியப்படுகிறது. பிரேமதாச கும்பல் இதற்கு அவசியமான பணத்தைத் திரட்டும் பொருட்டு உத்தியோகபூர்வமாகவும் உத்தியோகப்பற்றற்ற முறையிலும் நிதியுதவி வழங்கும் யப்பான் ஏகாதிபத்தியவாதிகள் பக்கம் தள்ளப்பட்டுள்ளது. அரசாங்கச் சார்பற்ற யப்பான் நிறுவனங்கள் பல உதவியுடன் 'கியூ'வில் இலங்கையில் குதித்துள்ளதோடு அதில் ஒரு கும்பலுக்கு பிரேமதாச அரசாங்கத்தின் சிறப்புப் பட்டங்களும் சூட்டப்பட்டுள்ளன.

## பிரித்தானிய அமெரிக்க ஆத்திரம்

இது இரண்டாம் உலக யுத்தத்துக்குமுன்னரும்பின்னரும் இலங்கையின் பாரம்பரிய ஏகாதிபத்திய எஜமான்களாக விளங்கிய பிரித்தானிய அமெரிக்க ஏகாதிபத்திய எஜமான்களை ஆத்திரமடையச்செய்துள்ளது, பிரித்தானிய உயர் ஸ்தானிகராக விளங்கிய க்ளாஸ்டன் பிரேமதாச அரசாங்கத்துக்கு எதிரான கள்ள வாக்குச்சீட்டு முறைப்பாட்டில் இறங்கியது இதன்படியே. அவ்வாறு அன்றி இலங்கை தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களின் வாக்குரிமையை கபக்கும் பொருட்டு பிரித்தானிய டோரி அரசாங்கத்தின் உயர் ஸ்தானிகர் ஈடுபட்டிருந்தார் என எவரும் கூறமுடியுமா? மறுபுறத்தில் இது இந்த உயர் ஸ்தானிகரின் பிரித்தானிய டோரி அரசாங்கம் அந்நாட்டு தொழிலாளர்களின் ஜனநாயக உரிமைகளை ஒழிக்கையில் எடுக்கப்பட்ட நடவடிக்கையாகும். ஆதலால் நீதியான தேர்தலின் பேரில் கொண்ட அக்கறையில் செய்யப்பட்டது அல்ல என்பது நன்கு தெளிவு. அமெரிக்கத் தூதரகம் இதற்கு இரண்டாம் தரமற்ற முறையில் அரசியல் நடவடிக்கைகளில் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் ஈடுபட்டுள்ளது. சிலாபம் இரணவிலையில் அணுவாயுத ஆய்வு கூடத்துக்கான தமது திட்டங்களை விரைவுபடுத்திய அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள், யூ. என். பி. அரசாங்கத்திற்கு அப்பாற்பட்ட முதலாளித்துவ கட்சிகளுடன் வெளிவெளியாகத் தொடர்பு வைத்துக் கொண்டுள்ளனர். அமெரிக்கத் தூதுவருடன் பேச்சுவார்த்தைக்கு தயாராகிக் கொண்டிருந்த வேளையிலேயே மக்கள் கட்சியின் தலைவர் விஜய குமாரணதுங்க படுகொலை செய்யப்பட்டார். சி. ல. சு. க. அமைப்பாளர் அனுர பண்டாரநாயக்காவுக்குச் சமீப காலமாக அமெரிக்க விஜயத்துக்கான அழைப்பு அதிகரித்துள்ளது. இவை பிரேமதாச அரசாங்கத்தினை எச்சரிக்கை செய்யும் வகையில் இடம் பெறும் நடவடிக்கைகள்.

யூ. என். பி.யுள் இருந்து அத்துலத்முதலி– திசாநாயக்க கும்பல வெளியேறியமைஇந்த ஏகாதிபத்திய அணிதிரள்வின் நலன்களின் பேரிலான கணிப்பின் படியேயாகும். இப்போது பிரேமதாச உடுகம்பொலவின் அறிக்கையானது வெளியில் தெரிவதை காட்டிலும் அரச இயந்திரத்தினுள் மிகவும் ஆழமாக இந்த ஏகாதிபத்திய அணிதிரள்வு ஊடுருவிக் கொண்டுள்ளதைக் காட்டுகின்றது.

கசினோ மன்னனாகப் பிரசித்தி பெற்ற ஜோகிம் உட்பட பிரேமதாச இயந்திரத்தின் வாடிக்கையாளர்கள் பலருக்கு விரல் நீட்டும் உடுகம பொல, ரஞ்சன் விஜேரத்ன படுகொலைக்கும் இவர்களுக்கும் இடையேயான தொடர்புகளுக்கும் சமிக்கை காட்டுகின்றார், அது மட்டுமன்றி பொலிஸ் — இராணுவத்தின் சில உயர் புள்ளிகள் இலஞ்சத்தினால் பீடிக்கப்பட்டுள்ளதாகவும் கூறுகின்றார். இக்குற்றச்சாட்டுக்கள் உண்மையில் கிழக்கேயிருந்து நாட்டினுள் ஊடுருவும் முதலீட்டாளர்களையும் வர்த்தகர்களையும் நினைவுபடுத்துவதாக உள்ளது. யப்பானில் இருந்து பெருக்கெடுத்து வரும் மூலதனத்தின் பின்னால் அந்த மூலதனத்தின் பாதுகாப்பினை உத்தரவாதம் செய்யக் கூடிய இராணுவ — பாசிச சதித் திட்டங்களும் பெருக்கெடுத்து வரத் தொடங்கியுள்ளன என்பதைப் புரிந்து கொள்ள அவ்வளவு நுண்ணறிவு அவசியம் இல்லை.

## துரோகத் தலைவர்கள்

பிரேமதாச ஆட்சிக்கு எதிரானக் கூறிக் கொண்டு சமசமாஜ, ஸ்டாலினிச, நவ சமசமாஜ தலைவர்களும் மற்றும் அதிகாரத்துவங்களும் இப்போது அத்துலத்முதலி-திசாநாயக்க - பண்டாரநாயக்க - குமாரணதுங்கபேர்வழிகளின் வாலில் மட்டுமன்றி - மாஜி பிரதி பொலிஸ் மா அதிபர் பிரேமதாச உடுகம்பொலவின் வாலிலும் தொங்குகின்றனர். இது விடுதலை புலிகள் அமைப்புடனான பிரேமதாசவின் பேச்சுவார்த்தைளை எதிர்ப்பதாகக் கூறிக் கொண்டு தமிழ் தேசிய இனத்துக்கு எதிரான இனவாத யுத்தித்தினை மீண்டும் தூண்டிவிடவும், ஜே.வீ.பி.யை எதிர்ப்பதாகக் கூறி இராணுவ — பொலிஸ் மக்கள் படுகொலை இயக்கத்துக்கும், ரஞ்சன் விஜேரத்னவின் 'பாதுகாப்பு' வேலைத்திட்டத்தை ஏற்றுக் கொண்டு இத்துரோகத் தலைவர்கள் வழங்கிய கொலைகார ஆதரவினை மேலும் முன்னெடுத்துச் செல்வதாகும். இத்துரோகிகள் இன்று நேரடியாக 'யங்கிடிக்கி' களாக மாறியுள்ளனர். இத்துரோகத்தின் மூலம் அரங்கேற்ற திட்டமிடும் பிரமாண்டமான அழிவினையிட்டு நாம் தொழிலாளி வர்க்கத்தையும், ஒடுக்கப்படும் மக்களையும் எச்சரிக்கின்றோம்.

ஏகாதிபத்தியவாதிகளின் நலன்களைப் பூர்த்தி செய்ய தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராகக் கொடிய தாக்குதல்களில் ஈடுபட்டுள்ள. ஆளும் வர்க்கத்தின் கோஷ்டிகளிடையே அதற்கான சிறந்த முறை எது என்பது பற்றி போர் நடைபெற்று வருகின்றது. இதனை அவர்கள் உரிய விதத்தில் தீர்த்துக் கொள்ள இடமளித்து, தொழிலாளி வர்க்கத்தின் சுயாதீனமான அரசியல் தலையீட்டினை பிற்போக்கின் நிழல் தடுத்துக் கொண்டுள்ளது. இதன் மூலம் நாளாந்தம் அதைப் பலப்படுத்துகின்றது. ஜே. வீ. பீ. க்கும் பிரேமதாச ஆட்சிக்கும் இடையே இடம்பெற்ற இரத்தம் தோய்ந்த கொடுக்கல் வாங்கல்களை ஆளும் வர்க்கத்துக்கு உரிய முறையில் தீர்த்து கொள்ள இடமளித்து சமசமாஜ, ஸ்டாலினிச, நவசமசமாஜ மற்றும் மத்தியவாதிகள் வாழா விருந்தினர். இங்ஙனம் அரச இயந்திரத்தின் பின்னால் வயிறழந்ததன் மூலம் இலட்சத்துக்கும் அதிகமான கிராமப்புற இளைஞர்கள் உயிர்ப்பலி கொடுக்க நேரிட்டதை நாம் சகல போராளிகளுக்கும் மீண்டும்

14 ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# ஏகாதிபத்திய யுத்த ஆத்திரமூட்டலை நிறுத்து...

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

நினைவூட்ட விரும்புகின்றோம்.

பிரித்தானியரின் பின்னர் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளால் பயிற்சியளித்துப் பலப்படுத்தப்பட்ட இராணுவ — பொலிஸ் இயந்திரம், தமது ஆளுமைக்கு அடிபணியாது தொழிற்படும் 'கறுப்பு பூனைகள்' போன்ற கொலைகாரக் கும்பல்களதும் பாசிசப் புள்ளிகளதும்பெருக்கத்தினைமகிழ்சியுடன் பொறுத்துக் கொள்ளாது. அவர்களுக்கு அவசியப்படுவது, அவர்களின் ஆளுமைக்கு முழுமனே அடிபணிந்த குண்டர் கும்பல்களே. அத்துலத்முதலி — திசாநாயக்க — பண்டாரநாயக்க போன்ற முதலாளித்துவப் பிரிவினர் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுடன் நன்கு நெருங்கி கட்டியெழுப்ப முயற்சிப்பது அத்தகைய இராணுவ — பொலிஸ் சர்வாதிகாரமே.

தொழிலாள- ஒடுக்கப்படும் மக்களின் கிளர்ச்சி நிலைமையின் கீழ் இராணுவ-பொலிஸ் அணிகளின் ஒடுக்கு முறைப் பலத்தினைச் சந்தேகிக்கும் பிரேமதாச தலைமையிலான முதலாளித்துவ பிரிவினர், யப்பானுடன் நன்கு நெருங்கி ஒரு பாசிச இயக்கத்தினை ஆட்சியில் இணைத்துக் கொள்ள ஜே. வீ. பி. ஊடாக எடுத்த முயற்சியைக் கைவிட்டு விடவில்லை.

1931—32ல் வொன்பெபனின் அரசாங்கத்தின் கீழ்ஹிட்லருக்கும் ஜேர்மன் இராணுவத்துக்கும் இடையே ஆட்சிக்காகஇடம்பெற்ற கயிறுஇழுப்புக்குச் சமானமான ஒரு அரசியல் நிலைமை எம்முன்னே உருவாகியுள்ளதை இது சுட்டிக் காட்டுகின்றது. அன்று ஜேர்மன் சமூக ஜனநாயகக் கட்சியினதும் ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சியினதும் கடைகெட்ட காட்டிக் கொடுப்புக்கள் ஹிட்லரின் நாசி ஆட்சிக்கு வழிவகுத்தது. சமூக ஜனநாயகவாதிகள் ஹிட்லரை ஒடுக்குவதை றைச்சல் இராணுவத்திடம் ஒப்படைத்துவிட்டு, தொழிலாளி வர்க்கம் சுயாதீனமாகத் தலையிடுவதைத் தடுத்தனர். ஸ்டாலினிஸ்டுகள் 'ஹிட்லரின் பின்னர் எமது முறை' என்ற மலட்டு.மோசடிநப்பாசையை வளர்த்தனர். இதன் மூலம் தொழிலாளி வர்க்கத்தின் தலையீட்டுக்கு எதிரான விலங்கை இறுக்கினர். ஜேர்மனியிலும் அவ்வாறே உலகத் தொழிலாளி வர்க்கத்துக்கும் அக்காட்டிக் கொடுப்பின் மூலம் அவர்கள் தேடிக்கொடுத்த இலட்சோப லட்சம் மக்கட் படுகொலைகளை உள்ளடக்கிய அழிவினை இங்கு விபரிக்க வேண்டியது அவசியம் இல்லை.

தத்தமது ஆட்சி அதிகாரங்களுக்கு இடையே போட்டியிட்டு ஒடுக்குமுறை விதிமுறைகளைத் தேர்ந்தெடுப்பதில் நெருக்கடிக்கு மேல் நெருக்கடிக்குள் தள்ளப்படும் ஆளும் வர்க்கப் பிரிவினருக்கு இடமளிப்பதால் ஏற்படும் பெறுபேறு என்ன? தமது ஆட்சி விதிமுறையைத் தேர்ந்தெடுத்ததன் பின்னர் ஆளும் வர்க்கம் முன்னொருபோதும் இல்லாத விதத்தில் ஒடுக்குமுறையை தொழிலாள-ஒடுக்கப்படும் மக்கள் மேல் திணிக்கிறது. அத்தகைய ஒரு சந்தர்ப்பம் கிடைப்பின் தமது ஆட்சியைச் சவாலுக்குள்ளாக்கி அதை ஆட்டங்காணச் செய்ததற்கான முழு பழியையும் இலட்சோப லட்சம் உயிர்களைப் பலி எடுப்பதன் மூலம் ஆளும் வர்க்கம் தொழிலாள - ஒடுக்கப்படும் மக்களிடமிருந்து பெற்றுக் கொள்ளும். இதைத் தவிர்க்கும் பொருட்டு சுயாதீனமாகத் தலையீடுதல் தொழிலாள வர்க்கத்துக்கு வழங்கப்பட்டுள்ள பெரும் பொறுப்பாகும்,

சமசமாஜ — ஸ்டாலினிச, — நவசமசமாஜ — இ. தொ. கா. மற்றும் மத்தியவாதிகளின் வீதித் தடைகளை உடைத்தெறியும் பொருட்டு தொழிலாளி வர்க்கம் கிளர்ந்து எழ வேண்டும். தொழிலாளி வர்க்கம் தனது சுயாதீன அரசியல், சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டுவதன் மூலம் தொழிலாளர் — விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணர வேண்டும் என புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வலியுறுத்தக் சாரணம் அதுவே. தொழிலாளி வர்க்கம் முகம் கொடுக்கும் சகல தீர்க்கமான பிரச்சினைகளின் பேரிலான போராட்டங்களும் இந்த அரசியல் முன்நோக்கின் அடிப்படையில் இடம் பெற வேண்டும். ஏகாதிபத்திய உலக நெருக்கடியில் இருந்து பெருக்கெடுக்கும் அழிவுமிக்க முதலாளித்துவ வேலைத்திட்டம் அதனைத் தொழிலாளி வர்க்கத்துக்கு அவசியமாக்கியுள்ளது, ஏகாதிபத்தியத்துக்கு எதிராக நின்று வரும் உலக தொழிலாளி வர்க்கத்தின் ஒரு பிரிவினராக அனைத்துலகப் புரட்சிகர வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாளி வர்க்கத்தினை அணிதிரட்டுவதன் மூலமே ஏகாதிபத்தியச் சார்பு முதலாளி வர்க்கத்தின்வேலைதிட்டத்தினைத் தோற்கடிக்க முடியும்.

1991 பேர்ளின் உலகதொழிலாளர் மகாநாட்டில் நிறுவப்பட்ட அனைத்துலகத் தொழிலாளர் பாதுகாப்பு கமிட்டி, இந்த விதிமுறையினை உலகத் தொழிலாள வர்க்கத்தினுள் நிலைநாட்டும்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது. அமெரிக்க கிரேகவுன்ட் பஸ் கம்பனிச் சாரதியான றொஜர் கவுத்ராவுக்கு எதிராக பொய் வழக்குத் தாக்கல் செய்து வேட்டையாட பஸ் கம்பனியும் போக்குவரத்து தொழிலாளர் யூனியனின் துரோக அதிகாரத்துவமும் ராஜாங்கத் திணைக்களமும் எடுத்துள்ள நடவடிக்கைக்கு எதிராக கடந்த பெப்ரவரி 28ம் திகதி இலங்கை, இந்திய தொழிலாளர்கள் உட்பட உலகின் நான்கு கண்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஒரே நாளில் பிரச்சாரத்தில் ஈடுபட்டது அப்போராட்டத்தின் முக்கிய ஒரு நடவடிக்கையும் வெற்றியுமாகும். இந்தப் புரட்சிகர சம்பிரதாயங்கள் உலகத் தொழிலாளி வர்க்கத்தினுள் மீண்டும் உயிர்பெறும் பொருட்டு அனைத்துலகக் குழுவின் தலைமையிலான நான்காம் அகிலம் போராடுகின்றது.

ஏற்கனவே பிரமாண்டமான தொழில் அழிவுகளுக்கும்,சேவை, வாழ்க்கைத்தரங்களின் துடைத்துக் கட்டல்களுக்கும், ஜனநாயக உரிமை ஒழிப்புக்களுக்கும் முகம் கொடுத்துள்ள தொழிலாளி வர்க்கம் ஏகாதிபத்தியச்சார்பு பிரேமதாச அரசாங்கத்தின் தாக்குதல்களுக்கு எதிராக கிளர்ந்து எழுந்துள்ளது. இந்நிலையில் தமிழ்தேசிய இனத்தினதும் கிராமப்புற ஏழைகளதும் பெரும் வாழ்க்கை, ஜனநாயக பிரச்சினைகளைத் தீர்க்கும் அனைத்துலக புரட்சிகர வேலைத்திட்டத்தினை நோக்கி ஈர்க்கப்படும் என அச்சம் கொண்டுள்ள துரோக அதிகாரத்துவங்கள் ஒருதொகை எதிர்ப்புப் போராட்டங்களில் தொழிலாளர்களை ஈடுபடுத்தி அலைக்கழிக்கும் வேலையை ஆரம்பித்துள்ளனர். இந்த எதிர்ப்புப் போராட்டங்கள் எனப்படுபவை சமசமாஜ — ஸ்டாலினிச — நவசமசமாஜ — இ. தொ. கா. துரோகிகளைப் போலவே பாலர்தம்பு போன்ற ஏனைய துரோக அதிகாரத்துவங்களும் கடைப்பிடிக்கும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ சர்வாதிகாரத்துக்கு கதவினைத் திறக்கும் பிற்போக்கு அரசியலின் வாலில் கட்டும் முயற்சியை தொழிலாள வர்க்கம் ஒரேயடியாக நிராகரிக்க வேண்டும்.

மார்ச் 22ல் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் கூட்டிய தொழிலாளர்—ஒடுக்கப்படும் பேராளர் மகாநாடு நிறைவேற்றிய ஜனநாயக கோரிக்கைகளையும் உள்ளடக்கிய சோசலிச வேலைத் திட்டத்தின் அடிப்படையில் இலங்கை — ஈழம் சோசலிச குடியரசினை நிறுவுவதை இலக்காகக் கொண்ட பொது வேலை நிறுத்தத்தின் மூலம் தொழிலாளி வர்க்கம் ஒடுக்கப்படும் மக்களை தம்மைச் சூழ அணிதிரட்டிக் கொள்ள வேண்டும்.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கை கிளை என்ற முறையில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொழிலாளி — ஒடுக்கப்படும் மக்களை சுயாதீனமாக அணிதிரட்டச் செய்யும் இந்த புரட்சிகர ஆரம்பிப்பினை சித்றடிக்கும் பொருட்டு நவசமசமாஜ கட்சி செய்யும் ஆத்திர மூட்டும் முயற்சி பற்றி இங்கு சிறப்பாகக் குறிப்பிட வேண்டும் யுத்தத்தின் பின்னைய உலக அமைப்பின் கீழ் இங்கு நிறுவப்பட்ட இனவாத முதலாளித்துவ அரசுக்கு 1940பதுகளின் கடைப்பகுதியிலேயே இயைந்து போகத் தொடங்கிய சமசமாஜக் கட்சியை, காட்டிக் கொடுப்பின் பாதையில் இறுதிவரை இட்டுச் சென்ற பப்லோவாத ஏர்ணஸ்ட் மண்டேல் இன்று நவசமசமாஜக் கட்சிக்கு ட்றொட்ஸ்கிச முகமூடி வழங்க முன்வந்துள்ளார். இது புரட்சிக் கட்சிக்கும் தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிரான கடைகெட்ட ஆத்திரமூட்டலுக்கான தயாரிப்பாகும். பேரளவிலேனும் ட்றொட்ஸ்கிஸ்ட் ஆக நின்று வந்த 1960 பதுகளில் ஏர்ணஸ்ட் மண்டேலினால் தமது ஆதரவாளர்களிலிருந்து ஓட்டி கலைக்கப்பட்ட வாசுதேவ நாணயக்கார, விக்கிரமபாகு கருணாரத்னவை அவர் மீண்டும் அணைத்துக் கொண்டுள்ளமைக்கு வேறு அர்த்தம் இருக்க முடியாது. சகல முதலாளித்துவக் கும்பல்களின் பின்னாலும் கேவலமான வயிறளப்பில் ஈடுபட்டுள்ள நவசமசமாஜக்காரர்கள் இம்முறை மே தினத்தில் வேறாக கூட்டம் நடத்துவதானது தொழிலாளி — ஒடுக்கப்படும் மக்களின் கண்களில் மண்வீசுவதாகும். அத்தோடு அவர்கள் ஆத்திரமூட்டும் நடவடிக்கைக்கு தயாராகும் மற்றோர் நடவடிக்கையேயன்றி இது வேறொன்றும் அல்ல.

இத்தகைய ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் பப்லோவாதிகள் இன்று ஈடுபடக் காரணம், ஏகாதிபத்திய உலக அமைப்பினைக் காப்பதும் தொழிலாளி வர்க்கத்தின் உலகக் கட்சியை கரைக்கையில் இதுகாறும் அவர்கள் பெற்று வந்த மூடுதிரை ஸ்டாலினிசத்துள் இருந்து தோன்றிய கொம்பிரதோர் கும்பலினால் ஒழிக்கப்பட்டுள்ளதுமேயாகும். இப்போது ஏகாதிபத்திய [illegible]ாசகார நடவடிக்கைகளைக் காப்பது எவ்வளவுதான் பலவீனமாகியிருந்தாலும் அது தமது தோளில் வீழ்ந்திருப்பதை மண்டேலும் அவ்வாறே நவசமசமாஜ தலைவர்களும் நன்கு அறிந்து கொண்டுள்ளனர். ஆதலால் குப்பைக் குடும்பத்தைச் சுற்றிச் சுழலும் இலையான்களைப் போல சகல திரிபுவாதப் போக்குகளும் கடந்த சகாப்தத்தில் தமது அடிமைத்தனமாகக் கொண்ட சோவியத் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் 68 ஆண்டு காலக் காட்டிக்கொடுப்பு, துரோகம், அரசியல் குற்றங்கள் பற்றிய பூரண அறிக்கையினை உலகத் தொழிலாள வர்க்கத்தின் எதிரில் வைக்க நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு எடுத்துள்ள தீர்மானம் வரலாற்று முக்கியத்துவம் பெறுகின்றது. மாஸ்கோ அரச சுவடிகள் காப்பகம் திறக்கப்படும் நிலைமையின் கீழ் புரட்சிகர உலகக் கட்சியின் சுயாதீன ஆய்வுக் குழுவின் மூலம் தயார் செய்யப்படும் ஆய்வு அறிக்கை ஸ்டாலினிசத்தை மார்க்சிசமாக அறிமுகம் செய்ய பல தசாப்தங்களாக ஸ்டாலினிஸ்டுகளும் திரிபுவாதிகளும் மேற்கொண்ட மோசடி மிக்க முயற்சியின் சகல அம்சங்களும் சிதறடிக்கப்படும். ஸ்டாலினிசத்தினால் உலக ரீதியில் அழித்தொழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்ட மார்க்சிச அரசியல் கலாசாரத்தை உலகத் தொழிலாள வர்க்கத்தினுள் புனருத்தாரணம் செய்ய அனைத்துலகக் குழு எடுக்கும் இந்த ஆரம்பிப்பு பெரிதும் உதவும். உலகப் புரட்சிகர இயக்கத்தின் அடிப்படையான மூலோபாய அனுபவங்களைத் தொழிலாள வர்க்கத்தினுள்ளும், ஒடுக்கப்படும் மக்களிடையேயும் தெளிவுபடுத்தப் போராடுவதன் மூலமே உலகத் தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகரத் தலைமையைக் கட்டியெழுப்புவது சாத்தியமாகும். இதற்கு குறுக்கு வழிகள் கிடையாது.

இந்திய சோசலிசத் தொழிலாளர் கழகத்துடன் சேர்ந்து இந்தியத் துணைக்கண்டப் பிராந்தியத்தில் இந்த உலகப் புரட்சிகர பொறுப்புகளுக்குத் தோள் கொடுக்க நான்காம் அகிலத்தின் இலங்கை கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் சபதம் பூண்டுள்ளது. தொழிலாள — ஒடுக்கப்படும் போராளிகள் அனைவரையும் இந்த மே தினத்தில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேர்வதன் மூலம் இந்த வரலாற்றுப் பணியை இட்டு நிரப்பும் புரட்சியாளனாகுமாறு அழைக்கின்றோம்.

---

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

சியலை அடியோடு தூக்கி வீசிவிட்டு ஏகாதிபத்திய ஆட்சியாளர்களின் புதிய காலனியாக இந்தியாவை காங்கிரஸ் அரசாங்கம் திறந்து விட்டுள்ளதை சுட்டிக்காட்டுகின்றது. இந்து சமுத்திரத்தில் இந்திய--அமெரிக்க கடற்படைகளின் கூட்டுப் பயிற்சி லோக்சபாவில் 'சரணாகதி' கூச்சலை எழுப்பும் அளவுக்கு இது வெளிவெளியாக இடம் பெற்றுள்ளது. இந்த தடை இலங்கை இனவாதிகளின் வரவேற்பைப் பெற்றுள்ளது. இந்திய சமாதானப்படைகளின் கூலிப்படைகளாகச் செயற்பட்ட டெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப் போன்ற தேசியவாதிகள் மட்டுமன்றி, இனவாத சிங்கள முதலாளித்துவ அரசினை அணைத்துக் கொண்டுள்ள சமசமாஜ, கம்யூனிஸ்ட், நவசமசமாஜ, இ.தொ.கா. கட்சிகளின் துரோகிகளும் இதை 'இறைமையையும்' 'ஒருமைப்பாட்டையும்' காக்கும் நடவடிக்கை என வரவேற்றுள்ளனர்.

---

கொழும்பு — 10. 1ஆவது மாளிகாகந்தை ஒழுங்கை, இலக்கம் 90, வசிக்கும் ஆனந்த வக்கும்புறவினால் மஹரகம நாகஹவத்தை வீதி, 51ஆம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



# சோவியத் யூனியனின் முடிவும்..

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் போதனை வரலாற்றின் மாபெரும் 'கொந்தளிப்புக்களுக்கு மத்தியில் முன்னேறிச் செல்லும். 1990கள் இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவினைத் தொடர்ந்து வந்த எந்தவொரு தசாப்தத்தினையும் போலிருக்கப் போவதில்லை. ஏகாதிபத்தியம் உண்மையில் என்ன என்பதை இலட்சோப லட்சம் மக்கள் காணப் போகிறார்கள், ஜனநாயக முகமூடி கிழித்தெறியப் படப்போகின்றது, ஏகாதிபத்தியம் சமாதானத்துடன் ஒத்துப்போகக் கூடியது என்ற கருத்தும் ஏனையவையும் அம்பலமாக்கப்படப் போகின்றது. வெகுஜனங்களைக் கடந்த காலத்தில் புரட்சிகரப் போராட்டங்களுள் தள்ளிய அதே மூலகங்கள் மீண்டும் தோன்றியுள்ளன. ருஷ்ய, உக்ரேன் தொழிலாளர்கள் முதலிடத்தில் அவர்கள் ஏன் ஒரு புரட்சியை நடாத்தினார்கள் என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளப் போகிறார்கள். முன்னைய ஒரு காலப் பகுதியில் கூட்டுத்தாபனங்களுக்கு எதிராக ஒரு மிகவும் பிரமாண்டமான போராட்டத்தில் ஏன் ஈடுபட்டிருந்தார்கள் என்பதை அமெரிக்கத் தொழிலாளர்கள் நினைவூட்டிக் கொள்ளப் போகின்றார்கள். ஐரோப்பியத் தொழிலாளர்கள் ஏன் தமது கண்டம் சோசலிசத்தினது தாயகமாகவும் கார்ள் மார்க்சின் பிறந்தகமாகவும் விளங்கியது என்பதை நினைவுபடுத்திக் கொள்ளப் போகிறார்கள்.

ஏற்கனவே நான் குறிப்பிட்டது போல் எமது 1990 பத்திரத்தில் நாம் பின்வரும் கேள்வியை எழுப்பினோம்: முதலாளித்துவத்தின் புனருத்தாரணத்தினைக் காட்டிலும் அதிக வேகத்துடன் அரசியல் புரட்சி அபிவிருத்தி அடையுமா? உலக சோசலிசப் புரட்சி மூன்றாம் உலக யுத்தத்தினைக் காட்டிலும் அதிக வேகத்துடன் வளர்ச்சி பெறுமா? நடந்துள்ளது போல் சோவியத் யூனியனின் அழிவினைத் தடுக்கும் விதத்தில் உரிய காலத்தில் அரசியல் புரட்சி அபிவிருத்தி அடையவில்லை. இன்றுள்ள ஆபத்து நாம் காலடி வைத்துள்ள வரலாற்றுக் காலப்பகுதியினுள் உலகப் புரட்சி அபிவிருத்தி காணவில்லையாயின் மனித கலாச்சாரம் நாசமாக்கப்படும் என்பதே. உலகப் பொருளாதாரம் மீண்டும் ஒருமுறை கட்டுப்பாடின்றிப் போயுள்ளது. உலகப் பொருளாதாரத்துக்கும் தேசிய அரசு முறைக்கும் இடையேயான முரண்பாடுகளின் வெடிப்புக்களினால் கட்டவிழ்க்கப்பட்ட மூலகச் சக்திகளினால் தமது கொள்கையை ஒன்றிணைக்கும் முதலாளித்துவத்தின் திறன் தோல்வி கண்டுள்ளது. முதலாளிகளால் அதைக் கட்டுப்படுத்த முடியாது. அவர்களிடம் பதில் கிடையாது. அவர்கள் ஒரு பதிலைக் காண முயற்சிப்பதைக் கூடக் கைவிட்டு விட்டனர்.

வர்த்தக, வரிபொது உடன்படிக்கை (கட்) பேச்சுவார்த்தைகள் சிதறுண்டு போய்விட்டன. சர்வதேச நாணயக் கொள்கை குழம்பிக் கிடக்கிறது. மிகச் சமீபகாலம் வரை உலக முதலாளித்துவம் நாணயத்தினதும் வட்டி வீதங்களதும் ஏற்ற இறக்கங்களை ஒருங்கிணைக்க முயன்றது. ஆனால் ஒரு கால் நூற்றாண்டு காலத்திற்கும் பின்னர் அமெரிக்கா தனது வட்டி வீதங்களை மிகக் குறைந்த மட்டத்திற்குத் தள்ளிய அதே கிழமையில் ஜேர்மன் வங்கி தேசிய வட்டி வீதத்தினை பண்ட்ஸ்றி பப்ளிக் அமைத்ததின் பின்னர் முதற் தடவையாக உச்சக் கட்டத்திற்கு உயர்த்தியது. இதன் மூலம் உலகில் மிகவும் பலம் வாய்ந்த ஏகாதிபத்திய நாடுகளுக்கு இடையேயான நாணயக் கொள்கைகளை ஆதாள பாதாளத்திற்குத் தள்ளியது. அதனால் எந்தவொரு அரசாங்கமும் கட்டுப்படுத்த முடியாத ஒரு ஸ்திரமின்மையைச் சிருஷ்டித்தது.

## உலக சோசலிசப் புரட்சி

எல்லாமே உலகப் புரட்சியின் அபிவிருத்தியில் தங்கியுள்ளது எனக் கூறும் போது அது ஒரு சோம்பேறி வார்த்தை அல்ல. இறுதி ஆய்வுகளில் சோவியத் யூனியனின் சரிவு, உலக சோசலிசப் புரட்சியின் பயங்கரமான தாமதத்தின் விளைவாகும். உண்மையில் ஸ்டாலினிஸ்டுகள், உலக சோசலிசப் புரட்சியை இழுத்துப் பிடிக்க ஏகாதிபத்தியம் பயன்படுத்திய ஒரு பொறிமுறையாகும். ஆனால் இறுதியில் சோவியத் யூனியனின் சரிவுக்கான அடிப்படைக் காரணம் தனியொரு நாட்டில் ஒரு தொழிலாளர் அரசினைப் பராமரிக்க முடியாமையாகும். லெனினும், ட்ரொட்ஸ்கியும் ஏனைய சகல மாபெரும் மார்க்சிஸ்டுகளும் கூறியது போல்: ஒன்றில் உலகச் சோசலிசப் புரட்சி சோவியத் யூனியனை ஆபத்திலிருந்து மீட்டெடுக்க வரும் அல்லது சோவியத் யூனியன் ஒழிக்கப்படும். சோவியத் யூனியனில் உள்ள ஒரு ஆட்சியாளர் செய்வது எல்லாமே சரியென ஒருவர் கற்பனை செய்து கொண்டிருந்திருப்பினும் கூட சோவியத் யூனியன் தொடர்ந்து தனிமைப்பட்டிருப்பின் அது அழிக்கப்படும் என ஒருவர் கூறலாம்.

உண்மையில் றோசா லக்சம்பேர்க் ருஷ்யப் புரட்சி பற்றிய அவரது மாபெரும் கட்டுரைகள் சிலவற்றில் இந்தக் கருத்தினை 1917- 18ல் வெளியிட்டார். அவர் போல்ஷிவிக்குகளின் அரசியலை விமர்சித்து வந்தார். அதைப் பற்றி விரிவாக ஆராய இடம் இதுவல்ல. அவரின் , சில விமர்சனங்கள் மிகவும் தூரதிருஷ்டி மிக்கவை. சில தவறானவை. ஆனால் அவளது விமர்சனங்களுள் மிகவும் முக்கியமானது, போல்ஷிவிக்குகளின் சகல தவறுகளும் — அப்படிச் சொல்லுகையில் சமூக ஜனநாயகத்தினால் அனைத்துலகப் பாட்டாளி வர்க்கம் காட்டிக்கொடுக்கப்பட்டதால் ருஷ்யப் புரட்சி அகப்பட்டுக் கொண்ட சங்கடமான நிலைமையில் இருந்து தோன்றின என்பதாகும். மறு வார்த்தையில் சொன்னால் போல்ஷிவிக்குகளின் சகல பிரச்சினைகளையும் அவள் சோசலிசப்புரட்சி காட்டிக் கொடுக்கப்பட்டதற்கும் தாமதமானதற்கும் காரணம் கற்பித்தாள்.

1918-1919 காலப்பகுதியின் பின்னர் - உண்மையில் லெனினின் மரணத்தின் பின்னர் தொழிலாளி வர்க்கத்தின் தோல்விகளுக்கான ஆரம்பக் காரணியாக ஸ்டாலினிச அரசியல் விளங்கியது. ஆனால் சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்கான இறுதியான அடிப்படைக் காரணம் ருஷ்யப் புரட்சி முன்னேறிய நாடுகளுக்கு விஸ்தரிக்கப்படாததே என்பதை நாம் வலியுறுத்த வேண்டும். அத்தோடு ஆழமான உலக நெருக்கடியின் மத்தியில் உலக சோசலிசப் புரட்சி முன்னேற முடியாது போனால் மனித இனம் விபத்துக்குள்ளாகிவிடும் என நாம் மீண்டும் எச்சரித்தாக வேண்டும்.

ஒரு நடைமுறைப் பிரச்சினை என்ற முறையில் உலக சோசலிசப் புரட்சியின் அபிவிருத்தி பழைய அமைப்புக்களுக்கு எதிரான ஒரு தொழிலாள வர்க்கக் கிளர்ச்சியுடன் இணைந்து கொண்டுள்ளது.

அடுத்த காலப் பகுதியில் விடயங்கள் இலகுவாகிவிடாது. உலகின் ஒவ்வொரு நாட்டிலும் தொழிலாளி வர்க்கம் ஒரு காட்டுமிராண்டிப் போராட்டத்தினைச் சந்திக்கப் போகின்றது. ஆனால் அந்தப் போராட்டம் ஒரு வாய்ப்பான தாக்கத்தினைக் கொண்டிருக்கும். தொழிலாள வர்க்கத்தின் போராட்டங்களின் முன்னணியில் ஒரு சிறந்ததும் ஆரோக்கியமுமான தட்டினர் தோன்றுவர். எமது இயக்கத்துக்கும் இந்தத் தலைநீட்டிவரும் தன்னியல்பான அபிவிருத்திக்கும் இடையே ஒரு மாற்றமடைந்த உறவு தொழிலாள வர்க்கத்தின் உள்ளே காணப்படுகின்றது. நாம் இதனை அபிவிருத்தி செய்து, பயிற்சியளித்து, வழிநடாத்தி, ஒரு முன்நோக்கினை வழங்குவோம். உலகெங்கும் இன்று அருகிக் காணப்படுவது அதுவே. சந்தர்ப்பத்துக்குக் குறைச்சலே இராது. உலகம் பூராவும், அமெரிக்காவினுள்ளும் ஒரு சமூக, அரசியல் நெருக்கடி துரிதமாக வளர்ச்சி காண்கிறது. முதலாளி வர்க்கம் ஆழமாகப் பிளவுண்டு, குழம்பிப் போய்க் கிடக்கின்றது. அவர்களின் பொது ஜனத் தொடர்புச் சாதனங்களில் இந்த அவஸ்தைப் போக்கின் மூலகத்தினைக் கண்டு கொள்ள முடியும்.

தொழிலாள வர்க்கத்தினை கட்டுப்படுத்தி வைத்திருக்க முதலாளிகள் மேலும் மேலும் பழைய அதிகாரத்துவங்களது திறனிலும் அதிகாரத்துவச் சிறை முகாம்களாக்கப்பட்டுள்ள பழைய தொழிலாளர் அமைப்புக்களிலும் முற்றிலும் தங்கியுள்ளனர். ஆம், அங்கு ஓர் வெல்லமுடியாத வாசனை இருந்து வந்தது. ஆனால் அங்கு ஓர் வாசனைக்கும் நிஜ நிலைமைக்கும் இடையே பெரும் மாற்றம் உள்ளது. தொழிலாள வர்க்கத்தின் முதல் நிஜ எதிர்த்தாக்குதல் ஆளும் வர்க்கத்திலுள்ளே ஒரு பீதியைக் கட்டவிழ்த்துவிடும்.

சோவியத் அதிகாரத்துவத்தின் சிதறடிப்பு, பெரும் ஆபத்தினைத் தோற்றுவித்துள்ள போதிலும் பெருமளவுக்குப் போராட்டத்துக்கான மேடையை தயாரித்துள்ளது. ஊழலினதும் சந்தர்ப்பவாதத்தினதும் மாபெரும் மூலமும் சட அடிப்படையும் மூடப்பட்டுள்ளது. கம்யூனிஸ்ட் கட்சிக்கு கிரேம்ளின் இலட்சோப இலட்சங்கள் மானியம் வழங்கியது. நாற்றம் கண்டு, ஊழல் நிறைந்த புத்திஜீவிகளுக்கு சோவியத் அதிகாரத்துவத்துக்குத் துதிபாட கூலி வழங்கப்பட்டது. இன்று இந்தச் சகல அமைப்புக்களும், போர்வழிகளும் குழம்பிப் போயுள்ளனர். தொழிலாளி வர்க்கத்தினுள் இவர்கள் செல்வாக்கிழந்துள்ளனர்,

தொழிலாளர்கள் இந்தச் சம்பவங்களில் இருந்து படிப்பினைகளைப் பெற வேண்டும். எவ்வாறெனினும் அவர்கள் தன்பாட்டில் படிப்பினைகளைப் பெற்றுக் கொள்வார்கள் என நாம் எதிர்பார்க்கவில்லை. தொழிலாளர்கள் போராடுவார்கள் என நாம் எதிர்பார்க்கின்றோம், அது அல்ல பிரச்சினை. அவர்கள் சோவியத் யூனியனுள் போராடியுள்ளார்கள். அங்கு பெரும் வேலைநிறுத்தங்கள் இடம்பெற்றுள்ளன. கடந்த தசாப்தத்தில் அமெரிக்காவில் பெரும் வேலைநிறுத்தங்கள் நடைபெற்றன. ஆனால் இந்த வேலைநிறுத்தங்கள் ஒரு வரலாற்று முன்னோக்கினை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை. இப்போது இன்னும் பல வேலைநிறுத்தங்கள் இடம் பெறவுள்ளன. ஆனால் தொழிலாளி வர்க்கம் மார்க்சிசக் கட்சியின் தலையீடு இல்லாமல் நனவினைப் பெற முடியாது. அதுதான் எமது பாத்திரம். நாம் தொழிலாள வர்க்கத்திற்குக் கல்வியறிவூட்ட வேண்டும். இந்நூற்றாண்டில் தொழிலாளி வர்க்கம் கடந்து சென்ற மாபெரும் வரலாற்றுப் படிப்பினைகளின் அடிப்படையில் நாம் தொழிலாள வர்க்கத்துக்குக் கல்வியூட்டுவோம்.

## ட்ரெட்ஸ்கிச வேலைத்திட்டம்

கடந்த 69ஆண்டுகளுக்கு மேலாக எமது இயக்கம் கடைப்பிடித்த அனைத்துமே சரியென நிரூபிக்கப்பட்டுள்ளது. 'நிசமாக இருந்து வரும் சோசலிசம்', 'சமாதான சகவாழ்வு' பற்றிய சகல பழைய மோசடி அறிக்கைகளும் வரலாற்றின் குப்பைக் கூடைக்குள் வீழ்ந்துள்ளன. எழுச்சி கண்டுள்ளது, ட்ரொட்ஸ்கி 1923ல் இருந்து அவரின் வாழ்க்கையின் இறுதிவரை முன்னெடுத்துச் சென்றதும் ட்ரொட்ஸ்கியினால் நான்காம் அகிலம் ஸ்தாபிக்கப்பட்ட போது முன்னெடுத்த ஆய்வுகளைத் தாக்கியவர்களுக்கு எதிராக அனைத்துலகக் குழுவினால் பின்னர் அபிவிருத்தி செய்யப்பட்டதுமான வியப்பூட்டும் ஆய்வுகளேயாகும். இது ஒரு நாட்டில் ஆட்சியை வெற்றிகொள்வது பற்றிய பிரச்சினை அன்று. இது உலகப் புரட்சியைப் பற்றிய- தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிக் கட்சியை உலகளாவிய ரீதியில் கட்டியெழுப்புவது பற்றிய பிரச்சினையாகும். இம் முன்நோக்கு, இன்று நிராகரிக்க முடியாத முறையில்— ஆரம்பத்தில் அது துன்பகரமானதாக இருந்திருப்பினும் கூட - நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஆனால் ட்ரொட்ஸ்கி ஒரு முறை குறிப்பிட்டது போல், வரலாறு ஒரு மிகவும் கெட்ட மாற்றாந் தாய். தொழிலாளி வர்க்கம் மிகவும் கசப்பான படிப்பினைகள் ஊடாகவே கல்வி பெறுகின்றது. தொழிலாளி வர்க்க இயக்கம் மாபெரும் சோக நிகழ்வுகளால் நிறைந்து போயுள்ளது. மாபெரும் துன்பங்களுக்கூடாகவே முன்னேறிச் செல்கின்றது. ஆனால் அந்த வழியிலேயே ஒரு வர்க்கம் அதன் கசப்பான படிப்பினைகளைக் கற்றுக் கொள்கின்றது. இதனாலேயே எமது இயக்கம் — திட்டவட்டமாக அது அடிப்படைக் கொள்கைகளின் மேல் எழுந்து நின்றதாலேயே ஏனைய சகலரும் செல்வாக்கிழந்து போன நிலைமையில் இந்த மாபெரும் நெருக்கடியின் மத்தியில் அதன் கௌரவத்துக்கு கெடுதியின்றி நிமிர்ந்து நிற்கின்றது. எனவேதான் நாம் பெரிதும் நம்பிக்கை கொண்டுள்ளோம். நாம் மனமுடைந்து போக மாட்டோம். உத்சாகம் இழந்து விடோம். எமது முன்நோக்கு இதற்கெனத் தயார் செய்யப்பட்டதால் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். நேர் எதிரே வந்து கொண்டுள்ள காலப்பகுதியில் எமது இயக்கத்தின் போராட்டங்கள் ஒரு உலகப் பார்வையாளர்களைக் கொண்டிருக்கும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம். ட்ரொட்ஸ்கிசம் அணிநடை போடுகின்றது. இன்று எமது பணி எமது வேலைத்திட்டத்திற்காகத் தொழிலாளி வர்க்கத்தினுள் போராடுவதே. எமது இயக்கம் எந்தளவு பிரமாண்டமான வரலாற்று ஆளுமையுடன் பேசுகின்றது என்பதை நாம் அங்கீகரிக்க வேண்டும். சகல தோழர்களும் அதையிட்டுப் பெருமை கொள்ள வேண்டும். 1992ம் ஆண்டினை அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கத்துடனான வேர்க்கஸ் லீக்குக்கும் அனைத்துலகக் குழுவுக்கும் இடையேயான நடைமுறை உறவுகள் ஒரு மாபெரும் பரிணாமத்தினைக் காணத் திடசங்கற்பம் பூண வேண்டும்.

— முற்றும்

படிப்பகம்

www.padippakam.com



# றொஜர் கவுத்ராவை விடுதலை செய்!

## பிரேரணை ஏகமனதாக நிறைவேறியது

''நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் இளம் சோசலிஸ்டுகள் இயக்கமும் கொம்பனித்தெரு டீமெல் திடலில் நடாத்திய பகிரங்க கூட்டத்துக்கு வருகை தந்த இலங்கை தொழிலாள வர்க்கத்தினதும், ஒடுக்கப்படும் மக்களதும் ஒரு பிரிவினரான நாம் அமெரிக்க போக்கு வரத்துக் தொழிலாளியான றொஜர் கவுத்ரயவுக்கு எதிராக அமெரிக்க கிரேஹவுண்ட் கம்பனியும், இராஜாங்கத் திணைக்களமும் இணைந்து திணித்துள்ள பொய் வழக்கினை இரத்துச் செய்து, அவரை விடுதலை செய்யும்படி கோருகின்றோம்''



றொஜர் கவுத்ரா

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினால் றொஜர் கவுத்ராவையும் மற்றும் வர்க்கப் யுத்தத்தின் போராளிகளையும் காக்கும் இலக்கில் அனைத்துலக ரீதியில் நடைபெற்ற 'றொஜர் கவுத்ராவை விடுதலை செய்!' இயக்கத்தின் பேரில் பு. க. க. கொழும்பில் டீமெல் பார்க்கில் நடாத்திய பகிரங்க கூட்டத்தில் அதன் செயலாளர் தோழர். விஜே டயஸ் சமர்ப்பித்த மேற்கண்ட பிரேரணை ஏகமனதாக நிறைவேறியது.

இக்கூட்டத்திற்கு முன்னதாக அன்று காலை 8மணிக்கு கொழும்பு அமெரிக்க தூதரகத்தில் முன்னே புரட்சிக் கமயூனிஸ்ட் கழகம்நடாத்திய மறியல் இயக்கம் வெற்றிகரமாக நடைபெற்றது. பொலிசாரின் தலையீட்டுக்கு மத்தியில் இம்மறியல் இடம் பெற்றது. கொள்ளுப்பிட்டி பொலிசார் கட்சியினதும், இளம் சோசலிஸ்டுகளதும், 'றொஜர் கவுத்ராவை விடுதலை செய்' எனக் கோரும் பதாகையையும் பிடுங்கிச் சென்றனர். இன்று வரை இப்பதாகைகள் கட்சிக்குத் திரும்பி வழங்கப்படாததோடு பொலிசார் வழக்குத் தாக்கல் செய்யும் ஆத்திரமூட்டல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர். முதலாளித்துவ பத்திரிகைகள் பரந்த மக்களின் கவனத்தை ஈர்ப்பதாக விளங்கிய இம்மறியல் போராட்டத்தினை, காலி வீதியின் இடம் பெற்று ஒரு வாகன விபத்துடன் முடிச்சுப் போடும் ஒரு கீழ்த்தரமான வேலையில் ஈடுபட்டனர்.

றொஜர் கவுத்ராவின் இந்த பொய் வழக்குக்கு எதிராக அனைத்துலகக் குழு ஒழுங்கு செய்த இந்த உலக எதிர்ப்புத் தினம் அவுஸ்திரேலியா, கனடா, பிரித்தானியா, ஜேர்மன், இந்தியா முதலான இடங்களில் இடம்பெற்றதோடு அது உலகத் தொழிலாள வர்க்கத்தின் அனைத்துலக ஐக்கியத்தினை உறுதி செய்யும் நனவான நடவடிக்கையின் ஒரு பாகமாகவும் விளங்கியது.

# ஏகாதிபத்தியப் படைகளை அழைக்க முயற்சி

(8 ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கூட்டுரோந்து அவசியம் என்றுள்ளார்.

பிரேமதாச அரசாங்கம் இந்தக் கூட்டு ரோந்துக்கான அழைப்பு விடுத்த அதே வேளையில் இந்தியக் கடற்படை அமெரிக்கக் கடற்படையுடன் இந்து சமுத்திரத்தில் கூட்டு யுத்தப் பயிற்சியில் ஈடுபடத் தொடங்கியுள்ளது பற்றிய செய்திகள் வெளியாகின. இவை தற்செயலான அல்லது சாதாரணமான ஒரு சம்பவம் அல்ல. கடந்த ஆண்டு இறுதி வரை இந்திய முதலாளிகள் ஏகாதிபத்தியவாதிகளுடன் கொடுக்கல் வாங்கல் நடாத்தசோவியத் யூனியனுடனான தொடர்புகளைப் பயன்படுத்தினர். இந்திய முதலாளித்துவ அரசாங்கம் சோவியத் யூனியன் அரசாங்கத்துடன் கொண்டிருந்த நீண்ட கால பாதுகாப்பு உடன்படிக்கைகள் இதன் முக்கிய அங்கமாக விளங்கின.

இன்று பழைய சோவியத் யூனியனின்ஸ்டாலினிச அதிகாரத்துவக் கும்பலின்முதலாளித்துவ புனருத்தாரண மாபியாகாரர்கள் சோவியத் யூனியனைக் கலைத்துவிட்டு, ஏகாதிபத்தியவாதிகளிடம் முழந்தாளிட்டுக் கொண்டுள்ளனர். இந்திலையில் இந்திய முதலாளி வர்க்கம் நேரு சோஷலிசம் எனப்பட்டதின் 'தேசியப் பொருளாதாரத்தினைஏகாதிபத்தியவாதிகளுக்கு விற்றுத் தள்ளும் வேலையில் இறங்கியுள்ளது.

நரசிம்மராவின் காங்கிரஸ் அரசாங்கம் ஏகாதிபத்தியவாதிகளின் காலனித்துவச் சுரண்டலுக்கு இந்தியாவைத் திறந்து விட்டுள்ளதோடு, ஏகாதிபத்தியச் சார்பு விதிமுறைகளைத் தீர்மானம் செய்யும் பொறுப்பையும் உலக வங்கியிடம் ஒப்படைத்துள்ளதாக இந்திய நிதி அமைச்சர் மன்மோகன் சிங் சமீபத்தில் உலக வங்கி ஆளுனருக்கு அனுப்பிய கடிதத்தில் அம்பலப்படுத்தினார். நரசிம்மராவ் அரசாங்கம் ஏகாதிபத்திய யுத்த இயந்திரத்துடன் நெருங்கிய உறவுகளை இந்நிலையிலேயே வலுப்படுத்திக் கொண்டுள்ளது.

இராணுவ ஆக்கிரமிப்புக்கள் மூலம் தாம் இழந்துவிட்ட பொருளாதார ஆளுமையைக் கைப்பற்றும் முஸ்தீபுகளில் ஈடுபட்டுள்ள அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் புஷ் அரசாங்கம் உலகின் ஐந்தாவது பெரும் படைப் பலத்தைக் கொண்டுள்ள இந்திய முதலாளி வர்க்கத்தினைத் தமது திட்டங்களுள் பிணைத்துக் கொள்வதையிட்டு பேரார்வம் காட்டிக் - கொண்டுள்ளது. இந்த உறவுகளை உறுதி செய்ய புஷ் அரசாங்கமும் பென்டகன் யுத்த இயந்திரமும் மேற்கொண்டுள்ள வேலைத்திட்டத்தின் ஒரு பாகமாகவே அமெரிக்க - இந்திய கடற்படைகளின் கூட்டுப் பயிற்சிகள் இடம் பெற்று வருகின்றன என்பதைக் கூறியாக வேண்டும்.

ஈராக்குக்கு எதிராக அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைமையில் இடம்பெற்ற யுத்தத்தில் சென்னை, பம்பாய் விமானத் தளங்களை ஆக்கிரமிப்பு விமானங்களுக்குத் திறந்து விட்டதன் மூலம் இந்திய முதலாளி வர்க்கம் ஏகாதிபத்திய யுத்தக் சரத்தையில் தொங்கிக் கொண்டது தெரிந்தது. இதன் மூலம் காலனித்துவத்துக்குத் தனது கீழ்ப்படிவினைக் காட்டிக் கொண்டது. இந்த யுத்தத்தில் பிரேமதாச அரசாங்கம் செய்ததும் இதுதான்.

கடந்த ஏப்ரல் 1ம் திகதி ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை லிபியாவுக்கு எதிரான தடைகளைத் திணிக்கும் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் இறங்கிய வேளையில் இந்திய அரசாங்கம் அதற்கு எதிராக வாக்களிக்க இல்லை. இப்போது லிபியா ஏகாதிபத்தியத்துக்கு முழுமனே அடிபணிவதாகக் கூறும் அறிக்கையை வெளியிடாது போனால் அதனை யுத்தத்தின் மூலம் நிர்மூலமாக்குவதாகக் கூறும் 'அறிவித்தலை' லிபியாவுக்குக் கையளிக்கும் பொறுப்பையும் இந்திய ஆட்சியாளர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

1986 ஆண்டின் வட்டமேசை மகாநாடு எனப் பட்டதை ஜயவர்தனா அரசாங்கம் 1987ல் இந்திய இராணுவ ஆக்கிரமிப்புப் படைகளை அழைப்பதற்கு ஒரு வாய்ப்பாக்கிக் கொண்டது. அவ்வாறே இன்று தமிழ் ஒடுக்கப்படும் மக்களை நசுக்கும் இனவாத யுத்தத்தினையும், விடுதலைப் புலிகளுக்கு எதிரான இந்திய முதலாளிகளின் தாக்குதல்களையும் இந்தியப் படைகளதும், ஏகாதிபத்தியப் படைகளதும் தலையீடு வரை விஸ்தரிக்க பிரேமதாச அரசாங்கம் தருணம் பார்க்கிறது.

இரணவிலைப் பகுதியில் நிர்மாணிக்க இருந்த உல்லாசப் பயணிகள் ஹோட்டல் அமைப்பதை நிறுத்தினாலும் 'வொயிஸ் ஒப் அமெரிக்கா ஒலிபரப்பு நிலையம் அமைப்பதை நிறுத்தவே போவதில்லை என பிரேமதாச அரசாங்கம் தெரிவித்துள்ளது. இது பிரேமதாச மாபியா அரசாங்கம் ஊடாக இலங்கையை அமெரிக்க யுத்த ஆக்கிரமிப்பு திட்டங்களின் முகாமாக்கும் ஒரு திட்டமாகும். ஈராக் ஐ. நா. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தினை மீறிவிட்டதெனவும் 1988 லொக்கர்லீ விமான வெடிப்புச் சம்பவத்தை சாட்டாகக் கொண்டு லிபியாவுக்கு எதிராகவும் ஆக்கிரமிப்பில் இறங்க அமெரிக்காவும் மற்றும் ஏகாதிபத்திய நாடுகளும் ஆயத்தமாகும் நிலையிலேயே இந்த அபிவிருத்திகள் இடம் பெறுகின்றன என்பதை நாம் கணக்கில் எடுக்க வேண்டும்.

ஏகாதிபத்தியத்தினை இப்பூகோளத்தில் இருந்து துடைத்துக்கட்டும் உலகப் பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் ஒரு பாகமாக ஏகாதிபத்தியச் சார்பு பிரேமதாச அரசாங்கத்தினை வெளியேற்றி, தொழிலாளர் — விவசாயிகள் அரசாங்கத்தினை ஆட்சிக்குக் கொணர்வது பிராந்தியத்தின் ஏகாதிபத்திய பொலிஸ்காரனாக புதிய கடமைக்குத்தயாராகும் இந்திய முதலாளி வர்க்கம் உள்ளடங்கலான தென்னாசியாவின் பிற்போக்கு ஆளும் வர்க்கங்களினை தூக்கி வீசுவதும் இந்தியத் துணைக் கண்ட சோசலிச சோவியத் குடியரசு ஒன்றியத்தினை கட்டியெழுப்பும் முன்நோக்குக்குப் போராடுவதும் தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களுக்கு வாழ்வுக்கும் சாவுக்கும் இடையேயான ஒரு பிரச்சினையாகும்.

தொழிலாள - ஒடுக்கப்படும் மக்களின் போராட்டத்தினை தடம்புரளச் செய்ய நனவாகச் செயற்படும் சமசமாஜ — கம்யூனிச — நவசமசமாஜ — இ. தொ. கா. தலைவர்களை தூக்கி வீசி, சோசலிச சோவியத் குடியரசு ஒன்றியத்தினை நிறுவப் போராடும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தையும் (இலங்கை) சோசலிசத்தொழிலாளர் கழகத்தையும் (இந்தியா) கட்டி எழுப்புமாறு கோருகின்றோம்,

படிப்பகம்

www.padippakam.com



# அரசின் அச்சுறுத்தலுக்கும் ஜோடிப்புகளுக்கும் எதிராக சோசலிசத் தொழிலாளர் கழகத்தைப் பாதுகாக்கப் போராடு!

# நான்காம் அகிலத்தின் இந்தியப் பகுதியாக சோசலிசத்தொழிலாளர் கழகத்தைக் கட்டு!

மார்ச் 6 காலை 10-30 மணியளவில் தன்னை சி.பீ.ஐ. இன்ஸ்பெக்டர் சக்திதரன் என்று கூறிக்கொண்டவர், சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் அலுவலகத்திற்கு வந்து அங்கிருந்தவர்களிடம் சோசலிசத் தொழிலாளர் கழகம் சம்பந்தமான தகவல்கள் தரும்படி கேட்டார், அதற்கு உடன்படாவிட்டால் அவர்களை கடுமையாக நடத்தப் போவதாக பயமுறுத்தினர். அலுவலகத்தை விட்டு வெளியேறும்படி அவருக்கு கூறப்பட்டபொழுது, பலவந்தமாக ½ மணி நேரம் அங்கே நின்று சோசலிசத் தொழிலாளர் கழக உறுப்பினர்களை கடுமையாக நடத்தப் போவதாக மறுபடியும் பயமுறுத்தியதுடன், அதற்காக திரும்பவும் ஆயுதங்களுடன் வரப் போவதாக கூறிச் சென்றார். அவர் சோசலிசத் தொழிலாளர் கழகத்திற்கு 'இலங்கை பயங்கரவாதிகளுடன்' தொடர்பு இருப்பதாக போலியாக குற்றஞ்சாட்டி ஜோடிக்கப் போவதாகவும் பயமுறுத்தினர்.

சோசலிச தொழிலாளர் கழகம் இதை இகழ்ச்சியுடன் நிராகரிப்பதுடன் முதலாளித்துவ அரசின் சக்திகள் இவ்வாறாக குரூரமாக ஜோடனை செய்து தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர கட்சியை அச்சுறுத்தும் முயற்சிக்கு எதிராக தொழிலாள வர்க்கத்தை கிளர்ந்தெழும்படி அழைக்கிறது.

## சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சி

சோசலிச தொழிலாளர் கழகமானது இந்தியாவில் இயங்கும் ஒரு டிராட்ஸ்கிச கட்சியாகும். அது சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியான நான்காம் அகிலத்தின் இந்தியப் பகுதியை கட்டுவதற்காக போராடுகிறது. இவ்வாறு போராடுகையில் நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் அரசியல் தலைமையின் கீழும் நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் இதர பகுதிகளுடன் —புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் (இலங்கை); நியு சோசலிஸ்ட் ஆர்பைட்டர் (ஜெர்மனி) இன்டர்நேஷனல் கம்யூனிஸ்ட் கட்சி (பிரிட்டன்), சோசலிஸ்ட் லேபர்லீக் (ஆஸ்திரேலியா) மற்றும் நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவுடன் அரசியல் ஐக்கியம் கொண்டு அமெரிக்காவில் இயங்கும் டிராட்ஸ்கிச கட்சியான 'ஒர்க்கர்ஸ் லீக் குடனும் சகோதர ஒத்துழைப்புடன் வேலை செய்கிறது.

சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியான நான்காம்அகிலம், போல்ஷேவிக்குகளின் தலைமையில் உருவாக்கப்பட்ட மூன்றும் அகிலத்தை காட்டிக் கொடுத்த ஸ்டாலினிஸ்டுகளுக்கு எதிராக லியான் டிராட்ஸ்கியினால் உருவாக்கப்பட்டது. அனைத்துலக குழுவின் தலைமையில் நான்காம் அகிலத்தின் தோழர்களுடன் சேர்ந்து சோசலிசத் தொழிலாளர் கழகம் உறுதியாக நம்புவதும் தொழிலாளவர்க்கமத்தியில் செயலூக்கத்துடன் பிரச்சாரம் செய்வதும் மனித இனம் தற்போது உலக முழுவதும் முதலாளித்துவ வர்க்கத்தினால் தோற்றுவிக்கப்பட்டுள்ள முட்டுக் கட்டையான நிலைமையிலிருந்து உலக சோசலிசப் புரட்சியின் மூலமாக மட்டுமே பாதுகாக்கப்படும். என்பதுதான்- இதனை சாதிக்க சர்வதேச தொழிலாள வர்க்கத்தின் முன்னேறிய பகுதியினரை நான்காம் அகிலத்துக்கு வென்றெடுப்பதன் மூலமாகவே தொழிலாள வர்க்கத்தின் தலைமை நெருக்கடியை தீர்க்க வேண்டும்.

முதலாளித்துவ வர்க்கம் உலகத்தை இரண்டு உலக யுத்தத்தில் ஆழ்த்தியது. பூகோளம் முழுமையும் முதலாளித்துவத்தை ஆட்சியிலிருந்து பாட்டாளி வர்க்கம் விரட்டாவிடில், நிச்சயமாக ஏகாதிபத்தியவாதிகள் அணு ஆயுதங்களுடன் மோதி மனித நாகரிகத்துக்கு ஒரு முடிவைக் கட்டும் மூன்றும் உலக யுத்த பேரழிவினுள் உலகத்தை மூழ்கடிப்பார்கள்,

இதுவே ஈராக்கிற்கு எதிரான ஏகாதிபத்திய சக்திகளின் தாக்குதலின் அர்த்தமாகும், அமெரிக்க ஏகாதிபத்தியம் அதன் பென்டகன் பத்திரிகைகளில் உலகத்தின் எப்பகுதியிலும் வேறு எந்த சக்தியினாலும் கடுமையான இராணுவ அச்சுறுத்தல் ஏற்படுவதை சகித்துக் கொள்ள மாட்டாது என்று பிரகடனம் செய்ததன் அர்த்தமும் இதுவாகும். இன்றைய அவசர பணி ஒடுக்கப்படும் மக்களை தொழிலாள வர்க்கத்தின் தலைமையில் அணி திரட்டி, ஒவ்வொரு நாட்டிலும் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றி உலக சோசலிச குடியரசை ஏற்படுத்துவதாகும்.

சோசலிசத் தொழிலாளர் கழகத்துக்கு எதிராக பொய்க்குற்றச் சாட்டுகளை ஜோடிக்கவும் சாத்தியமானால் அழிக்கவும் அதன் சி.பி.ஐ. அடியாட்களை அனுப்பும் இந்திய முதலாளித்துவ அரசு, தொழிலாள வர்க்கத்துக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிரான ஏகாதிபத்திய சதியின் ஒரு செயலூக்கமான பங்காளியாகும்.

## முதலாளித்துவ-அரசாங்கத்தின் தாக்குதல்கள்

ஏகாதிபத்தியத்தின் கால்வருடியான இந்திய முதலாளித்துவத்தின் 45 வருடகால ஆட்சியில், இந்திய மக்கள் தொகையின் பெரும்பான்மையினர் அரைப் பட்டினி நிலைமையில்தான் வாழ்கின்றனர். உத்தியோக பூர்வ மதிப்பீட்டின்படி கூட மக்கட்தொகையின் மூன்றிலொரு பகுதியினர் வறுமைக் கோட்டின்கீழ் இருக்கின்றனர், மாதம் ரூ. 100க்கு குறைவாக எடுக்கின்றனர் தாராள மயமாக்கல் என்ற போர்வையில் திணிக்கப்படும் நாசகரமான பொருளாதாரக் கொள்கைகள் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை பசியிலிருந்து பஞ்சத்துக்கும், நோயிலிருந்து......பெரும் சாவுக்கும் எடுத்துச் செல்லும் உண்மையில் தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைகள் மக்கட்தொகையின் பெரும் பகுதியினரை அழிக்கும் திட்டத்தைக் கொண்டது.

ஏற்கனவே பெரும்பான்மையினர் பட்டினியில் இருக்கும் நிலைமையின்கீழ் டாலருடன் ரூபாயை நாணய மாற்றம் செய்து ரூபாயை ஓட்டைக் குடத்தில் தூக்கி வீசும் கொள்கையிலிருந்து வேறு என்ன முடிவுக்கு வர முடியும்? ஏற்கனவே பத்து கோடிக்கு மேல் வேலையற்றோர் இருக்கும்போது இரண்டு லட்சத்துக்கும் அதிகமான நிறுவனங்களை மூடி நேரடியாகவே ஒன்பது லட்சம் வேலையற்றோரை உருவாக்கும் கொள்கையின் அர்த்தம் வேறு எதுவாக இருக்க முடியும்? ஒரு வேளை சாப்பாட்டுக்குகூட கஷ்டமான நிலையில் பெரும்பான்மையானோர் இருக்கும்போது உரமான்யங்களுக்கு வழங்கப்படும் கோடி ரூபாய்களை வெட்டும் அரசாங்கத்தின் நோக்கம் எதுவாக இருக்க முடியும்? மக்கட்தொகையில் பாதிக்குமேல் கல்வியறிவின்றி இருக்கையில் பட்ஜெட்டில் 20%க்கும் அதிகமாக இராணுவத்துக்கு செலவழிக்கும் கொள்கையின் தேவை வேறு எதுவாக இருக்க முடியும்? ஒரே சமயத்தில் முதலாளித்துவ வர்க்கத்தின் லாபங்களையும், கோடிக்கணக்கான ஒடுக்கப்படும் மக்களின் வாழ்க்கையையும் பேணுவது சாத்திய மற்றதாக மாறிவிட்டது.

தினந்தோறும் ஆளும் வர்க்கமானது தொழிலாள வர்க்கத்தின், ஒடுக்கப்படும் மக்களின் எதிர்ப்பு பற்றி மரண பீதியடைந்து வருகிறது. தொழிலாள வர்க்கத்தின் நடவடிக்கைகளை ஒருநாள் பந்தாக மட்டுப்படுத்த சி.பி.ஐ. (எம்), சி.பி.ஐ. மற்றும் இதர சந்தர்ப்பவாத தலைவர்கள் முயற்சிகள் எடுத்த பொழுதிலும், நவம்பர் 29, 1991ல் வேலைநிறுத்தத்தில் இறங்கிய 1.2 கோடி தொழிலாளர்களின் பலம் பற்றி அவர்கள் அச்சமடைந்துள்ளனர். அதனால் தான் உத்தரபிரதேசத்தில் ஜுன் 1991ல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட டாலா தொழிலாளர்கள்மீது ஆளும் வர்க்கம் சுட்டது. கடந்த வருடம் பஞ்சாபில் அபோகர் பகுதியில் தொழிலாளர்கள்மேல் போலிஸ் சுட்டதில் 8 பேர் கொல்லப்பட்டனர். மீண்டும் பஞ்சாபில் உணவு கார்ப்பரேஷனைச் சேர்ந்த கான்ராக்ட் தொழிலாளர்கள்மேல் நவம்பர் 18ல் (1991) சுட்டதில் 40 தொழிலாளர்கள் படுகாயமடைந்தனர். மத்திய பிரதேசத்தில் சட்டிஸ்கார் பகுதியில் தொழிலாள இயக்கத் தலைவரான குகா நயோகி கொலை செய்யப்பட்டார், பம்பாயில் ஆறு வருடங்களாக மூடப்பட்டிருந்த கிரேட் ஈஸ்டர்ன் மில்லை மார்ச் 1992ல் கைப்பற்றிய தொழிலாளர்களையும், அதில் பங்கு கொண்டவர்களையும் சேர்த்து 53 பேரை போலீசார் கைது செய்தனர்.

## தொழிலாளர்-விவசாயி அரசாங்கம்

இப்படியாக வளர்ச்சி அடைந்துவரும் வர்க்க போராட்டங்களை ஒன்றுபடுத்தவும், ஒடுக்கப்படும் மக்களை நான்காம் அகிலத்தின்கீழ் ஐக்கியப்படுத்தவும் சோசலிசத் தொழிலாளர் கழகம் போராடி வருகிறது. இதனால்தான் ஆளும் வர்க்கமானது,சோசலிசத் தொழிலாளர் கழகம் பயங்கரவாதிகளுக்கு ஆதரவளிப்பதாக பொய்க் குற்றச்சாட்டை ஜோடிக்க முயற்சிக்கிறது. அவர்கள் சோசலிசத் தொழிலாளர் கழகம் பற்றி மரண பீதியடைந்துள்ளனர். ஏனெனில் அதுமட்டும்தான் இந்தியாவில் ஒடுக்கப்படும் மக்களின் போராட்டங்களை தொழிலாள வர்க்க தலைமையின்கீழ் புரட்சிகர ஜனநாயக மற்றும் சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அணி திரட்ட போராடுகிறது. தொழிலாள வர்க்கத்தை இனவாத' மதவாத, ஜாதிவாத, தேசியவாத அடிப்படையில் பிளவுபடுத்தும் முயற்சிகளுக்கு எதிராக ஐக்கியப்படுத்த வேண்டுமென்றும், காஷ்மீரிகள், சீக்கியர்கள்

அஸாமிகள், மணிப்பூரிகள் முதலிய தேசிய மற்றும் மத சிறுபான்மையினரை முதலாளித்துவம் ஒடுக்க எடுக்கும் அனைத்து முயற்சிகளையும் எதிர்க்க வேண்டும் என்றும் சோசலிசத் தொழிலாளர் கழகம் சுட்டிக் காட்டுகிறது. தொழிலாள வர்க்கம் அதன் ஆட்சிக்கான சொந்த அமைப்புகளை-சோவியத்துகளை-ஏற்படுத்த வேண்டும்; ஏழை விவசாயிகளுடன் புரட்சிகர கூட்டை ஏற்படுத்தி ஆட்சியை கைப்பற்ற வேண்டும்:

இவ்வாறாக ஸ்தாபிக்கப்படும் தொழிலாளர், விவசாயிகள் அரசாங்கம் அனைத்து பெரிய முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ சொத்துக்களையும் தேசியமயமாக்க வேண்டும்.

❖ 1947இலிருந்து முதலாளித்துவ அரசாங்கங்கள் வாங்கிய அனைத்து கடன்களையும் ரத்துச் செய்ய வேண்டும்.

❖ திட்டமிட்ட முறையில் அனைத்து உற்பத்தியையும் ஏற்பாடு செய்து தரமான சம்பளத்தில் அனைத்து வேலையற்றோருக்கும் வேலைகளை உத்தரவாதம் செய்ய வேண்டும்.

❖ உழுவோருக்கு நிலம் வழங்க வேண்டும்.

❖ அனைத்து விவசாயிகளின் கடன்களையும் ரத்துச் செய்ய வேண்டும்.

❖ முழு உலகிலும் முதலாளித்துவத்தை தூக்கிவீச சர்வதேச வர்க்க சகோதரர்களுடன் ஐக்கியப்பட வேண்டும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், காங்கிரஸ் கட்சி, முஸ்லிம்லீக் தலைமையை கொண்ட இந்திய முதலாளித்துவம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த ஸ்டாலினிஸ்டுகள் அனைவரினாலும் திணிக்கப்பட்ட இந்திய பிரிவினையை சோ.தொ.கழகம் நிராகரிக்கிறது.

❖ ஒரு சமயத்தில் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழிருந்த இந்திய துணைக் கண்டத்திலுள்ள பாகிஸ்தான். பங்களாதேஷ், இலங்கை, பர்மா மற்றும் இதர நாடுகளும், மதவகுப்புவாத பிரிவினையை அடிப்படையாகக் கொண்ட ஏகாதிபத்தியத்தால் திணிக்கப்பட்டமுதலாளித்துவ அரசுகள் ஆகும்.இவற்றை தூக்கிவீசி இந்திய துணைக்கண்டத்தில் சோவியத் சோசலிச குடியரசுகளின் ஒன்றியத்தை உருவாக்க வேண்டும் இது தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அடிப்படையாகக் கொண்டதாகவும், உலக சோசலிச குடியரசின் பகுதியாகவும் இருக்கும். எழுச்சியிலிருக்கும் தேசிய பகுதிகளிலிருந்து ஆக்கிரமிப்பு படைகளை வாபஸ் வாங்குவது சிறுபான்மையினரின் சுயநிர்ணய உரிமைக்கு ஒரு முன் நிபந்தனை ஆகும்.

## தேசிய இனப் பிரச்சினையும் பாட்டாளி வர்க்கத் தலைமையும்

1947 உடன்பாடானது தேசிய சுதந்திரத்தையோ, இந்திய தேசியத்தின் ஐக்கியத்தையோ பேணவில்லை. உண்மையில் பிரிவினை இந்திய மக்களின் தேசிய புரட்சிகரப் போராட்டங்களை கருச்சிதைத்ததை குறித்தது. உலக சோசலிசப் புரட்சியின் பகுதியாக தொழிலாள வர்க்கமும் ஒடுக்கப்படும் மக்களும் ஆட்சியை கைப்பற்றுவதுடன் தேசிய ஜனநாயகப் போராட்டம் முடிவுக்கு வருவதை தடுப்பதற்காக செய்யப்பட்டது. இந்து-முஸ்லிம் ஒடுக்கப்படும் மக்களை ஒருவருக்கொருவர் எதிராக தூண்டிவிட்டு இரத்த வெள்

படிப்பகம்

www.padippakam.com



# அரசின் அச்சுறுத்தலுக்கும் ஜோடிப்புகளுக்கும் எதிராக சோசலிசத் தொழிலாளர் கழகத்தைப் பாதுகாக்கப் போராடு!

# நான்காம் அகிலத்தின் இந்தியப் பகுதியாக சோசலிசத்தொழிலாளர் கழகத்தைக் கட்டு!

ளத்னத உருவாக்கும் நோக்கத்தையே பிரிவினை கொண்டிருந்தது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் செய்த இக்குற்றத்திற்கு உதவியும் ஒத்துழைப்பும் வழங்கிய காந்தி, நேரு, ஜின்னா, டாங்கே முதலியோர் வரலாற்று குற்றவா ளிக் கூண்டில் நிறுத்தப்பட வேண்டியவர்கள். நான்காம் அகிலத்தின் பகுதி யான இந்தியாவில் போல்ஷேவிக் லெனினிஸ்ட் கட்சி மட்டும்தான் 1947 பிரிவினை துரோகத்தை எதிர்த்தது.பப்லோவாத திருத்தல் வாதிகள்.அவர்கள் இன்று இந்தியாவில் 'இன்குலாப் கம்யூனிஸ்ட் சங்கதன்' இயக்கத்தால் பிரதிநிதித்துவம் செய்யப்படுபவர்கள், போல்ஷேவிக் லெனினிஸ்ட் கட்சியை 1941ல் காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சிக்குள் கலைத்து அழித்தார்கள்.

புரட்சிகர மக்கள் எழுச்சிபற்றிய பீதியினால்தான் காங்கிரஸ்,முஸ்லிம் லீக் கின்கீழ் இந்திய முதலாளித்துவம் சுதந்திரப் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்து, இந்தியாவை குரூரமாக பிரிவினை செய்ய வழிவகுத்தது. பிரிவினை சதியை ஸ்தாபன ரீதி ாக பிரதிநிதித்துவம் செய்யும் இந்திய, பாகிஸ்தான் தேசியமுதலாளித்துவ அரசாங்கங்கள் அன்றிலிருந்தே தொழிலாள வர்க்கப் போராட்டங்களின் வளர்ச்சியை தடுப்பதற்காக தத்தமது இருப்புகளை பயன் படுத்தி மக்கள் மத்தியில் மதவகுப்புவாதத்தையும், வெறியையும் தூண்டி வருகின்றனர். அதே சமயம் அவ்விரு நாடுகளினுள்ளும் தேசிய சிறுபான்மை யினரின் சுதந்திரமான வளர்ச்சியை அனுமதிக்காது விலங்கிட்டு வைத்திருக் கின்றன. இந்தியாவில் இந்தி –இந்து சலுகையும்,பாகிஸ்தானில் முஸ்லீம்— பஞ்சாபி சலுகையும், இலங்கையில் சிங்கள—பௌத்த சலுகையும் இப் பங்களாதேஷில் முஸ்லீம் சலுகையும், பர்மாவில் பௌத்த சலுகையும் இப் பிராந்திய தேசிய முதலாளித்துவ அரசாங்கங்களின் விசேஷ அடையாளமாக இருந்து வருகிறது. தேசிய சிறுபான்மையினரின் போராட்டத்தின் வேர்கள் இந்த நிலைமையில் தான் இருக்கிறது. ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு தலைமை வழங்க வேண்டியது புரட்சிகர மான பாட்டாளி வர்க்கத்தின் கடமையாகும்.

## தமிழீழ விடுதலைப் போராட்டம்

இலங்கையில் தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்ட மானது இந்திய முதலாளித்துவம் ஏகாதிபத்தியத்தின் ஆதரவுடன் அத்தீவின் பெரும்பான்மை தேசிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டமாகும் அதனால்தான் மார்க்சிஸ்டுகள் தமிழீழ தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை பாதுகாப்பது மட்டுமின்றி அவர்களுடைய போராட்டத்திற்கு புரட்சிகர தலைமையையும் வழங்க வேண்டும். இந்த அர்த்தத்தில்தான் சோசலிசத் தொழிலாளர் கழகமும், இலங்கையில் அதன் சகோதர கட்சியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்துடன் சம்பந்தப்பட்டுள்ளன. அதேசமயம் சோசலிசத் தொழிலாளர் கழகமும் அதேபோல நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவும் தொடர்ச்சி யாக சுட்டிக் காட்டியதாவது: தமிழீழ விடுதலைப் புலிகள் (எல்.டி.டி.ஈ. போன்ற குட்டி முதலாளித்துவ அமைப்புகளின் தலைமையின்கீழ் தமிழீழ தேசிய இனம் அதன் விடுதலையை அடைவது சாத்தியமற்றது என்பதாகும். இப்போராட்டத்தின் சூட்டிலே இதர குட்டி முதலாளித்துவ அமைப்புகளான பிளாட், டெலோ, ஈ.பி.ஆர். எல்.எப். முதலியவை தங்களை இந்திய முதலாளித்துவத்தின் அதன் பின்னர் சிறிலங்கா முதலாளித்துவத்தின் கூலிப் பாட்டாளங்களாக, சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு எதிரான வர்களாக மாற்றிக் கொண்டனர்.

எல்.டிடி.ஈ. தலைமையானது தமிழீழ தேசியப் போராட்டத்தை பொது வாகவே ஒடுக்கப்படும் மக்களின் போராட்டத்திலிருந்து தனிமைப்படுத்தி, அவர்களின் நம்பிக்கைகளை இந்திய தேசிய முதலாளித்துவத்திலும், ஏகாதி பத்திய சக்திகளிலும் வைத்தனர். இந்த சக்திகளுள் சிறப்பாக இந்திய முத லாளித்துவம் தமது பகடைக்காயாகவே தமிழீழ போராட்டத்தை பயன் படுத்த முயற்சித்தது, அது அவர்களது உடனடி கட்டுப்பாட்டுக்கு வெளியே செல்லும் அச்சுறுத்தலை செய்தபோது அதனை மூர்க்கமாக தாக்கினார் கள். இவ்வாறான அமைப்புகளின் கொள்கைகள் ஏற்கனவே தமிழீழ தேசிய இனத்தின் பல்லாயிரக்கணக்கான உயிர்களை எடுத்ததுடன் மேலும் அழிக்கும் அபாயத்தையும் கொண்டது. 1987 இந்திய-இலங்கை ஒப்பந்தத் திற்கு எல்.டிடி.ஈ. வழங்கிய ஆதரவு குட்டி முதலாளித்துவ குழுக்களின் இந்த சந்தர்ப்பவாத கொள்கையின் ஒரு பகுதியாகும்.

எல்.டி.டி.ஈ. போன்ற குட்டிமுதலாளித்துவ தலைமைகள் தமிழீழதேசிய இனத்தின் விடுதலைக்காக போராடவில்லை; பதிலாக தமிழீழ தொழிலாள வர்க்கத்தையும், ஒடுக்கப்படும் மக்களையும் சுரண்டுவதற்கான விசேஷ சலுகைகளுக்காகவே போராடுகின்றனர். கொழும்பிலுள்ள சிங்கள முதலாளித்துவத்திற்கு பதிலாக அவர்கள் தமிழீழ பிராந்தியத்தில் ஏகாதி பத்தியத்தின் தரகர்களாக மாற விரும்புகின்றனர். அவர்களே குட்டிமுதலா ளித்துவமாக இருப்பதன் காரணமாக, ஏகாதிபத்தியத்தை விடாப்பிடியாக எதிர்த்து போராடக்கூடிய ஒரே சக்தியான சர்வதேச பாட்டாளிவர்க்கத்தை அடிப்படையாகக் கொண்டுபோராட எல்.டிடி.ஈ. திறனற்றதாக உள்ளது. பதிலாக சர்வதேச முதலாளித்துவம் மற்றும் முதலாளித்துவ பகையாளி களின் பகடைக் காயாக எல்.டி.டி.ஈ. உள்ளது. 'உலக அபிப்பிராயத்தை பற்றி அவர்கள் பேசும்பொழுது அவர்கள் உண்மையில் ஏகாதிபத்தியத்தை பற்றித்தான் பேசுகின்றனர்.

இவ்வாறாக சோசலிசத் தொழிலாளர் கழகமும், இலங்கையில் அதன் சகோதர இயக்கமான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் தமிழீழத்திலிருந்து சிறிலங்கா ஆக்கிரமிப்புப் படைகளை வாபஸ் வாங்க போராடும் அதேவேளை குட்டி முதலாளித்துவ எல்.டி.டி.ஈ. தலைமையின் காட்டிக்கொடுப்பை எதிர்க்கிறது. தமிழீழத்தில் தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்களின் அரசியல் நடவடிக்கைகள்மீது எல்.டி.டி.ஈ. விதித்துள்ள அனைத்து தடை களும் அகற்றப்பட வேண்டுமென்று கோருகிறது. இதை சாதிக்க தமிழீழத் தில் தொழிலாளர், விவசாயிகள் சபைகளை உருவாக்க வேண்டும். இந்த சபைகள் எந்தெந்த அரசியல் போக்குகள் இயங்குவதற்கு அனுமதிக்கப்பட வேண்டுமென்பதை தீர்மானிக்க வேண்டும். இந்த வேலைத்திட்டத்தை தமிழீழ மக்களின் மத்தியில் எடுத்துச் செல்ல தமிழீழப் பகுதியில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் கிளைகளை பலமாக ஸ்தாபிப்பது அவசியமாகும்.

இலங்கையில் பெரும்பான்மையாகவுள்ள(சிங்கள மொழி பேசும் தொழிலாள வர்க்கத்தின் மத்தியில் தமிழீழ தேசிய இனத்தின்சுயநிர்ணய உரிமைக்கும், தமிழீழத்தில் ஒடுக்கும் சிறிலங்கா படைகள் வாபஸ் வாங்கப்படவும் விடாப்பிடியாகவும், சக்தி வாய்ந்த முறையிலும், வெளிப்படையாகவும் பிரச்சாரம் செய்துவரும் பெருமைமிக்க சாதனை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துக்கு உண்டு. மேலும் அது 1987 இந்திய-இலங்கை ஒப்பந்தம் உள்ளடங்கலான தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான அனைத்து சூழ்ச்சிகளையும் எதிர்க்கிறது; அந்த ஒப்பந்தம் உண்மையில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தினால் தீட்டப்பட்டது, என்பதை புரட்சிக் கம்யூ னிஸ்ட் கழகமும், சோசலிசத் தொழிலாளர் கழகமும்தான் அம்பலப்படுத் தின. அது டில்லியிலும், சென்னையிலும் உள்ள இந்திய முதலாளித்துவ பிரிவினர், பாதுகாப்பதாக வாக்குறுதி அளித்த தமிழீழ தேசிய இனம் படுகொலை செய்யப்படுவதில் முடிவடைந்தது தமிழீழத்தில் சிங்கள துருப்புகளின் ஆக்கிரமிப்புக்கு எதிராக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் பின்வரும் கோரிக்கையை வைத்தது; சிங்கள முதலா ளித்துவத்தின் யுத்தத்துக்கு ஒரு ஆளையும் வழங்கக் கூடாது, அவர்களின் யுத்த செலவுக்கு ஒரு சதமும் வழங்சக் கூடாது. அதுபோலவே இந்தியத் தொழிலாளர்கள் மத்தியில் தமிழீழத்திலிருந்து இந்தியப் படைகள் வாபஸ் வாங்கப்பட வேண்டுமென்ற பிரச்சாரத்தை சோசலிசத் தொழிலாளர் கழகம் நடத்தியது. அதே வேளை தமிழீழ தேசிய இனத்துக்கு ஏதோ ஒரு வகையில் இத்தியா-இலங்கை ஒப்பந்தம் உதவி செய்யுமென்றுகூறி அதனை ஏற்றுக் கொண்ட எல்.டி.டி.ஈ.இன் சந்தர்ப்பவாதத்திற்கு எதிராக சோச லிசத் தொழிலாளர் கழகமும், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் தொடர்ந்து போராடின. அத்துடன் அவை சுட்டிக் காட்டுவது, தமிழீழ தேசிய இனத் தின் விடுதலை அல்லது இந்தப் பிராந்தியத்திலுள்ள எந்த தேசிய சிறுபான்மையினரின் விடுதலையும் 1947ல் ஏகாதிபத்திய உடன்பாட்டினால் திணிக்கப்பட்ட மதவாத-இனவாத பிரிவினைகளை அடிப்படையாகக் கொண்ட முழு அமைப்பு முறையையும் தூக்கி வீசி பாட்டாளிவர்க்கத்தின் சர்வாதிகாரத்தை இந்திய துணைக்கண்டத்தில் சோவியத் சோசலிசக் குடியர சுகளின் ஒன்றியம் என்ற வடிவில் ஸ்தாபிப்பதுடன் பின்னிப்பிணைந்தது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் போராடும் தமிழீழ, இலங்கை ஐக்கிய சோசலிசக் குடியரசுகள், சாராம்சத்தில், துணைக்கண்டத்தில் சோவியத் சோசலிசக் குடியரசுகளின் ஒரு பகுதியாக இருக்கும். துணைக்கண்டத்தில் இப்படியான சோவியத் குடியரசுகள் முடிவில் உருவாகவிருக்கும் உலக சோசலிச குடியரசின் பகுதியாக அமையும்.

இவ்வாறாக நமது போராட்டமானது, சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் சகோதர கட்சிகளினால் நடத்தப்படும் போராட்டங்களுடன் நெருக்கமானது. அமெரிக்காவில்-ஒர்க்கர்ஸ்லீக். பிரிட்டனில் இன்டர் நேஷனல் கம்யூனிஸ்ட் கட்சி, ஆஸ்திரேலியாவில் சோசலிஸ்ட் லேபர் லீக், ஜெர்மனியில் புந் சோசலிஸ்ட் ஆர்பைட்டர்'-முதலியவை ஏகாதிபத்தியத் தின் மையங்களிலேயே அவற்றை தூக்கி எீசுவதற்காக போராடுகின்றன. ஏகாதிபத்தியத்தை அதன் மையத்திலேயே தூக்கி வீசு போராடாமலும், ஏகாதிபத்திய நாடுகளிலுள்ள தொழிலாள வர்க்கத்தை, அரைக் காலனித் துவ நாடுகளிலுள்ள தொழிலாள வர்க்கத்துடனும் ஒடுக்கப்படும் மக்களுட னும் ஐக்கியப்படுத்த போராடாமலும் வளர்ச்சியடைந்த நாடுகளிலும் சரி அல்லது ஏனைய நாடுகளிலும் சரி தொழிலாள வர்க்கத்தின் விடுதலையை அடைய முடியாது. இதனால்தான் நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவினால் கடந்த நவம்பர் மாதத்தில் பெர்லினில் ஏற்பாடு செய்யப்பட்ட உலகத் தொழிலாளர் மாநாட்டில் சோசலிசத் தொழிலாளர் கழகம் செயலூக்கத்துடன் பங்கு கொண்டது. இந்த சர்வதேச மாநாட்டின் அறிக்கை தமிழ், இந்தி, வங்காளம், சிங்களம் உள்ளடங்கலாக 22 மொழி களில் மொழி பெயர்க்கப்பட்டு உலக முழுவதும் விநியோகிக்கப்பட்டது.

## ஆட்சிக்கான பாதை

பொருளாதாரத்தில் மக்கட்தொகையில் பெரும்பான்மையினராக இருக்கும் நகர மற்றும் நாட்டுப்புற ஏழை மக்களுடன் கூடவே பாட்டாளி வர்க்கம் முக்கியமான அம்சங்களை வகிக்கிறது. ஆனால் தற்போதைய பாராளுமன்ற ஜனநாயகம் என்றழைக்கப்படுவது முதலாளித்துவ பண மூட்டைகள், அவர்களின் பத்திரிகைகள் குண்டர்கள், அரசு இயந்திரம் இவற்றுக்கு சாதகமாக முழுமையாக ஒத்துப் போகிறது. பாட்டாளிவர்க் கமோ அல்லது ஒடுக்கப்படும் மக்களோ அவற்றின் விடுதலைக்கான கருவியாக அதனைப் பயன்படுத்த அனுமதிக்க மாட்டாது. பாராளுமன்றம் உண்மையில் முதலாளித்துவ அரசு இயந்திரத்தின் ஒரு பகுதியாகும். அந்த இயந்திரம் ஆயுதம் தரித்த மனிதர்களைக் கொண்டது. அதனை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து 1947ல் இந்திய முதலாளித்துவம் பெற்றுக் கொண்டது. இந்த அரசு இயந்திரத்தை தகர்க்காம லும், அதன் சொந்த ஆட்சி அதிகாரத்துக்கான கருவிகளை -சோவியத்துக்களை (தொழிலாளர் சபைகளை) அடிப்படையாகக் கொண்ட அரசு இயந்திரத்தை அணிதிரட்டாமலும் பாட்டாளி வர்க்கம் விடுதலை பெற முடியாது. போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கிலே வேலைத் தளங்கள், ஆலைகள் இவற்றிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை கொண்ட சோவியத்துகள், நகர மற்றும் நாட்டுப்புற ஏழைகளையும் அதனுள் சேர்த்துக் கொள்ளும்; அவர்களது நலன்களை நிஜமாகவே பிரதிநிதித்துவம் செய்யும். சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் பணி தொழிலாள வர்க்கத்தின் முன்னேறிய பகுதியினருக்கு கல்வி ஊட்டுவதாகும், அதன் மூலம் சமயம் வரும்போது அவர்கள் பாட்டாளி வர்க்கத்தின் பெரும்பான்மையினருக்கும் அதே போல ஒடுக்கப்படும் மக்களின் இதர பிரிவினருக்கும் புரட்சிகர தலைமையை வழங்குவார்கள். இவ்வாறாக தொழிலாள வர்க்கத்துக்கு புரட்சிகர கல்வியூட்டலை, பயங்கரவாதம் போன்ற குட்டி முதலாளித்துவ முறைகளினால் பிரதியீடு செய்யும் அனைத்து முயற்சிகளையும் சோசலிசத் தொழிலாளர் கழகம் எதிர்க்கிறது.

புரட்சிகர நிலைமைகளை செயற்கையாக உருவாக்க முடியாது. அவை, உலக முதலாளித்துவ நெருக்கடியினால் ஆளும் வர்க்கத்தின் திவால் நிலைமை யானது லட்சக்கணக்கான ஒடுக்கப்படும் மக்களை பரந்தளவில் புரட்சிகர போராட்டப் பாதையில் தள்ளும்போது உருவாக்கப்படுகின்றன.

★ 11 ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com



# அரசின் அச்சுறுத்தலுக்கும் ஜோடிப்புகளுக்கும் ....

## முதலாளித்துவ நெருக்கடி

இன்று ஆளும் வர்க்கம் மக்களின் வாழ்க்கைத் தரங்களின்மீது தொடுக்கும் தாக்குதல்கள் முதலாளித்துவத்தின் உலக நெருக்கடியின் விளைவாகும், உலக முதலாளித்துவ அமைப்பு வரிசைக் கிரமமாக நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பா முதலிய ஏகாதிபத்திய சக்திகளை மோதலுக்குள் தள்ளி மூன்றும் உலக யுத்த அபாயத்தை தோற்றுவித்துள்ளது. அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் ஏற்கனவே பல கோடிப் பேர் வேலையற்றிருக்கின்றனர். ஜப்பானிய நிறுவனங்கள் இழப்புகள் பற்றி ஏற்கனவே அறிவிக்கத் தொடங்கியுள்ளன. மன்மோகன்சிங் புதிய பட்ஜெட்டை சமர்ப்பிக்கும் பொழுது அவர் முன்வைக்கும் கோரமான தாக்குதல்கள் கோடிக்கணக்கானோரை சாவுக்கு தள்ளும் என்பதும். இது இந்திய முதலாளித்துவத்திற்கு ஒரு குறுகிய கால அவகாசத்தையே வழங்கும் என்பதும் அவருக்கு தெரியும். இந்திய முதலாளித்துவம் ஒரு ஓட்டைப் பானையாகும். நெருக்கடியின் உண்மையான வேர்கள் இங்கே தான்இருக்கின்றன. அதாவது தொழில் நுட்பத்திலேற்பட்ட பிரமாண்டமான வளர்ச்சியும், அதன் விளைவாக பூகோள மயப்படுத்தப்பட்ட உற்பத்தியும், தேசிய அரசு அமைப்பை முழுமையாக காலாவதியாக்கி உள்ளது; அத்துடன் உற்பத்தி சாதனங்களின் தனி உடமையை மனித நாகரிகத்தின் மீதான மரணப்பிடியாக மாற்றியுள்ளது.

## சந்தர்ப்பவாத அதிகாரத்துவங்களின் வீழ்ச்சி

இருபதாம் நூற்றுண்டின் மகத்தான மார்க்ஸிஸ்டுகளாகிய லெனின், லக்சம்பர்க், டிராட்ஸ்கி முதலிய'வர்கள் ஏகாதிபத்திய அமைப்பு, உற்பத்தி சாதனங்களின் வளர்ச்சியில் ஒரு விலங்காக மாறி விட்டதென்றும், மனித இனம் யுத்தங்களும் புரட்சிகளும் நிறைந்த சகாப்தத்தினுள் நுழைந்து விட்டதென்றும் இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் சுட்டிக் காட்டினுர்கள். கோடிக்கணக்கான மனித உயிர்களை பலி கொடுத்து முதலாளித்துவம் இன்று வரையில் பிழைத்திருக்குமாயின் அது சமூக ஜனநாயகவாத, ஸ்டாலினிச அதிகாரத்துவங்களின் காட்டிக் கொடுப்பினுல் மட்டும்தான். அவற்றின் தோற்றம் காலனித்துவ கொள்ளையின் அடிப்படையில் ஏகாதிபத்தியம் அதிக லாபத்தை பெற்றதிலுள்ளது.

இதுவரையில் முதலாளித்துவத்தின் உலக நெருக்கடியின் காணக் கூடியதாகவும் முக்கியமான 'அறிகுறியாகவும், மிகவும் இருப்பது தேசிய சீர்திருத்தவாத அதிகாரத்துவங்களின் வீழ்ச்சியாகும். அவை மேற்குறிப்பிட்டவாறு தொழிலாள வர்க்கத்தை கட்டுப்படுத்தி ஏகாதிபத்தியத்தை காப்பாற்றின. இது சோவியத் யூனியனிலும், கிழக்கு ஐரோப்பாவிலும் ஸ்டாலினிச அதிகாரத்துவங்களின் வீழ்ச்சியினுல் மட்டுமின்றி, அமெரிக்காவிலுள்ள ஏ.எப்.எல்-சிஐஓ போன்ற தொழிற்சங்க அதிகாரத்துவங்களின் நெருக்கடியினுலும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. உலகம் முழுவதுமே அதிகாரத்துவங்களுக்கு எதிராக பரந்த இயக்கங்கள் கட்டப்பட்டு வருகின்றன. 1982-83 பம்பாய் பஞ்சாலை தொழிலாளர்களின் நினைவு கூரக்கூடிய போராட்டமானது இந்நாட்டிலும் அதிகாரத்துவத்திற்கு எதிராக தொழிலாளவர்க்கம் கிளர்ந்தெழுவதை எடுத்துக் காட்டியது. இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவில் பாப்லோவாத திருத்தல்வாதிகள் (அவர்கள் இன்று ஏர்னஸ்ட் மண்டலினுலும், இந்தியாவில் இன்குலாப் கம்யூனிஸ்ட் சங்கதனுலும் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றனர்.)காட்டிக் கொடுப்புகளினுலேயே பம்பாயில் தத்தா சமந்த் போன்ற சந்தர்ப்பவாத சாகஸவாதிகளும் அல்லது தலி-ராஜகராவில் குகாநயோகி, சென்னையில் குசேவர் போன்றவர்களும் இந்த தொழிலாளவர்க்க கிளர்ச்சியை ஒரு முட்டுச் சந்துக்குள் வழிநடத்திச் சென்றனர். பப்லோவாதத்தினுல் போல்ஷேவிக் லெனினிஸ்ட் கட்சி அழிக்கப்படாதிருக்குமாயின், அதிகாரத்துவங்களுக்கு எதிராக தொழிலாளவர்க்கம் கிளர்ந்தெழும்போது அதற்கு தலைமை வழங்குவதற்கு இந்தியாவில் ஒரு ப்புரட்சிகர கட்சி இருந்திருக்கும்.

ஆனுல் இன்று ஏகாதிபத்திய அமைப்புக்கு ஏற்பட்டிருக்கும் நீடித்த நெருக்கடியை கொண்ட புதிய காலப்பகுதி நான்காம் அகிலத்தை கட்டுவதற்கான புதிய சந்தர்ப்பங்களை வழங்குகிறது. கடந்த நவம்பரில் பெர்லினில் நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவினுல் ஏற்பாடு செய்யப்பட்ட உலகத் தொழிலாளர் மாநாடு இதைத்தான் எடுத்துக் காட்டியது. இன்று, சமூக ஜனநாயகம் ஸ்டாலினிசம், பப்லோவாதம் இவற்றிற்கு எதிரான போராட்டத்தில், டிராட்ஸ்கிஸ்டுகளினுல் பாதுகாக்கப்பட்ட அதன் மாசற்ற பதாகையின் பின்னுல் அணிதிரளும்படி சர்வதேச தொழிலாள வர்க்கத்துக்கு நான்காம் அகிலம் உற்சாகத்துடன் அழைப்பு விடுக்கிறது. இதுவே ஏகாதிபத்தியத்திற்கு எதிரான வெற்றிக்கு உத்தரவாகும்; இதுவே முதலாளித்துவத்திற்கு எதிரான வெற்றிக்கு உத்தரவாதமாகும்.

## அரசின் தொடர்ச்சியான தொந்தரவுகள்

இதன் காரணமாகத்தான் ஆளும் வர்க்கமும் சோசலிசத் தொழிலாளர் கழகத்துக்கு எதிராக ஜோடிப்பை தயார் செய்கிறது. அவர்கள் நான்காம் அகிலத்தின் சொந்த அரசியலில் அதனை எதிர்கொள்ள அஞ்சுகின்றனர். இவ்வாறான அவர்களது கோழைத்தனமான முயற்சிகளுக்கு எதிரான நமது பதில் தொழிலாள வர்க்கத்தின் முன்னே நமது உண்மையான அரசியலை முன்வைப்பதாகும். நம்மை பாதுகாக்கும்படி தொழிலாள வர்க்கத்துக்கு நாம் அழைப்பு விடுகிறோம்.

[illegible] சிபிஐ போலீசான சக்திதரனின் அச்சுறுத்தல் ஒரு தனித்த நடவடிக்கை அல்ல. அது தொடர்ச்சியான தாக்குதல்களின் மத்தியில் வந்துள்ளது. ஏப்ரல் 23, 1991ல் சென்னை தேவநேய பாவாணர் நூலக(LLA) கட்டிடத்தில் சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் உறுப்பினர் எஸ். ராம், 'இலங்கையில் நாட்டுப்புற படுகொலைகளும்-இனவாத யுத்தமும்-பின்னணியும் தீர்வும்' என்ற தலைப்பில் ஒரு பகிரங்க சொற்பொழிவு நிகழ்த்தியபின், சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் மீதான முதலாளித்துவ அரசின் அச்சுறுத்தலும் தொந்தரவும் உக்கிரமடைந்தது. இச்சொற்பொழிவு நடந்து 2 நாட்களுக்கு பின்னர் இன்ஸ்பெக்டர் ஜெனரல் அலுவலகத்திலிருந்து குருசாமி என்று அவரை அடையாளம் காட்டிக் கொண்ட ஒரு அதிகாரி' சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் அலுவலகத்திற்கு விஜயம் செய்தார். தோழர் ராம் பற்றி கேள்விகள் எழுப்பி அவரை விசாரணை செய்ய வேண்டுமென்று கூறினுர். ராம் தனது தனிப்பட்ட வாழ்க்கை பற்றியும், சோசலிசத் நொழிலாளர் கழகத்தின் உள்விவகாரங்கள் சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்க மறுத்தார். இச்சம்பவத்திற்கு பின்னர் ஐஜிபி அலுவலகத்திற்கு ஒரு எதிர்ப்புக் கடிதத்தை அனுப்பியதுடன், சோசலிசத் தொழிலாளர் கழக உறுப்பினர்களின் ஜனநாயக மற்றும் குடியியல் உரிமைகளை பிடுங்கவும் சட்ட விரோதமாக அச்சுறுத்தல், விசாரணை செய்யவும் எடுக்கும் நடவடிக்கைகளை—தொழிற்சங்கங்களும் தொழிலாளர் இயக்கங்களும் எதிர்க்கும்படி அழைப்பு விடுத்தது. ஐஜிபி அலுவலகத்திற்கு சோசலிசத் தொழிலாளர் கழகம் அனுப்பிய கடிதம் சோ.தொ. கழகத்தின் மாதப்பத்திரிகையான தொழிலாளர் பாதையின் ஜூன் 1991 இதழில் வெளியிடப்பட்டது.

மே 13, 1992ல் போலீஸ் அதிகாரி குருசாமி சோ.தொ.க. வின் மற்றொரு உறுப்பினரும், பிஅண்ட்சி தொழிலாளியும், 1991 பாராளுமன்ற தேர்தலின் போது வடசென்னை பாராளுமன்ற தொகுதியில் சோ.தொ. கழக வேட்பாளராகவும் போட்டியிட்ட பி. மோசஸின் வீட்டுக்கு சென்று அவரைப் பற்றி விசாரித்தார்.

மே 16, 1991-ல் அண்ணுநகர் மேற்கு விசேஷ பிரிவைச் சேர்ந்த போலீஸ் கான்ஸ்டபிள் சிவலிங்கம் (பி.சி, 2179) கட்சியின் முன்னணி உறுப்பினரும், ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிலாளியும், 1988 தேர்தலில் வடசென்னைப் பாராளுமன்ற தொகுதியிலும், 1991 தேர்தலில் வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதியிலும் கட்சியின் வேட்பாளராக போட்டியிட்ட எம். கைலாசத்தின் வீட்டுக்குச் சென்று விசாரித்தார். 1990ஆம் ஆண்டு பி&சியின் காட்டிக் கொடுப்பாளன் வரதராஜனின் வாயிற் கூட்டத்தில், அவரது ஸ்டாலினிச குண்டர்களால் தாக்கப்பட்ட ராம்மீது, அதற்குடந்தையாக போலீசும் சேர்ந்து பொய்வழக்குப் போட்ட செய்தி தொழிலாள வர்க்கம் ஏற்கனவே அறிந்த ஒன்றுகும்.

அக்டோபர் 28, 1991ல் உலகத் தொழிலாளர் மாநாட்டிற்கான முன்னேடி மாநாடு சென்னையில் சோசலிசத் தொழிலாளர் கழகத்தினுல் ஏற்பாடு செய்யப்பட்டது, அம்மாநாட்டிற்கு புலனுய்வுப் பிரிவைச் சேர்ந்த இருவர். தம்மை தொழிலாளர்கள் என்று கூறியபடி உள்ளே வர முயன்றனர். அவர்கள் சோசலிசத் தொழிலாளர் கழக உறுப்பினர்களால் தடுக்கப்பட்டு, கேள்விகளுக்கு உட்படுத்தப்பட்ட போது, இறுதியில் அவ்விருவரும் புலனுய்வு போலீஸ் பிரிவு அடையாள அட்டையை காண்பித்தனர். அப்பொழுது சோசலிசத் தொழிலாளர் கழக உறுப்பினர்கள் முன்னேடி மாநாடு நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் அறிக்கையுடன் உடன்பட்டவர்களுக்கு மட்டும்தான் என்றுகூறி அவ்விருவரையும் மாநாட்டு மண்டபத்தினுள் நுழைய விடாது திருப்பி அனுப்பினுர்கள். அந்த இரு போலீஸ் அதிகாரிகளும் மறுபடி மாநாடு முடிவடைந்த பின்னர் அங்கே வந்து மாநாட்டு உரையின் உள்ளடக்கங்கள் பற்றியும், குறிப்பாக பன்னுட்டு நிதியம் பற்றி பேசப்பட்டதா? என்றும் பெர்லின் உலகத் தொழிலாளர் மாநாட்டுக்கு தோழர் மோசஸ் போகின்றாரா? என்றும், இம்மாநாட்டுக்கு சர்வதேச தலைவர்கள் வந்தார்களா? என்றும் கேள்விகளை எழுப்பினுர் கள்,

பெப்ரவரி 7, 1992ல் சிபிஐச் சேர்ந்த சக்திதரன் சோசலிசத் தொழிலாளர் கழக 'அலுவலகத்திற்கு வந்து கட்சி உள்விவகாரம் பற்றி கேள்விகளை குரூரமாக எழுப்பினுர். அப்பொழுது அலுவலகத்திலிருந்த கட்சி உறுப்பினர்கள், அனுமதிக்க முடியாதவகையில் அக்கேள்விகள் கட்சியின் ஜனநாயக உரிமைகளில் தலையிடு செய்வதை சுட்டிக்காட்டி, பதிலளிக்க உறுதியாக மறுத்தனர்.

இப்படியான போலீஸ் தாக்குதல்கள், சோசலிசத் தொழிலாளர் கழகத்துக்கு தேர்தல்களுக்காக வழங்கப்பட்ட தற்காலிகமான 'பதிவு செய்யப்பட்ட கட்சி என்ற அங்கிகாரமும் வாபஸ் வாங்கப்பட்டதுடன் சேர்ந்து நடைபெறுகிறது. இது பற்றி பெப்ரவரி 6, 1992ல் உதவி தேர்தல் ஆணையாளர் டி.எஸ்.பாகா, சோ.தொ. கழகத்துக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது. இதற்கு கொடுக்கப்பட்ட காரணம் சோசலிசத் தொழிலாளர் கழகம் பற்றி ஏன் முதலாளித்துவம் அச்சமடைகிறது என்பதை தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது. அக்கடிதம் குறிப்பிட்டதாவது: கட்சியின் அரசியலமைப்பு பற்றி பகுத்தறிந்து பார்க்கையில் அரசியலமைப்பிலுள்ள பின்வரும் ஷரத்துகள் 1951, மக்கள் பிரதிநிதித்துவ 29A (5) பிரிவின் உணர்வுடன் உடன்பாடற்றதாகவும் எதிரானதாகவும் இருக்கிறது:

"(b) (2) உலக சோசலிசக் குடியரசின் பகுதியாக இந்திய துணைக் கண்டத்தில் சோவியத் சோசலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தை ஸ்தாபித்தல்.

"(c) 1947 பிரிவினையை ஒழித்தல்'

............இதன் காரணமாக சோசலிசத் தொழிலாள கழகத்தின் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் இத்துடன் கட்சிக்கு வழங்கப்பட்டு வந்த இடைக்கால பதிவு நிலையும் நிராகரிக்கப்படுகிறது.'

மேற்குறிப்பிட்ட அரசியல் அடிப்படையில் சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதற்கும் சோசலிசத் தொழிலாளர் கழகத்துக்கு எதிரான போலீஸ் அச்சுறுத்தல், தொந்தரவுகளுக்கு இடையிலான தொடர்பு பற்றியும் எந்தவொரு வர்க்க நனவுள்ள தொழிலாளியும் புரிந்து கொள்வார்.

அரசின் தாக்குதல்களுக்கு எதிராக அனைத்து வேலைகளையும், தரமான வாழ்க்கைத் தரங்களையும், அடிப்படை ஜனநாயக, தொழிற்சங்க உரிமைகளை சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் பாதுகாக்கவும் சோசலிசத் தொழிலாளர் கழகம் போராடி வருகிறது. இந்திய ஆளும் வர்க்கத்தின் முழுமையான பலவீனமும் அதன் விளைவாக சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் புரட்சிகர முன்னேக்குகள் பற்றிய அதன் மரணபீதியும் தான் சோ.தொ.கழகத்தை தாக்கவும், அதன் ஜனநாயக உரிமைகளை பிடுங்கவும் அதனை உந்துகிறது. ஏகாதிபத்தியத்தின் கட்டளைகளின்படி தொழிலாள வர்க்கத்தின் மீது தொடுக்கப்படும் தாக்குதலுக்கு எதிராக வளர்ந்துவரும் தொழிலாளவர்க்கத்தின் ஒடுக்கப்படும் மக்களின் எதிர்ப்பை நசுக்கவும், வாயடைக்கவும் அரசாங்கம் தடா, எஸ்மா, என்.எஸ்.ஏ. முதலிய குரூரமான சட்டங்களை கொண்டு வந்துள்ளது. இந்தத் தாக்குதலின் ஒரு பகுதி தான் சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் மீதான தாக்குதலாகும்.

சோசலிசத் தொழிலாளர் கழகத்தை பாதுகாக்க முன்வரும்படி தொழிலாள வர்க்கத்தையும் அனைத்து ஒடுக்கப்படும் மக்களையும் அது அழைக்கிறது. அதற்காக ஆயிரக்கணக்கில் கட்சியில் வந்து சேரும்படியும் சோ.தொ.கவை தொழிலாள வர்க்கத்தின் பரந்த புரட்சிக் கட்சியாக மாற்ற முன்வரும்படியும் அழைக்கிறது.

ஃ அரசின் தாக்குதலுக்கு எதிராக, சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் அடிப்படை ஜனநாயக உரிமைகளை பாதுகாக்க தொழிலாள வர்க்கத்தின் பெயரில் பேசும் அனைத்து இயக்கங்களை- அவற்றிற்கு சோ.தொ. கழகத்துடன் அரசியல் வேறுபாடுகள் இருந்தபொழுதிலும் முன் வாருங்கள், மனுவில் கையெழுத்திடுங்கள் என்று அழைக்கிறது.

இது சம்பந்தமாக தொழிற்சங்கங்கள் போன்ற அமைப்புகளில் தீர்மானங்களை நிறைவேற்றுங்கள்.

ஃ அரசின் தாக்குதல்களுக்கு எதிராக சோ.தொ. கழகத்தை பாதுகாப்பது சம்பந்தமாக சோ.தொ.கழக பத்திரிகையான 'தொழிலாளர் பாதைக்கு'தொழிலாள வர்க்கத்தின் பெயரில் பேசும் அனைத்து இயக்கங்களும் அறிக்கைகளை வழங்குங்கள்.

(20ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

19 ம் பக்கத் தொடர்ச்சி

சோ.தொ. கழகத்துடன் பேர் போன அரசியல் வேறுபாடுகள் இருந்த பொழுதிலும் தொழிலாள வர்க்க இயக்கம் என்ற வகையில் அதன் கருத்துக்களை பிரச்சாரம் செய்யும் அதன் அடிப்படை' உரிமையை பாதுகாக்க முன் வரும்படி அழைக்கிறது.

இது சம்பந்தமான தீர்மானங்களை நிறைவேற்றி அவற்றை பிரதமர், முதலமைச்சர், ஐஜிபி, சிபிஐ (CBI) அலுவலகங்களுக்கு அனுப்புங்கள்.

தொழிலாளர் அமைப்புகளின் பிரதிநிதிகளை பாராளுமன்றத்திலும் மேல் சபையிலும் இப்பிரச்சினையை எழுப்பும்படியும் சோ.தொ.கவை பாதுகாக்கும் தீர்மானங்களை திறைவேற்றும்படியும் தொழிலாளர்கள் நிர்ப்பந்திக்க வேண்டும்.

ஃ நரசிம்மராவ் அரசாங்கத்தின் தாக்குதல்களுக்கு எதிராக தொழிலாள வர்க்கத்தை அணிதிரட்ட சோ.தொ.கழகம் அழைப்புவிடும் அனைத்திந்திய தொழிலாளர் மாநாட்டிற்கு வாருங்கள்!

தொழிலாளர்களை, பின்வரும் வேலைத்திட்டத்தை முன்வைத்துப்போராடு மாறு சோசலிசத் தொழிலாளர் கழகம் அழைக்கின்றது.

### தொழிலாளர் மாநாட்டின் முழக்கங்கள்!

- ஃ ஏகாதிபத்தியத்தையும், காலனித்துவத்தையும் எதிர்
- ஃ ஈராக், லிபியாவுக்கு எதிரான ஏகாதிபத்திய யுத்த அச்சுறுத்தலை தோற்கடி!
- ஃ இந்துப் பெருங்கடலில் நடத்தவிருக்கும் அமெரிக்க-இந்திய கூட்டு கடற்போர் ஒத்திகையை எதிர்!
- ஃ உலகத் தொழிலாளர்களுடன் ஒன்றுபடு!
- ஃ பரந்தளவிலான வேலை அழிப்புகளை எதிர்!
- ஃ அனைத்து வேலைகளையும் பாதுகாக்கப் போராடு!
- ஃ ஆட்குறைப்பு, தனியார் மயமாக்கல்; ஆலைமூடல் அச்சுறுத்தல்களை தோற்கடிக்க ஆலைகளை உள்ளிருப்பு செய்!
- ஃ அனைத்து ஆலைகளையும், வங்கிகளையும் நஷ்ட ஈடின்றி தொழிலாளர் ஆதிக்கத்தின்கீழ் கொண்டு வா!
- ஃ தடா, எஸ்மா, என்.எஸ்.ஏ மற்றும் அனைத்து தொழிலாளர் விரோத சட்டங்களையும் தோற்கடி!
- ஃ சோவியத்துகளை (தொழிலாளர் சபைகளை) கட்டு!
- ஃ வர்க்கப் போர் போராளிகளை பாதுகாக்கப் போராடு!
- ஃ அரசியல் கைதிகளை விடுதலை செய்!
- ஃ பஞ்சாப், காஷ்மீர், அஸாம் மற்றும் வடகிழக்கு மாநிலங்களிலிருந்து இந்திய ஒடுக்குமுறை இராணுவத்தை வாபஸ் வாங்கு!
- ஃ தமிழீழ அரசியல் அகதிகளை நிர்ப்பந்தமாக நாடு கடத்துவதை நிறுத்து!
- ஃ தொழிலாளர்-ஏழை விவசாயிகளின் புரட்சிகர கூட்டை ஏற்படுத்து!
- ஃ காங்கிரஸ் ஆட்சியை வெளியேற்று!
- ஃ சோசலிச, புரட்சிகர ஜனநாயக கொள்கைகளை அமல்படுத்தும் தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கம் அமைக்கப் போராடு!
- ஃ உலக சோசலிச புரட்சியின் பகுதியாக இந்திய துணைக்கண்டத்தில் சோவியத் சோசலிச குடியரசுகளின் ஒன்றியத்தை அமைக்கப் போராடு!
- ஃ தொழிலாளர் இயக்கத்திலிருந்து ஸ்டாலினிச சிபிஐ (எம்), சிபிஐ மற்றும் சீர்திருந்தவாத துரோகத் தலைமைகளை வெளியேற்று!
- ஃ நான்காம் அகிலத்துடன் ஐக்கியம் கொண்ட சோசலிசத் தொழிலாளர் கழகத்தை கட்டு!

## இலங்கையில்...

2 ம் பக்கத் தொடர்ச்சி

நீதிமன்றச் சட்டத்திற்குமுன் கொண்டுவா, சட்டத்தின்படி குற்றம் சுமத்தும் எஞ்சியோரை விடுவி'' என்பதாகும். ஒரு அமைப்பின் வர்க்கத் தன்மை அது கொண்டிருக்கும் சர்வதேசக் கூட்டுக்களால் எப்போதும் வெளிப்படுத்தப் படுகிறது. ந.ச.ச.கட்சி மிகச் சீரழிந்த பப்லோவாதப் போக்கின் ஒரு பகுதியான பிரிட்டனில் உள்ள மிலிட்டண்ட் குழுவுடன் சரியான படி இணைத்துக் கொண்டிருந்தது. மிலிட்டண்டுக்குள் எழுந்த உள்நெருக்கடியாலும் சிர்குலைவாலும், ந.ச.ச. கட்சி மெண்டெலுடனும் அவரது அமெரிக்க ஆதரவாளரான சோசலிஸ்டு ஆக்ஷன் குழுவுடனும் புதிய சர்வதேச இணைப்பைக் கண்டுபிடித்துக் கொண்டது. இந்தக் குழுதான் அண்மையில் ந.ச.ச கட்சியின் மாநாட்டிற்கு வாழ்த்துக்களை அனுப்பியது.

### அரசுடனான கூட்டு

ந.ச.ச. கட்சியுடனான மெண்டெலின் கூட்டானது சிறிலங்கா அரசுடனான கூட்டாகும். ந.ச.ச. கட்சித் தலைவர்கள் ந ச.ச.க.வுக்கும்சிங்கள இனவாத SLFP, யு.என்.பி. ஆகிய முதலாளித்துவ அரசின் இரண்டு பிரதான கட்சிகளுக்கும் இடையிலான கோட்டை வேண்டுமென்றே மங்கலாக்கினர். உள்ளூராட்சித் தேர்தல்களின் மனுதாக்கல் நிகழ்ச்சியின்போது, கருணாரத்ன தனது கட்சிக் கிளைகளுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடுவதாவது: SLFP மட்டுமல்லாமல் யு.என்.பி. வேட்பாளர் பட்டியலிலும் கூட நல்ல தலைவர்கள் இருக்கின்றனர். அவர்களைப் பார்த்து நமது சொந்த வேட்பாளர்களாகவும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்'' (கடிதம் 1991, மார்ச் 19ல் வழங்கப்பட்டது) ந.ச.ச. கட்சியால் தேர்தல் வேட்பாளர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்ட இந்த சக்திகளில், தமிழர் வீடுகளைத் தாக்கிய கும்பல்களை அணிதிரட்டிய பிரபல சிங்கள இனவாதிகளும் உள்ளடங்குவர். சில வற்றில் தமிழ்மக்கள் படுகொலையில் நேரடியாகவும் கூட அவர்கள் பங்கெடுத்தநும் உண்டு.

ந.ச.ச. கட்சியின் மாநாட்டைப்பற்றி செய்தி வெளியிட்ட இன்டர் நேஷனல் வியூபாய்ன்ட், கட்சியின் தலைமையில் உள்ள இரண்டு உறுப்பினர்களுடனான நேர்முகப் பேட்டியையும் தாங்கி வந்தது. அவர்களுள் ஒருவர் கத்தோலிக்க மதகுரு லைனஸ் ஜயதிலைஸ்லே. மற்றொருவர் பெட்டிகம சமிதா என்ற புத்த பிக்குமாவார். அவர் அரசியலில் ஈடுபடத் தொடங்கியது எப்படி என்று கேட்டதற்கு ''அது கிறிஸ்துவ சமயத்தின்'' வேதாந்த அல்லது ஆன்மீக பகுதியுடன் தொடங்கியது'' என்று விளக்கிய ஜயதிலைஸ்லே மேலும்'' பல மார்க்சிஸ்டுகளுக்கு புரிந்து கொள்வது கஷ்டமாகத்தானிருக்கும்'' என்றும் கூறினர்.

அவர் மேலும் கூறினர்: பௌத்தம் கிறிஸ்தவத்தை விட தர்க்க ரீதியாக அதன் அடிப்படையைக் கொண்டிருக்கிறது. ஆகையால் மார்க்சிச சிந்தனையை நோக்கிய அபிவிருத்திக்கு அது நேரடியான அடித்தளத்தைக் கொண்டிருக்கிறது. பிரச்சினை என்னவென்றால் அதனுடைய தர்க்கவியல் இன்னும் இயங்கியல் ரீதியான தர்க்கவியல் அல்ல. அதனால்தான் மார்க்சிசம் தேவைப்படுகிறது'' மார்க்சிசத்தையும் மதத்தையும் இவ்வாறாக கலப்பது ஸ்டாலினிசத்தின் வெளியீடுகளில் மட்டும் ஒரு சமயம் காணப்பட்டது. இன்டர்நேஷனல் வியூபாய்ன்ட் பின்வருமாறு குறிப்பிட்டது: சோசலிசத்திற்காக அணிதிரளும் மதநம்பிக்கை கொண்ட அநேக மக்களைக் கொண்ட நாடு சிறிலங்கா என்றது.

நவம்பரில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழு ஏகாதிபத்தியப் போருக்கும் காலனித்துவத்துக்கும் எதிரான தொழிலாளர்களின் உலக மாநாட்டில் பின்வருமாறு எச்சரித்தது: ''மெண்டெலின் ஐக்கிய செயலாளர் குழுமம் உலக ஏகாதிபத்தியத்திற்காக பலமான சேவையைச் செய்கிறது. அதனுடைய சிறப்பானபணியானது, ஏகாதிபத்தியத்தின் பழைய பொம்மை ஆட்சியாளர்கள் முழுமையாக சின்னபின்னமாகி விட்டநிலையில் அனைத்துலகக் குழுவின் டிராட்ஸ்கிஸ்டுகளுக்கு எதிராகவும் அவர்கள் போராடும் சோசலிச சர்வதேசியத்திற்கு எதிராகக் குட்டி முதலாளித்துவ தீவிரவாதிகளின் பிரிவை அணிதிரட்ட, ஏகாதிபத்தியம் தனது ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்ள —புதிய அரசியல் பொறி முறையாக இணைந்து வேலை செய்வதாகும்''.

இப்பொழுது சிறிலங்காவில் மெண்டெல், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் புரட்சிகர சர்வதேசியப் போராட்டத்தை அழிப்பதற்கான முயற்சியில் புதிய சக்திகளை இணைத்துக் கொண்டிருக்கிறார். நான்காம் அகிலததின் அனைத்துலகக்குழு பிரகடனம் செய்தவாறு, மெண்டெல் ஸ்திர புத்தியில்லாத அல்லது தவறாக வழி காட்டப்பட்ட சோசலிஸ்ட் அல்ல மாறாக முதலாளித்துவ அரசியல் வாதியாவார் சோவியத் யூனியனோ, கிழக்கு ஐரோப்பாவோ அல்லது சிறிலங்காவாகவோ இருந்தாலும்சரி, தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகரத் தலையீட்டிற்கு எதிராக முதலாளித்துவ ஒழுங்கைப் பாதுகாக்கும் முதலாளித்துவ அரசியல்வாதியாவார், டிராட்ஸ்கிசத்திற்கும் மெண்டெல் மற்றும் ந.ச.ச. கட்சிக்கும் இடையிலான இடைவெளியானது, இணைக்க முடியாத வர்க்க வேறுபாட்டை கொண்டதாகும். சிறிலங்காவில் புரட்சிகரத் தலைமை நெருக்கடியைத் தீர்ப்பதற்கான போராட்டமானது ஈவிரக்கமற்ற முறையில் இந்த வகையான அரசியல் ஆத்திர மூட்டாளர்களின் முகமூடிகளைக் கிழித்தெறிவதை வேண்டி நிற்கிறது.


முதலாளித்துவத்தின் மரண ஒலமும் நான்காம் அகிலத்தின் பணிகளும்

இடைமருவு வேலைத்திட்டம்

நான்காம் அகிலத்தின் ஸ்தாபக மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

ஏகாதிபத்திய யுத்தத்தையும் காலனித்துவத்தையும் எதிர்!

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் விஞ்ஞாபனம்

ஏகாதிபத்திய யுத்தத்துக்கும் காலனித்துவத்துக்கும் எதிரான போராட்டமும்

பேர்ளின்

உலக மகாநாட்டின்

முன்நோக்கும்

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் நான்கு தலைவர்களின் உரைகளின் தொகுப்பு

ஆகஸ்ட் சதியின் பின்னர்:

சோவியத் யூனியன் எங்கே செல்கிறது?



தொடர்புகளுக்கு

Tholilalar Pathai
POSTFACH 1609
7120 BIETIGHEIM-
BISSINGEN



தொழிலாளர் பாதை

சந்தா

Tholilalar Pathai
POSTFACH 1609
7120 BIETIGHEIM-
BISSINGEN

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழுவின் இலங்கைப் பிரிவான புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தின் உத்தியோகபூர்வமான பத்திரிகை.

சிறீலங்கா தமிழ் தொழிலாளர்களை சுயாதீனமாக அணிதிரட்டி உலக சோசலிசப் புரட்சியின் ஒரு அங்கமாக சிறீலங்கா தமிழீழ ஐக்கிய சோசலிச குடியரசை நிர்மாணிப்பதற்காக எவ்வித சமரசங்களுமில்லாமல் போராடும் புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தினால் வெளியிடப்படும் தொழிலாளர் பாதை மட்டுமே தமிழ் மொழியில் பிரசுரமாகும் ஒரே ஒரு மார்க்சிசப் பத்திரிகையாகும்.

பெயர் ____

விலாசம் ____

____ ____
திகதி

புதிய சந்தா விபரம்.
12 பிரதிகள் DM 26.-